
# லயம்
# 2011



வேடிக்கை மனிதரைப் போலே வீழ்வே னென்று நினைத்தாயோ?

-பாரதி

**பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி**
**தமிழ்ச் சங்க வெளியீடு**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லயம்

## பதினோராவது இதழ்

# 2011



வேடிக்கை மனிதரைப் போலே வீழ்வேனென்று நினைத்தாயோ?
-பாரதி

**ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி**
**பத்தனை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Layam 2011

Annual Magazine of Tamil Sangam

**Sri pada National college of Education**
**Patana**

**ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி**
**பத்தனை**

# லயம்

**பதினோராவது இதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி பீடாதிபதியின் அவர்களின் வாழ்த்துரை



திரு. ஆ.சுந்தரலிங்கம்
பீடாதிபதி

நவீன தொழில்நுட்ப சாதன விருத்தியும் அதன்வழியே உலக பண்பாட்டு ரீதியான மாற்றமும் தாக்கமும் தொடர்ந்து வரும் ஒரு சூழலில் நாம் வாழ்கின்றோம். அத்தகைய சூழலை எதிர்கொண்டு அதன்வழியே இளஞ்சமுதாயத்தினருக்கு வழிகாட்ட வேண்டிய பாரிய பொறுப்பு தற்கால இளம் ஆசிரியர் கைவசம் ஆகிவிட்டது. அந்நிலையில் தற்கால உலகை விளங்கிக் கொள்ளும் அதேவேளை உலக சமுதாயத்திற்கு ஏற்ற விதத்தில் தம் சமூகத்தை மாற்றி அமைக்க வேண்டிய தேவையும் ஆசிரியருக்கு உண்டு. அந்த வகையில் "மாணவரிடத்தில் சர்வதேசம் பற்றிய விளக்கத்தை" ஏற்படுத்துவதுடன் தாமும் அது பற்றிய சிந்தனை உள்ளவராகவும் திகழல் வேண்டும். இத்தகைய பரந்த அறிவு ஆசிரியர்களை பொறுத்த வரையில் தனது சேவைக்கும், தனி மனித விருத்திக்கும், சமூக விருத்திக்கும் பெரிதும் பயனுள்ளதாகவே அமையும்.

ஆகவேதான் ஆசிரிய பயிற்சி நெறியை வழங்கும் எமது கல்வியியற் கல்லூரி வெறுமனே பாட விடயங்களுடன் பயிலுநர்களை வகுப்பறைக்குள்ளேயே முடக்கி விடாமல் வகுப்பறைக்கு வெளியே பல்வேறு புறக்கிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட வைக்கின்றது. அவ்வாறான புறக்கிருத்தி நடவடிக்கைகளில் கல்லூரியின் தமிழ்சங்கத்தால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் அளப்பரியன. மாணவரிடத்தில் காணப்படும் மொழியறிவு சார்ந்த ஆக்கத்திறனை, கலையுணர்வுகளை வெளிப்படுத்த அவர்களுக்கு பலவிதமான வாய்ப்புக்களை வழங்கி வருகின்றது. இதனால் பரந்த வாசிப்பறிவையும் எழுத்தறிவையும் அழகியல் உணர்வையும் பெற்று பயிலுநர்கள் தமக்குள் ஆளுமை மிக்கவர்களாக மாற்றம் பெறுகின்றார்கள். இதற்கு வடிகால் அமைக்கும் வழிகளாக தமிழ்ச்சங்க பல செயற்பாடுகளில் மணிமகுடமாய் திகழும் நிகழ்வாக "லயம் சஞ்சிகை" வெளியீட்டினைக் கொள்ளலாம். இதன்வழியே வருடாந்தம் பயிலுநர்களின் ஆக்கத்திறன், சிந்தனை ஆற்றல் என்பவற்றை வெளிப்படுத்த களம் அமைத்துக்கொடுக்கப்படுகின்றது.

இவ்வருடமும் பதினோராவது இதழாக வெளிவரும் லயம் சஞ்சிகை மலருக்கு வாழ்த்துரைப்பதில் பெரிதும் மனமகிழ்வு எய்துகின்றேன். இவ்வெளியீடு மற்றும் தமிழ்ச்சங்கத்தோடு ஒட்டிய ஏனைய செயற்பாடுகளுக்கு பக்கபலமாக நின்று பணிபுரியும் தமிழ்ச்சங்கத்தின் பிரதம ஆலோசகர், பொறுப்பு விரிவுரையாளர்கள், தமிழ்ச்சங்க உறுப்பினர்கள் அனைவரையும் மனதார பாராட்டுகின்றேன். மேலும் இப்பணி சிறப்புற, தொடர வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச்சங்க ஆலோசகரது வாழ்த்துரை

எளிமையான செயற்பாடுகளினூடாக ஒரு ஆசிரியன் மாணவனிடம் சுயசிந்தனை, வினைத்திறன் மிக்க கற்றல், சிதறலற்ற புலக்காட்சி, பொருத்தமான எண்ணக்கருவாக்கம், பிறழ்வற்ற நடத்தை, பொருத்தமான, ஆக்கப்பூர்வமான துலங்கல், வெளிப்பாடு போன்ற பல்வேறு விரும்பத்தக்க நடத்தைகளை உருவாக்க முடியும்.

இத்தகைய நடத்தைகள் மாணவரின் ஆக்கத்திறன் வெளிப்பாட்டிற்கும் விருத்திக்கும் வாய்ப்பாக அமையும்.

எமது கல்லூரியின் தமிழ்ச்சங்கம் வருடந்தோறும் வெளிக்கொணரும் "லயம்" சஞ்சிகை பயிலுநர்களின் ஆக்கத்திறன் வெளிப்பாட்டிற்கு களம் அமைத்து வருகின்றது.



திரு. வ.செல்வராஜா
உப பீடாதிபதி
கல்வியும் மேம்பாடும்
பிரதம ஆலோசகர்
தமிழ்ச்சங்கம்

தமது ஆக்கத்திறனை வெளிக்கொணரும் அதேவேளை நாளை தாம் சேவையாற்றவிருக்கின்ற பாடசாலை மாணவரிடத்தில் ஆக்கத்திறனை வெளிக்கொணரத்தக்க செயற்பாடுகளில் ஆசிரியப்பயிலுநர்கள் ஈடுபடல் வேண்டும் என்ற எதிர்பார்ப்பு தமிழ் சங்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

மாணவர்களின் ஆக்க, ஊக்கங்கள் பேணப்படும்போது மனித உறவுகள், இயற்கை மேம்பாடு முதலிய வாழ்வதற்கு இன்றியமையாத நலக்கூறுகள் சிதைவடையாமல் பாதுகாக்கப்படும்.

தமிழ்சங்க உறுப்பினர்கள் நெறிப்படுத்தும் விரிவுரையாளர்கள் பாராட்டுக்குரியவர்கள். "லயம்" சஞ்சிகைக்கு என் வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச்சங்க பொறுப்பு விரிவுரையாளரின் கருத்துரை



திரு. க.சிவகுமார்
தமிழ்ச்சங்க பொறுப்பு
விரிவுரையாளர்

ஆசிரியன் என்பவன் வெறுமனே கற்பிப்பவன் மாத்திரமல்லன். கற்பவன், கற்பவனுக்கு உதவுபவன், கற்க வழி சொல்பவன் என பல நிலைகளில் இருந்து செயற்படுபவன், நவீன உலகில் அத்தகைய பல் பரிமாணங்களை ஆசிரியன் எய்தி விட்டான். எனின் அதற்கு ஏற்ற வகையில் தன்னை தயார் செய்ய எந்நேரமும் எப்பொழுதும் புதியனவற்றை தேடி கற்றுக்கொண்டே இருத்தல் வேண்டும். கல்வி என்பது யாது? என்பதற்கு பலரும் பலவாறு கருத்துக்களை குறிப்பிட்டுள்ளனர். எனினும் தன்னைத்தான் ஆளுமை மிக்கவனாக ஒருவனை மாற்றியமைப்பதற்கு வழிசமைக்கும் அதேவேளை தன் வாழ்வின் சுயதிருப்தியை உண்டுபண்ணும் மனப்பக்குவத்தை வளர்த்தெடுக்கவும் செயன்முறை ஆக அதனை பார்க்கும் தன்மையே பிரபல்யமானது. இவ்வாறான ஆளுமை விருத்தி, சுயதிருப்தி என்பவற்றை வளர்க்கும் செயற்பாட்டில் பாடசாலைகள் மற்றும் கல்வி நிலையங்கள் முனைப்பாக ஈடுபடல் வேண்டும். அச்செயற்பாட்டு முகவர்களாக திகழ்பவர்கள் ஆசிரியர்களே. ஆதலால் ஆசிரியர்களை அவ்வழியில் பயிற்றுவிக்கும் பாரிய பொறுப்பு கல்வியியற் கல்லூரிகளுக்கு உண்டு. அதன் வழியே அவர்களை ஈடுபடுத்தும் வழிமுறைகள் பல எமது கல்லூரி நிகழ்ச்சி நிரலில் உள்ளன. அவ்வாறான ஒரு செயன்முறையே "லயம்" சஞ்சிகை வெளியீடு ஆகும். தமிழ்ச்சங்கத்தின் வருடாந்த நிகழ்வான இச்சஞ்சிகை வெளியீடு தசாப்தம் தாண்டி புதிய தசாப்தத்தின் முதல் இதழாய் அதாவது பதினோராவது இதழாய் புதுமணம் பரப்பி மிளிர்கின்றது. கல்லூரி தனது வரலாற்றில் இரு தசாப்த கால நிறைவினை கொண்டாடும் இத்தருணத்தில் இவ்விதழை மலரவிடுவது எமக்கு பெருமகிழ்வை தருகின்றது. இவ்வருடமும் வழமைபோல் தமிழ்ச்சங்கத்தின் செயற்பாடுகளுக்கு அனுமதி தந்து ஆலோசனை நல்கிய மதிப்பிற்குரிய பீடாதிபதிக்கும், தமிழ்ச்சங்க பிரதம ஆலோசகருக்கும் எமது செயற்பாடுகளில் பேருதவி புரிந்த உப பீடாதிபதிகள் போட்டி நிகழ்வுகளில் மத்தியஸ்த்தம் வகித்த விரிவுரையாளர்கள் மற்றும் தமிழ்ச்சங்க பொறுப்பு விரிவுரையாளர்கள் என பலதரப்பினருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ்ச்சங்க செயற்பாடுகளில் முன்னின்று உழைக்கும் தலைவர், செயலாளர் உள்ளிட்ட செயற்குழு உறுப்பினர்களுக்கும் ஆக்கங்களை தந்துதவிய மற்றும் சங்க செயற்பாடுகளில் தம்மை ஈடுப்படுத்திக்கொண்ட ஆசிரிய பயிலுநர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச்சங்க பொறுப்பு விரிவுரையாளரின் கருத்துரை

எமது கல்லூரியின் தமிழ்ச்சங்கத்தின் முகவரியாக ஆண்டு தோறும் வெளியிடப்படும் "லயம்" சஞ்சிகைக்கு வாழ்த்துரை எழுதுவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

உலகம் இன்று சமகால அறிவுப் புலங்களை நோக்கி ஆற்றல்களை உள்வாங்கி எல்லாத்துறைகளிலும் வளர்ச்சி அடைந்து வருகின்றது. இதனால் எமது தாய்மொழி தமிழ்மொழி நவீனத்துவம் நோக்கிய நடையில் வீச்சுப்பெற்றுள்ளது. இவ்வீச்சானது கல்வி புலத்திலிருந்தே ஆரம்பிக்கின்றது.

தற்போது மொழியைப் பயன்படுத்தி வாசகரை கவர்ந்திடும் பக்கங்கள், ஒவ்வொரு மனிதனின் இதயத்திலும் உறங்கிக் கிடக்கும் உயர்ந்த நோக்கத்திற்கும், ஏக்கத்திற்கும் அழைப்பு விடுக்கின்றன. இத்தகைய அழைப்புகளின் பதிவுகளே இச்சஞ்சிகையில் பேசப்படுகின்றது.



திரு. வா.கணேஷ்வரன்
தமிழ்ச் சங்க
பொறுப்பு விரிவுரையாளர்

சம காலத்தில் கல்வி உலகிலும் இலக்கிய உலகிலும் ஆசிரியரின் படைப்புகள் மிகவும் விருப்பப்படுவதுண்டு. இதன் ஆரம்ப தளமே எமது கல்லூரி ஆசிரியப் பயிலுநரின் இவ் எண்ணச் சிதறல்கள், இவை எழுத்துக்கள் அல்ல. நாளைய சமூக விடுதலைக்காக, சமூக மாற்றத்திற்கான உணர்வின் உதிரங்கள். இவை..... மண்ணுலகத்தில் தூய மனதுடைய குழந்தைகளின் குமுறல்கள் இவை... வாழ்ந்த காலத்தின் பின்னணி தாக்கத்தாலும் அனுபவ மன உளைச்சலாலும் எழுந்தவைகள் இவை.

எமது கல்லூரித்தாயின் உண்மை பதிவுகளாகவும், உரிமை சாட்சிகளாகவும் மிளிரும்.

இவ்வருடம் பதினோராவது சஞ்சிகையை எமது கல்லூரியின் தமிழ்ச்சங்கம் ஈன்றெடுத்து கல்லூரித்தாய் அக மகிழ்கின்றாள்.

நன்றி

வாழ்க தமிழ் . வளர்க தமிழ் பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச்சங்க பொறுப்பு விரிவுரையாளரின் எண்ணத்திலிருந்து

ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரியில் இருந்து வருடந்தோறும் தமிழ்சங்கத்தினால் வெளியிடப்படுகின்ற "லயம்" இதழுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வெய்துகின்றேன். இவ் "லயம்" இதழானது ஆசிரியப்பயிலுநர்களின் திறன்களை வெளிப்படுத்துகின்ற பல்வேறு ஆக்கங்களை தன்னகத்தே கொண்டு மலர்வதற்கு களம் அமைத்துக் கொடுப்பதுடன் இளம் மாணவ சமுதாயத்திற்கும் வழிகாட்டியாக இருக்கின்றது.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்......."



திருமதி. ச.கம்சானந்தி
விரிவுரையாயர்

என்னும் பாரதியாரின் வாக்கிற்கு அமைய மிக இனிய மொழியாகிய தமிழில் அழகு நடையில், கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், போன்ற ஆக்கங்களை தன்னகத்தே கொண்டு "லயம்" சஞ்சிகை மலர்கின்றது.

"லயம்" சோலையோடு மலர்ந்து எட்டுத்திக்கும் மணம் பரப்ப நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு தொடர்ந்தும் வளர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் உள்ளத்திலிருந்து



இரா.யோகேந்திரன்
தலைவர்
தமிழ்ச்சங்கம்

"ஓடையிலே என் சாம்பல் கரைந்த போதும்
ஓண் தமிழே சலசலத்து ஓட வேண்டும் - நான்
பாடையிலே படுத்தூரைச் சுற்றும்போதும்
பைந்தமிழால் அழுங்குரல் கேட்க வேண்டும்"

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" அவ்வாறான செம்மொழியாய் உலகில் சிறப்புற நம் தமிழ்மொழி தொன்மை காலம் தொட்டு தூய மொழியாய் திகழ்வதானாலேயே இதற்கு கன்னித் தமிழ் என்று கற்றோர் புகழ்பாடுகின்றனர்.

"வாளை விட பேனா கூர்மையானது" அதற்கமைய ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரி ஆசிரியப் பயினுநர்களின் பேனா முனைக்கு செயல் கொடுக்கும் வகையில் கல்லூரியின் தமிழ்ச் சங்கத்தின் மூலம் வருடாந்தம் பிரசுரிக்கப்படும் "லயம்" சஞ்சிகையானது ஒரு மகத்தான படைப்பாகும். அந்த வகையில் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருப்பதில் பெரும் உவகையடைகின்றேன்.

ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரியின் தமிழ்ச்சங்கத்தின் மூலம் வெளியிடப்படும் பதினோராவது "லயம்" இதழினை வெற்றிவாகை சூட வைப்பதில் கல்லூரியின் தளபதியும் காப்பாளருமான பீடாதிபதி ஆ.சுந்தரலிங்கம் அவர்களுக்கும், இவ்விதழ் வெற்றிக்கான தமிழ்சங்க முதன்மை ஆலோசகரும் கல்விக்கும் தரமேன்மைக்கும் பொறுப்பான உப பீடாதிபதி வ.செல்வராஜா அவர்களுக்கும், பொறுப்பு விரிவுரையாளர்களான திருவாளர் க.சிவகுமார், திருவாளர் வி.கணேஷ்வரன், திருமதி ச.கம்சானந்தி ஆகியோருக்கும்

மற்றும் தமிழ்ச் சங்க போட்டி நிகழ்ச்சிகளை செவ்வனே நடாத்தி முடிப்பதற்கு உதவி நல்கிய ஏனைய விரிவுரையாளர்கள், இணைப்பாளர்கள், துணைத் தலைவர்களுக்கும் வாசகரின் விருந்தாக பல ஆக்கங்கள் தந்து "லயம்" இதழிற்கு பெருமை சேர்த்த ஆசிரியப் பயிலுநர்களுக்கும் எம்மோடு தோளோடு தோள் கொடுத்து அனைத்துச் செயற்பாடுகளுக்கும் உதவி நல்கிய ஆசிரியப் பயிலுநர்களுக்கும் மேலும் இவ்விதழ் வெளியீட்டுவிழா செம்மையாக திகழ வைத்த அனைந்து நெஞ்கங்களுக்கும் உளம் கனிந்த நன்றிகளை தெரிவிப்பதில் கடமை பட்டுள்ளேன்.

மணிமகுடத்தில் வைரம் பதித்தாற்போல் 100 பக்கங்களை கொண்டது "லயம்" சஞ்சிகை. எனவே மகிழ்ச்சியும், முயற்சியும் இரட்டிப்பாகி கல்லூரியின் தமிழ்ச் சங்கமே கூடி அழகான மலரை உதிக்கச் செய்கின்றது என்பதில் ஐயமில்லை.

தமிழ்ச் சங்கத்தின் வெற்றி வாகைக்கும், மலரின் வெளியீட்டு வெற்றிக்கும் உதவி நல்கிய அனைவருக்கும் உளமார்ந்த நன்றிகள்!! மனமார்ந்த வாழ்த்துக்கள்!!

"வையத்துள் என்றும் புகழோடு வாழ்க
நம் தமிழ்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் உள்ளத்திலிருந்து



பா.சர்மிளா
செயலாளர்
தமிழ்ச்சங்கம்

பூந்தென்றல் தமிழ் மணக்கும் பொதிகை மலைக் குன்றிலே
வீற்றிருந்த தமிழ் நாத சொல்லெடுத்து
நாவினிக்கும் நற்றமிழின்
நலமுரைப்பின் - வார்த்தை தோறும்
காவி வரும் ஓசை நயம்
செவியினிக்க செய்யும் - எழிற் சொல்லால்
நெஞ்சப் பூ விரியும் புது மலரான
"லயம்" சஞ்சிகைக்கு வாழ்த்துரைப்பதில்
உளம் மகிழ்கின்றேன்.

ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரியின் தமிழ்ச் சங்கமானது பல படைப்பாளர்களை வெளி உலகுக்கு அறிமுகப்படுத்தி வருவதில் வெற்றி கண்டுள்ளது. அந்த வகையில் பதினோராவது இதழாக உங்கள் கையில் தவழும் லயம் சஞ்சிகையை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

"நன்றி மறப்பது நன்றன்று" என்பதற்கிணங்க லயம் சஞ்சிகை வெளியீட்டுக்கு பல்வேறுப்பட்ட வகையில் உதவிபுரிந்த நல்லுள்ளங்களை நினைவு கூறுவது அவசியமாகும்.

அந்த வகையில் தமிழ்ச் சங்க கலை இலக்கிய விழாவினை சிறப்பிக்க வந்த பிரதம அதிதி அவர்களுக்கும் சிறப்பு விருந்தினர்களுக்கும் கல்லூரியின் முன்னேற்றத்திற்கு பல வழிகளிலும் உழைத்து கொண்டிருக்கும் கல்லூரியின் பீடாதிபதி திருவாளர் ஆ.சுந்தரலிங்கம் அவர்களுக்கும் "லயம்" சஞ்சிகை மலர்விற்காக பல வழிகளில் ஆலோசனைகளை வழங்கி எங்களை வழிநடத்திய கல்லூரியின் உப பீடாதிபதியும் தமிழ்ச் சங்க பிரதம ஆலோசகருமான திருவாளர். வ.செல்வராஜ் அவர்களுக்கும் பொறுப்பு விரிவுரையாளர்களான திருவாளர் வி.கணேஸ்வரன், திருமதி.கம்சானந்தினி ஆகியோருக்கும், தமிழ்ச்சங்க போட்டி நிகழ்வுகளை செவ்வனே நடத்துவதற்கு இன்முகத்துடன் ஒத்துழைப்பை நல்கிய இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள், துணைத் தலைவர்கள், கலை நிகழ்வுகளை சிறப்பாக நெறிப்படுத்திய விரிவுரையாளர்களுக்கும் நேரம் பார்க்காது தமிழ்ச்சங்க செயற்பாடுகளுக்கு உதவி புரிந்த நிர்வாக குழு நண்பர்களுக்கும்

தோளோடு தோழமையாய் துணை நின்று லயம் சஞ்சிகையை உங்கள் கைகளில் சஞ்சரிக்க செய்த ஆசிரியப் பயிலுநர்கள் அனைவருக்கும் மேலும் "லயம்" இதழினையும் சான்றிதழ்களையும் அழகுற அச்சுப்பதித்து தந்த எக்ஸ்ரீம் எட்வடைசிங் அச்சகத்தின் உரிமையாளருக்கும் பணியாளர்களுக்கும் "லயம்" வெளியீட்டுக்கான நிதியுதவியினை வழங்கிய அனைத்து கரங்களுக்கும் எங்களது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்து எமது முயற்சியை உங்கள் கைகளில் சமர்ப்பிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாளரின் உள்ளத்திலிருந்து



க. கார்த்திக்
பொருளாளர்
தமிழச்சங்கம்

"எங்கும் புகழ் கொண்டு எம்மவர் கலைக்கொண்டு அமுது பிழிந்தன்ன சுவை நூறு நூற்ற தமிழ் எங்கள் தமிழ் வாழ்க"

ஈழநாட்டின் எழில் கொஞ்சும் மலையக மண்ணின் செழுமையாய் திகழும் ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரி வருடாவருடம் பிரசுரிக்கப்படும் லயம் சஞ்சிகையானது எம்மவரின் படைப்பாக்கங்களை புகழ் பரவ செய்து புத்துயிர் அளிப்பதைக் கண்டு பொருளாளர் என்ற வகையில் பெரு உவகை கொள்கிறேன்.

அந்த வகையில் எதிர்கால மலையக உயர்ச்சியினை தமிழோடு இணைத்து வளர்க்கும் முகமாகஆசிரிய பயினுநர்களினால் உரம் சேர்க்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான படைப்பாக்கங்களை படைத்தருளிய அனைத்து ஆசிரிய பயிலுநர்களுக்கும் எனது இனிய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன். அத்தோடு இதன் வளர்ச்சி பண்மடங்காய் பெருகவும் வாழ்த்துகின்றேன்.

அந்த வகையில் தமிழ் சங்கத்தின் அனைத்து செயற்பாடுகளுக்கும் உதவி வழங்கிய பீடாதிபதி திரு.ஆ.சுந்தரலிங்கம் அவர்களுக்கும், தமிழ்ச்சங்க பிரதம ஆலோசகரும் கல்விக்கும் தர மேன்மைக்கும் உரித்தான உப பீடாதிபதி திரு.வ.செல்வராஜ் அவர்களுக்கும் பொறுப்பு விரிவுரையாளர்கள் திரு. க.சிவகுமார், திரு.வி.கணேஸ்வரன், திருமதி.ச.கம்சானந்தி ஆகியோருக்கும் கல்லூரியின் ஏனைய உப பீடாதிபதிகளுக்கும், விரிவுரையாளர்களுக்கும் தமிழ்ச்சங்க உறுப்பினர்களுக்கும் முதலாம், இரண்டாம் வருட ஆசிரிய பயிலுநர்களுக்கும் பொருளாளர் என்ற வகையில் என் உளம் கனிந்த நன்றிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

"வையகம் தழைக்க அறிவொளி பரவி
அடவியும் தமிழரங்காய் ஆகவென்று
சங்கே முழங்கு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து



பெ.சந்திரதேவன்
பத்திராதிபர்
தமிழ்ச்சங்கம்

"செம்மொழியாம் செந்தமிழை செம்மையுர வாழ்த்துகிறேன்" எழில்மிகு மலையகத்தின் கல்விக்கடலின் முத்தென திகழும் ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரின் தமிழ்த் தாயின் தவப்புதல்வனாய் வருடந்தோறும் பிரசுரிக்கப்படும் "லயம்" சஞ்சிகையின் 11வது இதழை வெற்றிகரமாக வெளியிடுவதில் இதழாசிரியர் என்ற வகையில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

அவ்வகையில் எதிர்கால இளம் சமூகத்தின் தமிழ்ப்புலமையையும், மண்ணின் மகிமையையும் வளர்க்கவும் அவர்களின் இலக்கிய படைப்பாற்றல், சிந்தனையாற்றல் போன்றவற்றை வளர்க்கவும் முகமாக ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரியின் தமிழ்ச்சங்கமானது வருடந்தோறும் ஆசிரியப் பயிலுநர்களின் திறமைக்கும் வெற்றிக்கும் களமாய் திகழ்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

அவ்வகையில் இம்முறையும் எமது கல்லூரி ஆசிரியப் பயினுநர்களின் எண்ணற்ற பல படைப்பாற்றல்களான கவிதை, கட்டுரை, சிறுகதை போன்றவற்றை இவ் லயம் சஞ்சிகையும், சுவர் சஞ்சிகையும் தாங்கி வருகின்றன.

புதுப்பொலிவுடன் இச்சஞ்சிகையை வெளியிட ஆக்கங்களை தந்துதவிய அனைத்து ஆசிரியப் பயிலுநர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு இவர்களின் இலக்கிய படைப்பாற்றலானது எதிர்கால சந்ததியினரின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் தூண்டுகோலாக அமைய வேண்டும் என வாழ்த்துகிறேன்.

தமிழ்ச்சங்கத்தின் அனைத்து செயற்பாடுகளுக்கும் உதவி வழங்கிய பீடாதிபதி திரு.ஆ.சுந்தரலிங்கம் அவர்களுக்கும், தமிழ்ச்சங்க பிரதம ஆலோசகரும் கல்விக்கும் தரமேன்மைக்கும் உரித்தான உப பீடாதிபதி திரு.வ.செல்வராஜா அவர்களுக்கும், பொறுப்பு விரிவுரையாளர்கள் திரு.க.சிவகுமார், திரு.வி.கணேஸ்வரன், திருமதி.மு.கம்சானந்தினி ஆகியோருக்கும் கல்லூரியின் ஏனைய உப பீடாதிபதிகளுக்கும், விரிவுரையாளர்களுக்கும் தமிழ்ச்சங்க உறுப்பினர்களுக்கும் முதலாம், இரண்டாம் வருட ஆசிரிய பயிலுநர்களுக்கும் என் உளம் கனிந்த நன்றிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

"உயர்ச்சியை உவந்தோம் உலகோடு
உலக வளர்ச்சியை வளர்த்தோம் தமிழோடு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | நாடக கலையின் பயன்பாடும் மலையக கூத்து நாடகமும் | 01 |
| 02. | லயம் | 03 |
| 03. | கலாசாரம் | 03 |
| 04. | மலையகத்தவர் | 04 |
| 06. | பலவீனத்தின் பலம் | 06 |
| 07. | நவீன தொடர்பு சாதனங்களும் அவை கல்வியில் ஏற்படுத்தும் பாதிப்புக்களும் | 08 |
| 08. | மாணவரும் வாசிப்புத் திறனும் | 10 |
| 09. | கல்வித்துறையில் தகவல் தொடர்பாடல் சாதனங்களின் பங்களிப்பு | 12 |
| 10. | பாரதியார் கவிதைகள் ஒரு நோக்கு | 13 |
| 11. | வெளிநாட்டு மோகத்தினால் ஏற்படும் விளைவுகள் | 14 |
| 12. | தேயிலைச் செடியின் விமோசனம் | 16 |
| 13. | மலையகத்தின் மாறா அவலம்............ | 16 |
| 14. | கப்பலிலே கூட்டிவந்த கங்காணியாரே.. | 17 |
| 15. | நேசக் குருவிகள் | 17 |
| 16. | நாங்கள் தான் | 18 |
| 17. | மலையகமும் எங்கள் கல்லூரியும் | 18 |
| 18. | தமிழைக் காப்போம் | 19 |
| 19. | நாளையாவது விடியுமா? | 20 |
| 20. | புத்தி கெட்ட மலையகம் | 21 |
| 21. | ஸ்ரீபாத கல்வியற் கல்லூரி | 21 |
| 22. | கல்வி | 22 |
| 23. | உளியின் வலி | 22 |
| 24. | நனவாகப் போகும் கனவுகள் | 23 |
| 25. | நகர்ந்து விடு | 24 |
| 26. | ஆத்திரபோடாக்களா? | 25 |
| 27. | மலையகத் துயரங்கள் | 26 |
| 28. | ஸ்ரீபாத கல்லூரியே | 27 |
| 29. | மாற வேண்டும் மலையகம் | 28 |
| 30. | எதிர்பாராத யதார்த்தம் | 30 |
| 31. | மனித விழுமியங்கள் | 32 |
| 32. | தமிழ்மொழி | 34 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 33. | வாழ்க்கையின் குறிக்கோள் | 36 |
| 34. | கேட்டிடுவீர் என் குரலை... | 38 |
| 35. | கறை படிந்த சோகம் | 38 |
| 36. | வகுப்பறையில் அன்று | 39 |
| 37. | ஆசிரியத் தொழில் | 40 |
| 38. | அன்புத் தாயே! | 40 |
| 39. | புனித நெஞ்சங்களிலிருந்து | 41 |
| 40. | மேகம் கறுக்குமா | 41 |
| 41. | இல்லை என்பதை | 42 |
| 42. | நினைவாகும் ஒருநாள் | 42 |
| 43. | மலையின் மைந்தனுக்கு | 43 |
| 44. | முற்றுப்பெறாத முற்றுப்புள்ளி | 43 |
| 45. | வாழ்வு | 44 |
| 46. | ஏக்கம் | 44 |
| 47. | மீண்டும் வருவேன் | 45 |
| 48. | கனவு | 45 |
| 49. | சிறகடிக்குமோ மலையகம் | 46 |
| 50. | சுதந்திரம் | 47 |
| 51. | மொழி கற்பித்தலில் நவீன தொடர்பு சாதனங்களை கையாளுதல் | 48 |
| 52. | ஆசிரிய கல்வியும் கல்வியற் கல்லூரிகளும் | 50 |
| 53. | மலையக கல்வியில் புதிய சாத்தான்கள் | 52 |
| 54. | மலையக கலைகள் | 54 |
| 55. | கற்பும் கண்ணகியும் | 58 |
| 56. | பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்த விதம் | 61 |
| 57. | உன்னை நீ புரிந்து கொள் உலகத்தை புரிந்துகொள்வாய் | 64 |
| 58. | கொழுந்து மடுவம் | 65 |
| 59. | வளர்ந்து வரும் மலையகக் கல்வி | 69 |
| 60. | கவ்வாத்துக் குச்சி | 70 |
| 61. | முப்பெருங் காப்பியங்களின் கதை | 71 |
| 62. | அம்மாவுக்கு கலியாணம் | 75 |
| 63. | மலைநாட்டு மக்கள் நாம் | 79 |
| 64. | இது ஒரு தொடர்கதை | 81 |
| 65. | ஆசிரியர் ஓர் கண்ணோட்டம் | 82 |
| 66. | மலையகமும் மதுபானமும் | 47 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் வருடம்



இடமிருந்து வலம்

முன்வரிசை : க.கார்த்திக் (பொருளாளர்), பெ.சந்திரசேகரன் (பத்திராதிபர்), வ.ககேஸ்வரன் (விரிவுரையாளர்), க.சிவக்குமார் (பொறுப்பு விரிவுரையாளர்), ஆ.சுந்தரலிங்கம் (பீடாதிபதி), வ.செல்வராஜா (பிரதம ஆலோசகர்), திருமதி. கம்சானந்தி (விரிவுரையாளர்), ச.சர்மிளா (செயலாளர்), இரா.யோகேந்திரன் (தலைவர்)

2ம் வரிசை : பா.ஜீவனா, ரா.புவனலோஜினி, பா.மேகலாதேவி, ர.ஸ்ரீவித்யா, த.கிருபாலினி, மா.கயத்திக்கா, பெ.திர்கலா, பா.விமலாதேவி, ஜெ.ஜெயபிரபா, பா.உஷாந்தினி, ஆ.கோகிலவாணி

3ம் வரிசை : த.ராஜ்மோகன், கோ.அற்புதராஜ், உ.சத்தியசீலன், சி.தயாளன், நா.சதீஸ்குமார், த.நித்தியகுபன், மு.தினேஸ், இ.சிவேந்திரன், க.சுதாகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இடமிருந்து வலம்

முன்வரிசை : ச.கலைச்செல்வன் (பத்திராதிபர்), ரா.கேசவர்தினி (உபசெயலாளர்), வ.கணேஸ்வரன் (விரிவுரைளார்), க.சிவக்குமார் (பொறுப்பு விரிவுரையாளர்), ஆ.சுந்தரலிங்கம் (பீடாதிபதி), வ.செல்வராஜா (பிரதம ஆலோசகர்), மு.கம்சானந்தி (விரிவுரையாளர்), வி.பிரதீபா (உபசெயலாளர்), ச.கிருபாகரன் (உபதலைவர்)

2ம் வரிசை : சு. புகழரசி, ம.லோஷனி, க.வனிதமாலா, ரா. சங்கரி, வ.தீனநாயகி, ந.சசிரேகா, மா.யோகேஸ்வரி, சு.விதுர்ஷனா

3ம் வரிசை : ரா.சந்திரமோகன், கா.கிருஷ்ணமூர்த்தி, சத்தியராஜ், ரா.ரவீந்திரநாத், தே.போல் ஜெயசீலன், ர.தயாளன், ரா.திலீபன், ரா.திலீபன், ரா.கிரின்பன்ரோய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடக கலையின் பயன்பாடும் மலையக கூத்து நாடகமும்

ஜெ. ஜெயபிரமா
தமிழ்ப்பிரிவு, இரண்டாம் வருடம்

"இயலாகி, இசையாகி இவை இயைந்த நாடகமாய் இலங்குகின்ற இன்பத்தமிழ்" என்று தமிழுக்கு சிறப்பு சொல்லப்படுகின்றது.கூடவே நாடகத்தமிழின் சிறப்பொன்றையும் உணரக்கூடியதாய் உள்ளது. நாடகக்கலை ஏனைய கலைகளை விட வித்தியாசமான ஒரு கலையாகும். சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து தொகுத்துக்கூறும் கலை இது. அத்தோடு ஓவியம், சிற்பம், கட்டிடம், இசை, நடனம் என அனைத்து கலைகளும் சங்கமிப்பதால், அனைத்து கலைகளையும் இரசிக்கும் முழுமையான கலையுணர்வு இக்கலையை பார்ப்பதால் நமக்கு ஏற்படுகிறது.

நாடக வரலாற்றில் மக்களை நன்மைக்கு இட்டுச் சென்றதையும் காண்கின்றோம். தீமைக்கு இட்டுச் சென்றதையும் காண்கின்றோம். மனித குல விழுமியங்களை மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து அவர்களுக்கென ஒரு கருத்தியலை உருவாக்கிய கலையும் இதுதான் அவ்விழுமியங்களை கேள்விக்குள்ளாக்கி மக்கள் மத்தியில் விமர்சன பாங்கினை ஏற்படுத்திய கலையும் இதுதான். கண்ணாடி நம் விம்பங்களை நமக்கு காட்டுவது போல நாடகம் ஒரு வகையில் நம் குணாதியங்களை நமக்கு காட்டுகிறது.

ஏனைய கலைகளைவிட இயங்குகின்ற நிலையில் எப்போதுமுள்ள கலை இதுவாகும். மனிதருடன் மனிதன் நேரடியாக உறவாடும் கலை நாடகக்கலை. நடிப்போருக்கும், பார்ப்போர்க்கும் இடையிலான ஊடாட்டமே (Interaction) நாடகத்தின் அடி நாதமாகும். செலவு குறைந்த ஒரு கலை நாடக கலை. நாடகக் கலைக்கு அத்தியாவசியமாக தேவைப்படுபவை வெளியும், உடலும்தான். நடிகரின் உடலும், குரலும் கற்பனையுமே நாடகத்தின் முதலீடுகள்.

நடிகரின் அனுபவங்களும் உணர்வுகளும் பார்ப்போரை சென்றடைகின்றன. பார்ப்போரின் உணர்வுகள் நடிகரைச் சென்றடைகின்றன. இந்த அனுபவப் பகிர்வும், உணர்வு பரிமாற்றமும் நாடகம் எனும் சிருஷ்டி ஆரம்பித்து முடியும் வரை இடையறாது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வனுபவ, உணர்வு பகிர்வு நாடக கலையின் தனித்துவமான அம்சங்களுள் ஒன்று. நாடகம் மனிதரை ஞான நிலைக்கும், தன்னை அறியும் உன்னத நிலைக்கும் இட்டுச் செல்லும் ஒரு கலையாகும். நாடகத்தின் பிரதான சாரம்சம் இதுவாகும்.

தொழிநுட்ப யுகத்திற்குள் இயந்திர மயமாகிப் போயுள்ள மனித இனத்தை மீட்டெடுக்கும் வல்லமை இக்கலைக்கு தான் அதிகளவு உண்டு. மனித குலம் வாழும் வரை இக்கலையின் தேவை இருப்பதனால் இது என்றும் வாழும் கலையாகவும் இருக்கின்றது.

இந்நாடக கலையானது தன் பணியை உலகெங்கிலும் பரப்பி கொண்டு செயற்படுகின்றது. இதன் அடிப்படையில் ஈழத்தில் எழில் கொஞ்சும் இயற்கை வனப்பு மிக்க மலையகப் பிரதேசத்தில் பயில் நிலையில் இருந்து கொண்டிருக்கின்ற தமிழ் நாடக அரங்க கலை நோக்குவதற்கு உரியதாகும். மலையகத்தில் நாடகம் என்று எதனையும் விரல் சுட்டி காட்ட முடியாத நிலை இருப்பினும் நாடகமாக முகிழ்த்த கூத்துக்களை நாம் சுட்டிக் காட்டலாம்.

குறிப்பாக மூன்று கூத்துக்கள் மலையகத்தில் ஆடப்பட்டு வருகின்றன. ஆனால் இங்கு பல கூத்துக்கள் ஆடப்பட்டதற்கான வரலாற்றுச் சான்றுகளை நாம் அறியலாம். அருச்சுணன் தபசு, காமன்கூத்து, பொன்னர் சங்கர், வீரபத்திரன் ஆட்டம் என்பன எடுத்துக்காட்டத்தக்கன.

காமன் கூத்தை நோக்கும் இடத்து, காமனை சிவன் எரித்த கதையினைக் கூறும் இக் கூத்து சமய சடங்குகள் போல ஆரம்பித்தாலும் கூத்தாகவே நிகழ்த்தப்படுகின்றது. ஊர்க்கோயிலில், ரதிக்கும் ,மன்மதனுக்கும் காப்பு கட்டுதலுடன் இக் கூத்து ஆரம்பமாகும். சில நாட்கள் ரதியும், மன்மதனும் ஊர் முழுவதும் திரிந்து ஆடுவர். குறிப்பிட்ட நாளன்று கோயில் முன்றலில் மேடையமைக்கப்பட்ட திறந்த வெளி மேடையில் சிவன் வரவும், காமன் அவரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்வதும் சிவன் அவனை எரிப்பதும் நடைபெறும் வீரபத்திரன் தூது வருவது கோயிலின் இன்னொரு பக்கம் இடம் பெரும்.

காமனை எரித்த பின் ஊரின் ஆற்றுக்கு சென்று காமனை உயிர்ப்பித்தல் நடைபெறும். இவ்வாறு ஊர் முழுவதும் மேடையாக்கி நடைபெறும். இந்நாடகத்தை ஊரார் இருந்தும், நின்றும், நடந்தும் பார்வையிடுவர். காமன் கூத்தானது வைகாசி அமாவாசை கழித்து வரும் 3ம் நாள் நடைபெறும்.

அடுத்ததாக சிவனிடம் அர்ச்சுனன் பாசுபதம் பெறும் கதையை கூறுவது அர்ச்சுனன் தபசு ஆகும். ஊர்க்கோயிலின் முன்னால் இடப்படும் திறந்த வெளி மேடையில் அர்ஜுனன் தவம் நடைபெறும் சிவன் புறப்பாடு கோயிலிற்குள் இருந்து தொடங்கும் கோயில் வீதி இவ்வகையில் மேடை ஆகும். மக்கள் இருந்தும், நின்றும், கிடந்தும் பார்வையிடுவர்.

பொன்னர் சங்கர் கூத்து மரபு வழி கூத்தாகும். இது கருவில் சடங்கை அடிப்படையாக கொண்ட கூத்தாக கருதப்படுகின்றது. இவ்வாறான கூத்து மரபுகளை மலையகப் பகுதிகளில் கண்டு கொள்ள முடியும்.

இக்கூத்துக்களை பேணும் முயற்சியில் ஈடுபடும் முன்னர் இக்கூத்துக்களின் உண்மையான வடிவம் எது என்பதில் சில திட்டவட்டமான கருத்துக்களை உருவாக்கி கொள்வது அவசியம். கிராமப் புறங்களில் இப்போது ஆடப்படுகின்றதாகக் கூறப்படும் கூத்துக்கள் அப்படியே பழைய மரபில் அமைந்தமை தாமா? இல்லை. இவை காலமாற்றத்திற்குட்பட்டவை. ஒவ்வொரு காலத்திலும் புதிதாக வெளியில் இருந்தும் வரும் கலை தொழிநுட்ப தாக்கங்கினாலும் இயல்பாக மக்கள் மத்தியில் வளர்ச்சியுறும் சிந்தனைகளினாலும் மாறுபாடு அடைந்தவை. நாம் இப்போது பார்க்கின்ற கூத்தே பண்டு தொட்டு ஆடப்பட்டு வந்தது என்று கூற முடியாது. நாம் இன்று அதைப் பார்க்கின்ற போது இருக்கும் அமைப்பு அதன் இன்றைய அமைப்பாகும். இந்நிலையில் நாம் கூத்தில் மூன்று விதமான முயற்சிகளை மேற்கொள்ளலாம். ஒன்று இன்றைய நிலையில் அது எப்படி இருக்கின்றதோ, அவ்வண்ணமே அதைப் பேணுதல்,இரண்டு இதன் பழைய தன்மையினை கண்டறிந்து அதனை பழையது போல மீள உருவாக்கம் செய்தல். மூன்று அதனை புதிய பரிமாணங்களோடு வளர்த்து செல்லுதல் ஆகும்.

இதனடிப்படையில் பாரம்பரிய கூத்துக்களை கிராமப்புற மக்கள் அல்லாத அல்லது கூத்து கலையோடு பரிச்சயமல்லாத இன்னொரு பகுதியினருக்கு அறிமுகம் செய்கையில்அதை வளர்த்தெடுக்கும் பணி,செம்மைப்படுத்தும் பணி ஆரம்பிக்கின்றது. நம் முன்னோர்கள் செய்ததை அப்படியே பிசகாது நாம் அறிந்த வரையில் செய்தலே எமது நோக்காக அமைய வேண்டும்.

எனவே இது சம்பந்தமான ஈடுபாடுடைய புத்தி ஜீவிகள் கூத்தில், இசை, அசைவுகள், ஆட்டம், நடிப்பு, ஒப்பனை மேடையமைப்பு என்பவற்றை விஞ்ஞானரீதியாக கற்பித்தல் பற்றி ஒரு பாடவிதானமாக தயாரித்தல் வேண்டும். இதன் மூலம் மரபினை அதன் அடிப்படை குலையாமல் பேண முடியும் அத்தோடு கூத்தின் பிசிறல்கள் தவிர்க்கப்பட்டு அது பட்டை தீட்டம்படவும் இது உதவும்.

எப்பாரம்பரியம் சமூக முன்னேற்றத்திற்கு தடையாக இல்லாமல் இருக்கின்றதோ அதனையே வளர்க்க முயல வேண்டும். சமூக வளர்ச்சிக்கு உதவாத சமூக ஓட்டத்தை தடைப்படுத்துகிற பிழையான கருத்துக்களை முன்வைக்கின்ற பாரம்பரியம் வளர்த்தெடுக்கப்படுதல் உகந்ததல்ல. "அப்பன் கட்டிய கிணறு என்பதற்காக உப்புத் தண்ணீரைக் குடிக்க முடியுமா?", எனவே எப்போதும் வளர்ச்சியையே தருகின்ற மலையக கூத்துக்களை வளர்ப்பது எம் கடமையாகும்.

"உலகமே ஒரு நாடக மேடை; நீயும் நானும் நடிகன்" - (வில்லியம் சேக்ஷ்பியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லயம்

பெ.சந்திரதேவன்
சங்கீதப்பிரிவு, 2ம் வருடம்

செந்தமிழ் போற்றும்
செல்வமென சீர்பெற்ற
முத்தமிழ்ச்சங்கம்
முன்னோர் வழிநின்று முதன்மை எய்திற்று
முற்கால தமிழறிஞன்
கம்பரும், பாரதியும் கடந்து வந்த
கவிக்கடலை கண்ணுற்று
வானிகம் போற்றும் சிந்தனைகளின்
அழியாச் செல்வமென
சுடர் விட்டு ஜொலித்திடவே லயம்

# கலாசாரம்

ஆ.திவ்யராஜ்
தகவல் தொடர்பாடல்தொழிநுட்பம்
2ம் வருடம்

கலாசாரம் மாறுகின்றதாய்
பத்திரிக்கையில் செய்தி
யார் சொன்னது? மாறவில்லை
இன்னும் எம் மலையகத்தில்
அதே மக்கள் அதே தேயிலைமலை
அதே தேயிலை கூடை
மாறவில்லை இன்னும் மாறவில்லை
அடுத்த சந்ததியும் இறங்கிவிட்டன.
கலாசாரத்தை காப்பாற்ற
பொருளாதார முன்னேற்றமாம்
மாறவில்லை எங்களின் பொருளாதாரம்
கட்டிடங்கள் பெருகின்றதாம்
மாறவில்லை எங்களின்
அரைகாம்பிரா லயங்கள
மனித உரிமை நிலையங்கள் உருவாகிறதாம்
மாறவில்லை எங்கள் உரிமைகள்
மீறப்படுகின்றன உரிமைகள்
மாறவில்லை இன்னும் மாறவில்லை
எங்கள் கைகளில் உள்ள
தேயிலை கறைகள்
மாறவில்லை இன்னும் மாறவில்லை
எங்கள் கலாசாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தவர்

பு.சுரேஸ் ரமணன்
விஞ்ஞானப்பிரிவு. 2ம் வருடம்

இலங்கையானது 1815ம் ஆண்டிற்குப் பின் முழுமையாக பிரித்தானியர் வசமானது. பிரித்தானிய ஆளுனர்கள் தமது நோக்குகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக இலங்கையை தமக்கே உரிய முறையில் பல்வேறு முறையில் மாற்றியமைத்தனர்.அதன் ஒரு கட்டமாகவே மலைப்பிரதேசங்களில் தேயிலைப் பயிர்ச்செய்கை விருத்தி செய்யப்பட்டது.

இத்தேயிலைத் தோட்டங்களில் குறைந்த கூலிக்கு கூடிய உழைப்பினை செய்வதற்காக சூழ்ச்சியான முறையில் பிரித்தானியரால் இந்தியாவிலிருந்து உழைப்பாளர்கள் வரவழைக்கப்பட்டனர்.வரவழைக்கப்பட்ட எம்மவர்கள் உயர் உழைப்பை வெளிப்படுத்தி பிரித்தானிய பொருளாதார நிலையை மேல் நிலைக்கு உயர்த்தியதோடு, குறைந்த கூலி, பற்றாக்குறையான அடிப்படை வசதிகளை அனுபவித்தனர்.

உணவு, உடை என்பவற்றில் பொருத்தமற்ற நிலை காணப்பட்டதோடு எம் மூதாதையர்ளுக்காக வழங்கப்பட்டிருந்த உறையுள் பரிதாபகரமானதாக அமைந்திருந்தது. மிகவும் குறுகிய இடவசதிப் போதாத லயன் அறைகள், தற்காலத்தில் அகற்றப்பட வேண்டும் என வலியுறுத்தப்படும் வகையில் அமைக்கப்பட்டிருந்த மலசலக்கூடங்கள் என்பன எமது மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

மேலும் தோட்டப்புறங்களுக்கு போக்குவரத்து வசதிகளோ, வைத்தியசாலை வசதிகளோ, மின் வசதிகளோ, ஏனைய அடிப்படை வசதிகளோ செய்து கொடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு எமது மூதாதைகள், அவர்களின் சந்ததியினர் தோட்ட வேலைகளுக்கே அமர்த்தப்பட்டு வெளி அனுபவமற்ற அடிமைகளாகவே நடாத்தப்பட்டனர்.

மாறாக தோட்டப்புறங்களில் மது சாலைகள் பலவாறாக நிறுவப்பட்டு மக்களிடத்தில் நிலவிய ஒற்றுமை, உடல்வலிமை, சுகாதாரம் என்பன தகர்த்தெறியப்பட்டன.

இவ்வாறாக பல சந்ததியினரை அடிமைக்காக தாரை வார்த்த எம் சமூகம் இன்று சற்று தலை நிமிர்ந்துள்ளது எனலாம். ஆரம்ப கால சமூகத்தினரின் கல்வி நிலை, தொழில் மற்றும் ஏனைய அபிவிருத்தியுடன் ஒப்பிடும் போது இன்றை எம் சமூகம் பலவாறான வளர்ச்சி கண்டுள்ளது என்றால் அது மிகையில்லை, எனினும் ஏனைய சமூகத்துடன் இவ்வளர்ச்சியை ஒப்பிடும் போது, இன்னும் பின் தங்கிய நிலையே காணப்படுகின்றது.

தற்போதைய மலையக தோட்டங்களை நோக்கும் போது வைத்தியசாலைகள், பாடசாலைகள், போக்குவரத்து மற்றும் மின் வசதி என்பன அரசால் பொறுப்பேற்கப்பட்டு விருத்தி செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக பாடசாலைகளில் திட்டமான ஒழுங்கமைப்பு, பல்வேறு பாடநெறிகள், கணிணி பாடநெறிகள் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் என்பன ஒழுங்கமைக்கப்பட்டு பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் நிறைவேற்றப்படுகின்றன.

இவற்றை எமது மலையக மாணவர்களும் வினைத்திறனாகப் பெற்றுக் கொள்கின்றனர் என்றால் அது மிகையில்லை. காரணம் எமது சமூகத்தவர்கள் கல்வியின் பயன் கல்வி பற்றிய விழிப்புணர்வினை தெளிவாக பெற்றுள்ளனர். தமது பிள்ளைகளை படிக்க வைப்பதில் உயர் நாட்டத்தினை காட்டுகின்றனர். கல்வியே மலையகத்திற்கு விடிவு என்பதை நன்கு உணர்ந்துள்ளனர்.

இன்றைய மலையக சமூகம் அதே வசதிகளற்ற லயன் அறைகளில் வாழ்கின்ற போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரீக வாழ்க்கைக்கு முன் வெட்கித் தலை குனியும் அவர்கள் சோர்ந்து போகாது தம் பிள்ளைகளை படிக்கவைப்பதில் அக்கறை செலுத்துகின்றமை மிகவும் உன்னத நிலையாகும்.

இலவசக்கல்வியை திறம்பட பெற்றுக் கொள்ளும் மலையக சிறார்கள் சாதாரண தரத்தை தடையின்றிக் கடக்கும் பட்சத்தில் உயர்கல்வியினை மேற்கொண்டு வெற்றி பெற வேண்டும் எனும் கங்கணத்தில் செயற்படுகினறனர். இவ்வாறு கல்வியினைப் பெற பல்வேறு தாபனங்களும் உதவிகளைப் புரிவதோடு, பல்கலைகழக மற்றும் கல்லூரி நுழைவு நிமித்தம் உதவிகளை மேற்கொள்கின்றன.

குறிப்பாக வருடந்தோறும் இருநூறுக்கு மேற்பட்ட மலையக ஆசிரியர்களை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி பிறப்பித்துக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. மறுபுறமாக கல்வியிலிருந்து இடைவிலகும் இளைஞர்கள் தொழினுட்ப, சுயதொழில் கல்விகளில் ஈடுபட்டு தம்மை பொருளாதார மார்க்கத்தில் இட்டுச் செல்கின்றனர்.

மேலும் மலையகப்பகுதிகளில் பெருகி வரும் கணிணி, தொழினுட்ப கூடங்களால் மலையகத்தவர் மத்தியில் பாரிய தொழினுட்ப புரட்சி ஏற்பட்டுள்ளது. இந்நிலை ஏனைய சமூகத்தவர்களுடன் ஒப்பிடும் போது அவர்களுக்கு சமமாக உள்ளமை கண்கூடாகும்.

இவ்வாறாக இன்றைய எமது சமூகத்தவர்கள் கல்விரீதியில் வளர்ச்சி கண்டுள்ளதோடு, பல்வேறு அரச தாபனங்களிலும், ஊடகத்துறைகளிலும், தனியார்துறைகளிலும் பணியாற்றி சாதனைப் படைத்துக் கொண்டு வீர நடை போட்டுக்கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு பல்வேறு விருத்தியின் மத்தியில், எமது இன்றைய வளர்ந்து வரும் இளைஞர்கள் மத்தியில், மது பாவனையின் தாக்கம், கலாசார சீரழிவு மற்றும் ஏனைய சீர்கேடுகளின் தாக்கம் ஏற்பட்டுள்ளன. உயர்கல்வி, தொழில் நிமித்தம் நகரங்களுக்கு சென்று வருவோரிடத்திலேயே இவ்வாறான தீய நடவடிக்கைகள் விருத்தியடைகின்றன.

இவ்வாறு பரவும் இவை மலையக பகுதிகளில் இருக்கும் சிறார்களையும் பாதித்து, எம் எதிர்கால சமூகத்தவர்களின் வளர்ச்சியை கேள்விக்குறியாக்கியுள்ளது. ஆரம்ப காலத்தவர்களுடன் ஒப்பிடும் போது தற்போது எம்மிடத்தில் கல்வி வசதி மற்றும் நாகரீகம் என்பன பலவாறு வளர்ச்சியுற்றிருக்கும் இக்காலகட்டத்தில் இவ்வாறான சீர்கேடுகள் எம்மை சீரழிக்க காட்டுத்தீயாய் பரவிவருகின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

மேலும் அன்றைய சமூகத்தில் நிலவிய சாதி, இன அடிப்படையிலான ஒற்றுமையின்மை, ஏற்றத்தாழ்வுகள், இன்றும் அனேக தோட்டப்புறங்களில் நிலவி வருகின்றமை பல்வேறு வளர்ச்சிக்குத் தடையாக மாறியுள்ளன.

உலகமயமாதல், நகரமயமாதல், நாகரீகமயமாதலுக்கு ஏற்ப நாம் எம்மை மாற்றிக் கொள்ளவேண்டியது அவசியமே. எனினும் தேவையற்ற, தீய நடவடிக்கைகளையும் மேற்கொண்டு, எம்மவரை வீணாக்குவது என்பது எமது முன்னோர்களால் செய்யப்பட்ட தியாகத்திற்கு நாம் வழங்கும் நன்றியின்மையை வெளிப்படுத்தும். நாமும் எம்மில் பல கல்வியாளர்களை உருவாக்கி எம் மூதாதையர் புகழை உலகறியச் செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலவீனத்தின் பலம்

ந.தர்ஷன்
விஞ்ஞானப் பிரிவு, 2ம் வருடம்

ஆதிகால மனிதன் தனது உணவுத் தேவையை பூர்த்தி செய்துக்கொள்வதற்காக மரங்களிலுள்ள பழங்களையும், தானியங்களையும், உணவாக உட்கொண்டான். வேறு சிலர் கற்களையும் ஆயுதங்களையும் கொண்டு விலங்குகளை வேட்டையாடுவதன் மூலமாக தனது உணவுத் தேவையை நிவர்த்திச் செய்துக்கொண்டனர்.

இவர்களில் ஒருவன் உணவுக்காக பெற்ற தானியங்களை பயிரிடுவதன் மூலமாக பல மாதங்களுக்கு தேவையான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய கற்றுக் கொண்டான் மேலும் வேட்டையாடவேண்டிய விலங்குகளை தனது பண்ணைகளில் வைத்துப் பராமரிப்பதன் மூலம் தனது வாழ்க்கை தரத்தை மென்மேலும் உயர்த்திக் கொண்டான்.காலப் போக்கில் விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக விலங்குகளை பயன்படுத்தி விவசாயம் செய்தவன் இயந்திரங்களின் மூலமாக தனியொருவனாக ஆயிரக்கணக்கான ஏக்கர்களை உழுவதன் மூலமாக தனது வருமானத்தை பன்மடங்காக்கிக் கொண்டான். அதன் பின்னர் ஏற்பட்ட தொழிநுட்ப வளர்ச்சியின் காரணமாக வாழ்வை இலகுபடுத்தும் உபகரணங்கள் பல கண்டுப்பிடித்ததன் காரணமாக மக்களின் வாழ்க்கைத் தரமும் வருமானமும் அதிகரிப்பதை காண்கிறோம்.

தற்கால மனிதனுக்குத் தேவையான ஆற்றல்கள் அல்லது திறமைகள் என்ன? அவற்றை எங்கே, எப்படி வளர்த்துக் கொள்ளலாம் என்ற வினாவுக்கு சரியான விடையை காண்பதில் தான் ஒரு மனிதனுடைய வெற்றியும் வாழ்வும் தங்கியுள்ளது.

அறிவுத்தேவைகள் பெருகிய தற்காலத்தில் அறிவுசார் திறன்களை வளர்ப்பவர்கள், விசேடமாக கணனிசார் துறைகளில் பாண்டித்தியம் பெற்றவர்களின் வருமானம் முன் எப்போதும் இருந்திராத உயர்ச்சியை கண்டுள்ளது. இதேபோல் பொருட்களையும் விலைகளையும் பற்றிய அறிவும் தெளிவும் மக்களுக்கு இலகுவாக கிடைக்கிறது. இதனால் அறிவுசார் திறனும் காலாவதியாகிக் கொண்டு வருகின்றது. ஆசிரியர் இல்லாமலே படித்து பட்டம் பெறக்கூடிய வாய்ப்புக்கள் அதிகரித்துக் கொண்டு வருகின்றது.

அப்படியானால் தற்கால வாலிபர்களுக்கு தேவையான திறன் என்ன? மக்களுக்கு தேவையானது என்ன? தன்னையும் மற்றவர்களையும் குறித்து ஆரோக்கியமான ஒரு கண்ணோட்டம் இருக்க வேண்டியதன் அவசியத்தை மனிதன் உணர்ந்து வருகின்றான். குறுகிய ஒரு துறையில் விசேட வான்மை பெற்றவர்கள் அதிகரித்துக் கொண்டு வருவதால் அறிவு மனிதரை பாதுகாக்கும் என்ற நிலை மாறி மனிதர் ஒவ்வொருவரும் ஒருவர் மேல் ஒருவர் நம்பிக்கை கொள்ள வேண்டிய தேவை அதிகரித்துக் கொண்டு வருகின்றது. திறமையானவரை விட நம்பிக்கையானவரை தேடும் காலம் இது. ஒவ்வொருவரும் தத்தமது துறைகளில் பாண்டிதியம் பெறுவதனால் ஒருவர் மற்றவரை நம்பியே ஆக வேண்டும் என்ற நிலை காணப்படுகின்றது.

குறித்த நோயாளியொருவரின் மருத்துவ பரிசோதனையின் அடிப்படையிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றது. சிகிச்சை சரியாக அமையாவிட்டால் அதற்கு யார் பொறுப்பு? பலருடைய ஆலோசனையும் முயற்சியும் இருந்தால் தான் ஒரு விடயம் வெற்றியாக அமையும் என்ற நிலையே காணப்படுகிறது.அப்படியானால் தற்காலத்தில் எத்தகைய திறமை தான் தேவையாக இருக்கின்றது.

ஆம்! அது தான் பலருடைய திறமைகளை ஒருங்கிணைக்கும் திறன். திறன்களுள் பிரதானமானது இது எனலாம்.அதாவது நம் ஒவ்வொருவரிடமும் குறிப்பிட்ட திறமை மேலோங்கி நிற்கும் அல்லது ஒருவரிடமே பல்வேறு திறமைகள் குவிந்து கிடக்கும். அப்படிக் குவிந்துக் கிடக்கும் திறமைகளை முறையாக வகைப்படுத்தி செயலாற்ற வைப்பது தான் திறமைகளை ஒருங்கிணைக்கும் திறன் என்று கூறப்படுகின்றது. திறமைகளை ஒருங்கிணைப்பதில் இரண்டு வகை உண்டு. முதலாவது தனது திறமைகளை ஒருங்கிணைப்பது. அடுத்தது பிறரிடமுள்ள திறமைகளை ஒருங்கிணைப்பது.

ஒருவர் தனது திறமைகள் என்ன என்று முதலில் ஆராயும் போது தனது ஆற்றல்கள் பிறரால் பாராட்டப்படும் தன்மைகள் போன்றவற்றையே சிந்திப்பார். ஆனால் எவ்வளவு தான் திறமையானவராக இருந்தாலும் தனது பலவீனங்களை குறித்து ஒருவர் பயமும் வேதனையும் கொள்வாராக இருந்தால் அது அவரை முடக்கிவிடும். இன்னும் சிலர் தமது பலவீனங்களை குறித்து பயப்படுவதுடன் மற்றவர்களுடைய திறமைகளை குறித்து பயப்படுவர். இப்படியானவர்கள் மற்றவர்களின் திறமைகளைப் பார்த்து அஞ்சுவர். உண்மை என்னவென்றால், பலவீனம் என்று நாம் கருதுபவையும் ஒரு வகைப் பலம் தான். பெண்களிடம் இயல்பாகவே காணப்படும் அச்சமும் கூச்ச உணர்வும் அவர்களுடைய பலமே தவிர பலவீனம் கிடையாது. உரிமை மீறல் குறித்து ஒருவருடைய உள்ளத்தில் எழும் கோபம் பலமே தவிர பலவீனமில்லை. எமது பலவீனங்களை நாம் உற்று நோக்கினால் அவை தான் ஒரு மனிதனுடைய தனித்துவத்தை பிரதிப்பலிக்கின்றன. பலவீனங்கள் பலத்தின் இன்னொரு வடிவம் என்றால் அது மிகையாகாது.

தனது பலத்தையும் பலவீனத்தையும் திட்டவட்டமாக அறிந்திருக்கும் நிலை ஞானத்தின் அடிப்படை பண்பாக அமைகின்றது. எமது பலங்களும், பலவீனங்களும் எமக்குள்ளேயே இருக்கின்றன. பலவேளை பலம் என்று கருதுகின்ற விடயங்கள் எமக்கு பாதகமானவையாகவும் பலவீனம் என்று கருதுகின்ற விடயங்கள் சாதகமானவையாகவும் அமைந்துவிடுகின்றன. உயர் படிப்பு எனது பலமாக இருந்தால் அதே பலம் நான் மற்றவர்களின் ஆலோசனை கேட்பதற்கு தடையாக அமையலாம்.

தன்னையறியாமல் தனக்குள்ளே உறங்கிக்கிடக்கின்ற ஆற்றல்களை தூசித்தட்டி நிமிர்த்தி அவற்றை முழுமையாகப் பிரயோகிக்கும் போது மனிதன் தன் வாழ்வில் நிறைவையும் மகிழ்ச்சியையும் அடைகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன தொடர்பு சாதனங்களும் அவை கல்வியில் ஏற்படுத்தும் பாதிப்புக்களும்

ஜெ.சந்திரராஜ்
விஞ்ஞானப் பிரிவு, 2ம் வருடம்

"மனிதனின் படைப்புக்களால் கடவுளே வியக்கின்றான்" என்பர். இன்று செவ்வாய் கிரகத்திற்கு செய்மதியும் விண்வெளி ஓடமும் அனுப்புமளவிற்கு மனிதனின் ஆற்றல் மேம்பட்டுக் கொண்டிருக்கின்றது. இத்தனையும் மனிதனின் மற்றைய கண்டுபிடிப்பான நவீன தொடர்பு சாதனங்களால் சாத்தியமானதை நாம் மறுக்க முடியாது. எவ்வளவு தான் இவ்வாறான நன்மைகள் இருப்பினும் அதனால் பல்வேறு பாதிப்புக்கள் இருக்கவே செய்கின்றன. இப்பத்தியில் நவீன தொடர்பு சாதனங்கள் கல்வியில் செலுத்தியுள்ள பாதிப்புக்கள் பற்றி ஆராய்வோம்.

தொலைக்காட்சி இது இல்லாத வீடுகளே இன்று இல்லை எனலாம். தென்னாபிரிக்க குடியரசில் நடக்கும் காற்பந்து உலகக்கிண்ண போட்டியை இலங்கையில் அதே நேரத்தில் நேரடியாய் பார்க்கின்றோம் என்றால் அது தொலைகாட்சியினால் சாத்தியமாக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இச்சாதனம் காரணமாகவே அதிகளவில் பாதிப்பேற்படுகின்றது. தொலைகாட்சியில் ஒளிபரப்பப்படும் சினிமா மற்றும் சின்னத்திரை தொடர்களால் மாணவர்களின் ஆர்வம் இதன் மீது அதிகரிக்க கல்வி மீதான நாட்டம் குறைகின்றது. இதனூடாக பல்வேறுபட்ட கலாசார சீரழிவுகள் ஏற்படுகின்றன. அநேகரின் வீடுகளில் கேபிள் இணைப்பின் மூலம் சர்வதேச அலைவரிசைகளை பார்க்கக் கூடியதாகவிருக்கின்றது. எனினும் "டிஸ்கவரி" போன்ற பயனுள்ள தொலைகாட்சி அலைவரிசையின் நிகழ்ச்சிகளை பார்க்காமல் பயனற்ற சினிமாக்களை பார்ப்பதிலேயே அநேகர் பொழுதினை கழிக்கின்றனர். இதனையே மாணவர்களும் பின்பற்றுவதால் அவர்களின் கல்வியில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது.

தொடர்ந்து வானொலி பற்றி பார்ப்போமாயின் 24 மணிநேரமும் பாடல்களை ஒலிபரப்புவதனுடன் வீணான நகைச்சுவை உரையாடல்களை கேட்டு மாணவர்கள் வீணே பொழுதினை கழிக்கின்றனர். எனினும் அநேக வானொலிகள் பயனுள்ள பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை தருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இணையம் தொலைதொடர்பு சாதனங்களின் உச்சம் எனக்கூறலாம். இது அமுதசுரபியாகும். அதாவது எமக்கு எந்த தகவல் தேவையென்றாலும் சட்டென தேடி தரும். அது மட்டுமின்றி உலகெங்கும் வாழ்கின்றவர்களுடன் தொடர்புகளை பல்வேறு வழிகளிலும் மேற்கொள்ளலாம். ஏன் திருமணங்கள் கூட இணையமூடாக மேற்கொள்ளப்படுகின்றன. அப்படியான இது கல்வியில் எவ்வாறு பாதிப்பேற்படுத்துகின்றது என பார்ப்போம். பல்வேறு வகையான ஆபாச இணையத்தளங்கள் இயங்குவதால் மாணவரின் நாட்டம் அதன்பால ஈர்க்கப்படுகின்றது. அரசாங்கம் அவ்வாறான இணையத்தளங்களை தடை செய்தாலும் நாள்தோறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையத்தளங்கள் புதிது புதிதாய் உருவாகின்றமை கவலைக்குரியதாகும். வேகங் குறைந்த இணைய இணைப்புக்களை பொறுத்துவதால் அல்லது இணைய வடிகட்டிகளை பதிவிறக்கம் செய்வதால் மேற்படி பிரச்சினைகள் ஏற்படுவதிலிருந்து தவிர்க்கலாம். இணையத்தள வசதிகள் காணப்படுகின்ற வீடுகளில் பெற்றோர் மிக்க அவதானிப்பாயிருப்பின் நன்று. இது மட்டுமல்ல இன்று மாணவர்கள் பாடம் தொடர்பான வீட்டு வேலைகளை இணையமூடாக தரவிறக்கஞ் செய்வதினூடாகச் செய்கின்றனர். ஆசிரியர்கள் கூட இதனை ஊக்குவித்து அதிக புள்ளிகளை வழங்குகின்றனர். இது அவர்களது படைப்பாற்றலை வெகுவாக பாதிக்கிறது. உதாரணமாய் கூறுகையில் மனித இதயம் வரைந்து அதனை விளக்குக என ஒப்படையொன்று வழங்கப்படுகையில் அந்த இதயத்தை இணையமூடாக பதிவிறக்கம் செய்து அதனை பிரதியெடுக்கின்றனர். இது அவர்களது வரையும் திறனைப் பாதிக்கின்றது. எனவே ஆசிரியர்கள் இது தொடர்பில் சில கட்டுப்பாடுகள் விதிக்கலாம்.

கைத்தொலைபேசி இது தொல்லைபேசியாக மாறிவிட்டது எனலாம். இன்று சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரிடமும் பாகுபாடில்லாமல் புலங்குகின்றது. தவறிய அழைப்பு ,தவறான அழைப்புக்களால் பல்வேறுப்பட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. கட்டிளமைப் பருவ வயதில் காணப்படும் பெண்கள் இதனால் பெரிதும் பாதிப்புறுகின்றனர். அவர்களின் கல்வியும் பாதிப்புறுகின்றது.

இவ்வாறாக பல்வேறு பிரச்சினைகளை நவீன தொடர்பு சாதனங்கள் ஏற்படும் என அறிந்தும் பெற்றோர் இது தொடர்பில் கவனயீனமாயுள்ளனர். ஆகவே மாணவர் கல்வியில் அக்கறையாயுள்ள பெற்றோர்கள் நவீன தொடர்பு சாதனங்கள் தொடர்பிலும் அவதானமாயிருக்க வேண்டும்.மாணவர்களும் ஏற்படும் பாதிப்புக்களை உணர்ந்து அவதானமாக செயற்படுவதினூடாக வாழ்வில் வெற்றியடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரும் வாசிப்புத் திறனும்

ந.சாமந்தி
இரண்டாம் வருடம்
தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்

மனிதனை மனிதனாக மாற்றுஞ் சிறப்புடைய கல்வியைப் பெறுவதற்குக் காட்சி,அனுபவம், கேள்வி முதலிய பல வழிகள் இருக்கின்றபோது, அவற்றுள்ளே தலைசிறந்து விளங்குவன நூல்களே எனக்கூறின் மிகையாகாது. அந்நூல்களும் பொருளுணர்ந்து வாசிக்கும் பழக்கங்களினாலேயே பயன் கொள்ளப்படுகின்றன. எனவே, வாசிக்கும் பழக்கமே கல்வியின் ஆணிவேராகவும் அடித்தளமாகவும் விளங்குகின்றது.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது பழமொழி. எவ்வித சலனமுமற்ற இளமைப் பருவத்திற் கற்கும் கல்வி சிந்தாது சிதைவடையாது மனதிலே ஆணித்தரமாக பதியும். எனவே தான் கல்விக்கு அடித்தளமாய் அமையும் வாசிப்புப் பழக்கம் இளமையிலேயே வளர்ந்து முதிர்ச்சி பெறுதல் வேண்டும். எனவே தான் புதிய கல்விக் கொள்கையிலே வாசிப்பிற்கு அதிமுக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

மாணவர் மொழியாற்றலில் முன்னேற்றம் காண்பதற்கு முதனிலையாகவும் வாசிப்பு அமைகிறது. நூல்களை பிழையற வாசித்தல், கருத்தை விளங்கிக் கொள்ளல், விளங்கிய கருத்தை வெளிப்படுத்தல் ஆகிய திறன்களுக்கு மொழி இன்றியமையாதது. மாணவர் சிலர் பிழையற வாசிப்பர் ஆனால் கருத்தை விளங்கிக் கொள்ளார். அவர்கள் சுவையறியா நாக்கினைப் போன்றவர்கள். சிலரோ வாசித்து விளங்கிக் கொள்வர் ஆனால் விளங்கிக் கொண்டதை வெளிப்படுத்த அறியாதவர்கள். இவர்கள் கனவு கண்ட ஊமையரைப் போன்றவர்கள். எனவே வாசித்து விளங்கி வெளிப்படுத்தும் ஆற்றலே மொழியாற்றலாகும். முறையான மொழியாற்றல் கைவரப் பெற்ற மாணவனின் பேச்சிலே தெளிவும் கருத்தாழமும் காணப்படும். உள்ளங்கை நெல்லிக் கனி போல எந்தக் கருத்தையும் தெளிவாகவும் பிறர் விளங்கிக் கொள்ளுமாறு உரைப்பான். அவனது எழுத்துவன்மையானது எளிமையும் தெளிவும் கருத்தாழமும் மிக்கதாய் பொலிவுறும்.

செம்மையான வாசிப்புத்திறன் பெறாத மாணவன் பள்ளியிற் பயிலும் பாடங்களிலும் சிறப்பு நிலை அடைய முடியாதவாறு திண்டாடுகிறான். உதாரணமாக கணிதம், விஞ்ஞானம், தமிழ் மொழி போன்ற பாடங்களை கற்கும் மாணவன் ஒருவன் விவேகியாக இருந்தாலும் அவனிடம் சீரிய வாசிப்புத்திறன் இல்லையேல், அவன் அவ்வப் பாடநூல்களையோ, அவை சம்பந்தமான வினாக்களையோ விரைந்து விளங்குமாற்றல் இல்லாதவனாய், தனது பூரண ஆற்றலை வெளிப்படுத்த முடியாதவனாகின்றான். அவனது விவேகத்தினால் முழுப்பயன் பெற முடியாதவனாகின்றான ஆனால், வாசிப்புத்திறன் பெற்ற மாணவன் விவேகம் குறைந்தவனாயினும் அவன் வினாக்களை விரைவாக வாசித்து விளங்கித் தெளிவுற விடையெழுதிச் சிறப்புச்சித்தி பெறுகிறான். எனவே பள்ளியிற் பயிலும் பாடங்களிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவன் திறமைகாட்டுவதற்கும் வாசிப்புத்திறன் இன்றியமையாதது.

பாடசாலையிற் கல்விப்பயிலும் பாடங்களோடு மாத்திரம் மாணவனின் கல்வி முற்றுப் பெறுவதில்லை கரையற்ற கல்வி கல்விக் கடலிலுள்ள சின்னஞ்சிறு துளியே பள்ளியிற் பயிலும் கல்வி. அக்கல்வியால் ஒரு மாணவனது அறிவு வளமானது பெருகிவிடும் என எண்ணுவது பகற்கனவு. எனவே மாணவன் பாடநூல்களைக் கற்பதோடு அமையாது பிறபல நன்நூல்களையும் வாசித்தல் வேண்டும். "கண்டது கற்கப் பண்டிதனாலான்" என்பது ஒரு பழமொழி. நல்லனவெனக் கண்டவற்றைப் படிக்க வேண்டுமென அப்பழமொழி கூறுகின்றது.

வாசிப்புத்திறனிலே தேர்ச்சி பெற்ற மாணவனின் உள்ளம் தணியா பசி போன்றது. எத்தனை எத்தனை நூல்கள் வாசித்தாலும் அவனது பசி அடங்காது. மணிமேகலை எனும் காப்பியத்திலே யானைத்தீப்பசி எனும் நோய்கொண்ட காயகண்டிகையானவளுக்கு எவ்வளவு உணவை எந்த நேரத்திற் கொடுத்தாலும் அவளது பசி அடங்காது. ஒவ்வொரு மாணவனுக்கும் காயகண்டிகையைப் போல வாசிப்பில் யானைத்தீப்பசி தோன்ற வேண்டும். அவ்வாறான எண்ணம் தோன்றின் அவன் கிணற்றுத் தவளைநிலை போய் உலகெங்கும் ஓய்வின்றி உலாவிவரும் விநோத பறவையாய் மாறிவிடுவான். ஆழ்ந்தகன்ற அறிவுடைய மாணவனானவன் அறிவு மாத்திரமன்றி உள்ளத்தால் உயர்ந்தவனாவான். வாழ்வினையும் வாழ்வின் விழுமியங்களையும் புலப்படுத்தும் இலக்கியங்கள், கட்டுரைகள், கவிதைகள் முதலியவற்றை படிப்பதால் வாழ்வில் தான் கண்டறியாத புதிய புதிய மாமனிதரோடு பழகுகிறான். அவர்களின் குணாதிசயங்களை உயர்கிறான். வாழ்வினை பல கோணங்களில் காணுகிறான். பற்பல புதிய அனுபவங்களை பெறுகிறான். நல்லன எவை தீயன எவை எனப் பகுத்துணரும் பண்பினை பெறுகிறான். இதனால் அவனது உள்ளம், மற்றும் அறிவாற்றல் விரிவடைகிறது! பண்படுகிறது எதிர்கால வாழ்வுக்குத் தன்னை ஆயத்தஞ் செய்து கொள்ளும் உன்னதநிலை உண்டாகிறது.

மாணவர்களே எதிர்காலச்சிற்பிகள் எதிர்கால தலைவர்களும் ஆவார். எதிர்கால குடிமக்களும் அவர்களே ஆவார்.அவர்கள் அறிவுச் செல்வர்களாய் உள்ளத்தால் உயர்ந்தவர்களாய் உருவாக வேண்டுமானால் அவர்கள் வாசிப்புத் திறனை விருத்தி செய்தல் வேண்டும். வாசிப்புத்திறன் கைவரப் பெற்ற மாணவன் கல்வியென்னும் நீள் வழியில் அரைப்பங்கை கடந்தவனாகிறான்.அன்றியும் முழுமையான மனித வளர்ச்சிக்குத் தன்னைத் தானே ஆயத்தமாக்கியவனுமாகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித்துறையில் தகவல் தொடர்பாடல் சாதனங்களின் பங்களிப்பு

க.பிரசன்னா
இரண்டாம் வருடம்
தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்

நவீன உலகில் சகல துறைகளிலும் ஏற்படும் முன்னேற்றத்தைப் பற்றிக் குறிப்பிடும் கட்டங்களில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத் துறையை பற்றிய கருத்துக்களை பகிர்ந்துக் கொள்ளாமல் இருக்க முடியாது. பாதங்களால் மனிதன் நடந்து திரிந்த காலம் படிப்படியாக முன்னேற்றம் கண்டு இன்று சந்திரனில் கால்தடம் பதித்து உலாவித் திரிந்த நிகழ்வினை எமது வீட்டு வரவேற்பரையில் கண்டு களிக்கும் அளவிற்கு தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் வளர்ச்சி கண்டிருக்கின்றது.

கல்வித்துறையில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் நாளுக்கு நாள் வளர்ச்சி பெற்று வருகின்றது. இதன் மூலம் கல்வித்துறையில் பாரிய வளர்ச்சி அடைந்து வருகின்றது. அதாவது கல்வி பரப்பு, ஆசிரியர் பயிற்சி, தொழிற்புலமை, அபிவிருத்தி செலவுச் சிக்கனம், மாணவர்களின் ஈடுபாடு ஆகியன மேம்பட்டு வருவதை காணக்கூடியதாக உள்ளது.

இன்று ஒரு ஆசிரியர் வகுப்பறையில் மாணவருக்கு கற்பித்தலை மேற்கொள்வதற்கு உதவுவதற்கு பல்வேறு பொருட்களும் உபகரணங்களும் காணப்படுகின்றன. வகுப்பறை சூழலுக்கு வெளியிலும் பல்வேறு சாதனங்கள் காணப்படுகின்றன. அவை நாளுக்கு நாள் அபிவிருத்தி அடைவதும் புதுப்புது சாதனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருவதையும் நாம் அவதானிக்கின்றோம். அதேபோல் தான் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப சாதனங்களும் நாளுக்கு நாள் வளர்ச்சி கண்டு வருகின்றது. இவ்வாறாக காணப்படுகின்ற தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப சாதனங்களை கற்றல், கற்பித்தலுக்கு வினைத்திறனாக பயன்படுத்தும் போது மாணவனுக்கு கற்றல் செயற்பாட்டில் ஆர்வம் அதிகமாகின்றது. அதுமட்டுமன்றி ஆசிரியரின் தொழிற் புலமை அபிவிருத்திக்கும் காத்திரமான பங்களிப்பை வழங்குகின்றது. வகுப்பறையில் கற்றல், கற்பித்தல் செயற்பாடானது பின்வரும் அம்சங்களின் பொருத்தப்பாட்டுடனே நிகழ்கின்றது.அவையாவன

1.மாணவர் - கற்பவர்

2.கற்பிக்கப்படுபவை - பாடவிடயங்கள்

3.அடிப்படை மூலம் - கல்வி பெறும் விதம்.

மேற்குறித்த அம்சங்களின் படி மாணவரை அதாவது கற்பவரை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் எமது கல்வி முறையில் பல்வேறு வழிகளில் தொடர்பாடற் சாதனங்களை பயன்படுத்தி பயன் பெறலாம். உதாரணமாக தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களை இலக்க முறை தொழிநுட்பங்களைப் பயன்படுத்தி (Digital Technology) கற்றல், கற்பித்தல், மேம்பாட்டிற்கு பயன்படுத்தலாம், ஒளிபரப்பு தொழில் நுட்பத்தை கற்பித்தல் முறையில் பயன்படுத்தல், வகுப்பறையில் கணிணியைப் பயன்படுத்தி புதிய விடயங்களை மாணவர்களுக்கு வழங்கல், வலைப்பின்னல் முறைமையை அபிவிருத்தி செய்தல், கற்றல் முகாமை முறைமையை பயன்படுத்தல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

மேலும் கற்பித்தல் சாதனங்களாக தொடர்பாடல் சாதனங்களை வகுப்பறையில் பயன்ப்படுத்தும்போது குறித்த விடயத்தில் மாணவன் ஈர்ககப்படுகின்றான். உதாரணமாக பல்லூடகம் மூலம் தகவல்களையும், படங்களையும் காட்சிப்படுத்தும் போது மாணவன் சிறப்பான தெளிவை பெற்றுக் கொள்கின்றான். அதுமட்டுமன்றி அவ் ஊடகங்களை பயன்படுத்துவதிலும் மாணவன் அக்கறை செலுத்துகின்றான். தற்காலத்தில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் தேவை கருதி நகரங்களில் நிறைந்த வசதிகளுடன் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் கிராமங்களில் வசதிகள் அற்று கல்வி பயிலும் மாணவர்களுக்குமிடையில் வேறுபாடு இருக்கக்கூடாது என கருதி கல்வி அமைச்சு SCHOOL NET கல்லூரி வலையமைப்பை பயன்படுத்தி மாணவர்கள் மத்தியில் தொடர்பை ஏற்படுத்தி வருகின்றது. எங்கும் தொழிநுட்பம் பரவி காணப்படும் தற்காலத்தில் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டிலும் தகவல் தொடர்பாடல் சாதனங்களை பயன்படுத்துவதன் மூலம் சிறந்த பலாபலன்களை பெறலாம் என்பது மறுக்க முடியாத உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியார் கவிதைகள் ஒரு நோக்கு

ஸ்ரீராம் துஷ்யா
இரண்டாம் வருடம்
தமிழ்ப்பிரிவு

தமிழகம் தமிழுக்கு தரணியில் உயர்வை நல்கும்

தலைவனை எண்ணித் தவம் கிடக்கையில்

இலகு மொழியில் கவி புணைய

பாரதி எனும் பெரும் புலவன் தோன்றினான்!

தமிழிலக்கிய வானில் சுடர் விட்டு பிரகாசிக்கும் நட்சத்திரமாக பாரதி திகழ்கின்றான்.நாட்டு விடுதலை என்ற புதியப்பாடுப் பொருளை தந்ததோடு, தமிழ் கவிதையாகிய பாட்டு விடுதலையும் தந்தவன் இவனே.

அடிமைத்தன எதிர்ப்பு, வீரம், தமிழ்ப்பற்று, பெண்ணுரிமை உணர்வு, தொழில் வளர்ச்சி, தேசிய உணர்வு என்பனவெல்லாம் பாரதியின் கவிதைகளில் பளிச்சிடுகின்றன. மொழி நடையில் எளிமையும் ,கருத்துக்களிலும், பாடுபொருளிலும் புதுமை, கவிதையின் அமைப்பில் நாட்டுப்புற பாடல்களையும் எடுத்து வடிவமைக்கும் படைப்பு நோக்கு, சொற்களின் செறிவோடு உண்டாகும் நளினம் அனைத்தும் பாரதியின் தனித்தன்மைகளாகும்.

“பைந்தமிழ் தேர்பாகன் - அவனொரு செந்தமிழ் தேன்

சிந்திக்கும் தந்தை குவிக்கும் கவிதைக்குயில்!

இந்நாட்டினை கவிக்கும் பகையை கவிக்கும் கவிமுரசு!

நிடுதுயில் திங்கப் பாடிவந்த நிலா!

என்று பாரதியை உணர்ந்து அறிந்து அவர் கவிதைகளில் லயித்த பாரதிதாசனின் கூற்றாகும்.

“காலைப்பிடித்தேன் கணபதி நின்பாதங் கண்ணிலொற்றி

நூலை பலபல வாகச் சமைத்து நொடிப்பொழுதும்......”

பாரதியார் அருளிய தெய்வப்பாடல்கள் என்ற பிரிவிலுள்ள தோத்திரப்பாடல்கள் மொத்தம் எழுபத்தேழு. இப்பாடல்கள் அனைத்தும் பக்தி மணம் ததும்பும் பாடல்களாகவே காணப்படுகின்றன. இப்பாடல்கள் பாரதியின் இறைபக்தியையும், தேசப்பக்தியையும் பறைசாட்டுபவையாகவே காணப்படுகின்றன.

பக்தி வாழி! பலபல காலமும்

உண்மை வாழி! ஊக்கம் வாழி!

என்று பாரதி, மக்கள் பக்தியுடனும், உண்மையுடன், ஊக்கத்துடனும் வாழ வேண்டும் என்பதை உணர்த்துகின்றார். முழுமுதற் கடவுள் விக்ன நாயகனை தொடர்ந்து சரஸ்வதி, லஷ்மி, சக்தி, முருகன், கிருஷ்ணன் என பல்வேறுப்பட்ட தெய்வங்களையும் விழித்துப் பாடியுள்ளமை பாரதி பாடல்களுக்கே மணி மகுடமாக காணப்படுகின்றது.

“அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே

இச்சகத்து ளோரெல்லாம் எதிர்த்து நின்ற போதிலும்

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு மோகத்தினால் ஏற்படும் விளைவுகள்

வி.விஜயராணி
ஆரம்பப்பிரிவு

மனிதன் தனது இருப்பினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பல்வேறு நடவடிக்கைகளை தன்னக்கத்தே கொண்டு காணப்படுகின்றான். அதில் முக்கிய இடம் வகிப்பது சமூக அந்தஸ்த்தினை தக்கவைத்துக் கொள்ளல் ஆகும். மனிதன் மிகுந்த செல்வத்தினை கொண்டிருந்தால் மாத்திரமே சமூக அந்தஸ்த்தை தன்னகத்தே தக்கவைத்துக் கொள்ளலாம் என எண்ணி வெளிநாடுகளுக்குச் சென்று செல்வத்தினை தேட முற்படுகின்றான். "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என எமது முன்னோர்களில் ஒருவரான ஔவையாரின் கூற்றிற்கிசைவாக தற்கால எமது இளைய, மற்றும் இடைநிலை வயதுடைய ஆண், பெண் ஆகிய இருபாலாரும் கடல்கடந்து பொருளீட்ட முனைகின்றனர். இதனால் பெரும் தீய விளைவுகளே ஏற்படுகின்றன.

இன்று இலங்கையில் பெரும்பாலானோர் வெளிநாடுகளுக்கே செல்கின்றனர். பல தொண்டு நிறுவனங்கள் சுயதொழில் பயிற்சிகளை வழங்கியுள்ள போதும் எமது மக்கள் அதில் ஆர்வமின்றி வெளிநாட்டிலே மோகம் கொண்டு செல்கின்றனர். இதில் மலையக சமூகம் பெரிதும் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளது. அந்த வகையில் இளம் வயது பெண்கள் வெளிநாட்டு தொழிலில் ஈடுபாடுகொண்டு செல்வதன் காரணமாக அவர்கள் சமூகத்தில் தனது அந்தஸ்த்தை இழக்கின்றனர். அத்தோடு அவர்கள் பெரும் துஷ்பிரயோகங்களுக்கும் உட்படுகின்றனர். இளம் வயது பெண்களின் கண், இதயம், சிறுநீரகம் போன்ற பகுதிகளை சத்திர சிகிச்சைகளின் மூலம் எடுத்து விற்கும் நிலையும் காணப்படுகின்றது. மேலும் அனுபவமற்ற யுவதிகள் வெளிநாடுகளுக்கு வேலை நிமித்தம் செல்கின்றனர். இவர்கள் பெரிதும் தொழில் தருனரின் துன்புறுத்தல்களுக்கு உட்படுகின்றனர். அண்மை காலத்தில் அனைவராலும் பேசப்பட்ட ஒரு விடயம் இலங்கையிலிருந்து தொழில் நிமித்தம் வெளிநாடு சென்ற யுவதி ஒருவருக்கு "மரணதண்டனையை " வெளிநாட்டு நீதிமன்றம் அறிவித்திருந்தமை ஆகும்.

இதற்கு காரணம் போதிய தொழில் அனுபவமின்மையே. இன்றைய இளம் யுவதிகள் வெளிநாடுகளுக்கு சென்று திரும்புவார்களாயின் அவர்கள் சமூகத்தில் பெரிதும், பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்கு உட்படுகின்றனர். அத்தோடு நடுத்தர வயதுடைய மற்றும் சிறு பிள்ளைகளை உடைய தாய்மார்களும் வெளிநாடுகளுக்கு தொழில் நிமித்தம் செல்லும் நிலை மலையகத்தில் பெரிதும் காணப்படுகின்றது. இவ்வாறான பெண்கள் இளம் வயது யுவதிகளை தந்தையின் பாதுகாப்பில் மற்றும் உறவினர்களின் பொறுப்பிலும் விட்டுச் செல்கின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பிள்ளை சில தவறான நடத்தைகளுக்கு உட்படுத்தப்படுவதுடன் கல்வியையும் பெற முடியாத நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

சிறு வயது குழந்தைகளை ஏனையவர்களின் பொறுப்பிலும், விடுதிகளிலும் தங்க வைத்துவிட்டு வெளிநாடுகளுக்கு பெருவாரியான பெண்கள் செல்கின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்கள் பூரண அன்பினை பெறாது சில தவறான பழக்கவழக்கங்களை உடையவர்களாக சமூகத்தில் காணப்படுகின்றனர். இன்னும் சில சிறுவர்கள் தனியார் நிறுவனங்களிலும், நகர்புறங்களில் வீட்டு சிற்றூழியர்களாகவும் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். அத்தோடு பெருந்தொகையான தோட்டப் புறங்களில் சிறுவர்கள் வாகன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்துனர்களாக தொழிற்பட்டுக் கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாவுள்ளது.

மேலும் பெரும்பாலான பெண்கள் வெளிநாடுகளுக்குச் சென்று விடுவதன் காரணமாக அவர்களுடைய கணவன்மார்கள் மதுபானத்தில் அதிக ஈடுபாடு கொண்டு நிரந்தரமாக மதுவுக்கு அடிமையாகி விடுகின்றனர். அத்தோடு பலர் நோய்வாய்பட்டு பராமரிப்பாறின்றி இறக்கும் நிலைக்கும் உட்படுகின்றனர். மேலும் பலர், பல திருமணங்கள் முடித்துக் கொண்டு குடும்பத்தை சீரழிக்கின்றனர்.

பல புதிய, புதிய நோய்களின் ஆதிக்கத்திற்கு உள்ளாகின்றனர். பல பெண்கள் அறிமுகமில்லாதவர்களிடம், பணத்தினையும், கடவுச்சீட்டுக்களையும் கொடுத்து அதனை முற்றாக இழக்கின்ற நிலைக்கும் உள்ளாகின்றனர். பல பெண்கள் அறிமுகமில்லாதவர்களின் உதவியை நாடி செல்வதன் காரணமாக பல பெண்கள் வெளிநாடுகளுக்கு ஊழியர்களாக விற்கப்பட்டு, மீண்டும் திரும்பி வர முடியாத நிலைக்கு ஆளாகின்றனர்.

தற்கால இளைஞர்களும் வெளிநாடுகளுக்கு தொழில் நிமித்தம் செல்கின்றார்கள். பெரும்பாலானோர்கள் பெருந்தொகையான பணத்தினை முழுமையாக இழந்து நிர்க்கதியான நிலைக்கு ஆளாகின்றனர். மேலும் சிலர் கஸ்ட்டமான தொழில்களுக்குச் சென்று பல இன்னல்களை அனுபவிக்கின்றனர். கட்டிட நிர்மாண பணியாளர்களாக, உதவியாளர்களாக செல்வோர் உயரமான கட்டிடங்களிலிருந்து விழுந்து உயிரிழந்தும் போகின்றனர். சில ஊனமுற்றவர்களாக ஆகக்கூடிய நிலையினையும் காணக்கூடியதாக காணப்படுகின்றது.

பெண்கள் வெளிநாடுகளுக்கு தொழில் நிமித்தம் செல்வதை பல தொண்டு நிறுவனங்கள் எதிர்க்கின்றன. நமது அரசும் எதிர்க்கின்றது. இருந்தபோதும் இந்நிலை மாற்றமுற்றாக இல்லை. இந்நிலை தொடர்ந்தும் காணப்படுகின்றது.

வெளிநாட்டு மோகத்தினால் பெருவாரியான கலாசார சீர்கேடு ஏற்படுகின்றது. தமது நாட்டின் கலாசாரத்துடன் வெளிநாட்டு கலாசாரமும் கலந்துவிடுகின்றது. இன்றைய மலையக சமூகத்தில் பெரும்பாலான பெண்கள் அநாகரிகமான ஆடை அலங்காரங்களை அணிவதை கண்கூடாக காணக்கூடியதாக உள்ளது.

பொதுவாக நோக்கின், வெளிநாட்டு மோகத்தினால் ஒவ்வொருவரும் தனிப்பட்ட ரீதியின் அந்தஸ்த்தில் உயர்நிலையை ஓரளவுக்கு ஏற்படுத்திவிடினும் பெரும்பாலான தீய விளைவுகளையே ஏற்படுத்துகின்றது. எனவே இதன் தாக்கத்திற்கு எமது இலங்கை நாடும் உட்பட்டே காணப்படுகின்றது. அத்தோடு எமது மலையக சமூகத்திலும் பல தீய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளமையை அறியக்கூடிதாக உள்ளது எனில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேயிலைச் செடியின் விமோசனம்

இரா. அபிராமி
இரண்டாம் வருடம்
தமிழ்ப் பிரிவு

பாடுபட்டு பறித்தெடுத்து
பலர் பருக பதனிட்டு – பக்குவமாய்
உனை வழங்கி விட்டார் தேயிலைக்
கொழுந்தே!

மலையகத்தில் பிறந்த உனை
மதிப்பாக பொதியிட்டு
மறுதேசம் பறக்கச் செய்து
மாற்றாரையும் அருந்தச் செய்தவர்
எம் தொழிலாளரே!

அன்பாக உனை வருடி
ஆதரவாக சேகரித்து
இடுப்பில் ஏந்திய கூடைக்குள்
கங்கை சுமந்த ஈசன் போல ஏந்தி

உஷ்ணத்தை உனக்கூட்டி
ஊட்டமாய் உனை ஆக்கி
எப்போதும் எந்நொடியும்
ஏக்கமாய் வாழ்ந்து கொண்டிருக்கும்

ஐயோ! எப்படி எழுதுவேன்
அந்த ஒற்றையடிக் குடித்தனத்தை?
ஓலமிட்டு வாழ்ந்து வரும் எம்
தொழிலாளர்கள்!

வாலிபரும் நங்கையரும்
வட்டமிடும் குழந்தைகளும்
வாரி உனை அருந்தினாலும்
உன் விமோசனம் –
உனை தீண்டும் எம் தொழிலாளரின்
விரல் நுனியிலே உள்ளது,
என்பதை நான் கூறிய பிறகா
நீ அறிந்து கொண்டாய்.

# மலையகத்தின் மாறா அவலம்............

M.A. ஒஷின் செல்வராஜ்
இரண்டாம் வருடம்
விஞ்ஞானப்பிரிவு

காலங்கள் மாறினாலும்
காட்சிகள் மாறினாலும்
அரசியல் வீழ்ந்தாலும்
ஆட்சிகள் நிலைத்தாலும்
மாற்றங்கள் காணவில்லை
மலையகத்தின் சாரலிலே......

கோண கோண மலைகளும்
கோணாத மனங்களும்
பச்சிலைத் தேயிலையும்
பறித்துப் பழகிய கரங்களும்
இன்னும் மாற்றங்களை
இதுவரை காணவில்லை.......

வாயினிலே வெற்றிலை
வகையாகப் போட்டப்படி
முதுகினிலே கூடையுடன்
முக்கி முக்கி மலையேறி
பறிக்கும் கைகளுக்கு
பஞ்சமில்லை மலையகத்தில்.....

மடுவத்தில் தூளியாட
தாய் மனதில் பிள்ளையாட
பள்ளிக்கு போன பிள்ளை
பசியுடனே காத்திருக்க
மாலையிலே துட்டு வாங்கி
மடுவம் நோக்கி நடக்கயிலே
மாலை அழகெல்லாம்
சிரிக்குதடி அவளைப் பார்த்து......

விண்மீன்கள் கண்சிமிட்ட
விட்டில்கள் துணையுடனே
கையிலே பந்தத்துடன்
கால் தவறும் நடையும்
கண்ணிலே கலக்கமும்
வாயினிலே போதையும்
வாழ்க்கை இதுவென்று
வாழும் ஆண்களுக்கு
குறைவில்லை மலையகத்தில்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பலிலே கூட்டிவந்த கங்காணியாரே..

V.கமலாதேவி
சமூக விஞ்ஞானப்பிரிவு
இரண்டாம் வருடம்

கப்பலிலே கூட்டிவந்த கங்காணியாரே!
தலைவா கங்காணியாரே! ஒங்க
கப்பலுந்தான் கவுந்து போச்சு
கங்காணி–யாரே! ஐயா கங்காணியாரே!

தேயிலை தூருல தேங்கா, மாசி
இருக்குதூனீங்க நீங்க
தெம்புடனே எல்லாருமாய்
இங்கு வந்தோமே நாங்க

கல்லு மலை சுரங்கம் வெட்டி
கருத்த ரோட்டு பாலம் கட்டி
கஷ்டப்பட்டு ஒழைச்சமையா
கங்காணியாரே! ஐயா கங்காணியாரே!

இந்தியாவில் பெண்ணைக் கட்டி
இலங்கையில் மண்ணை வெட்டி
காடு மலை ஏறி கரடு முரடு தாண்டி
கட்ட வெயிலில் மேனி கருகி
கஷ்டப்படுகிறோமய்யா கங்காணியாரே!
எங்க கஷ்டமெல்லாம்
நீரிலே போட்ட உப்பு போல
எப்ப தீரும் கங்காணியாரே!

# நேசக் குருவிகள்

R. வசுமதி
சமூகவிஞ்ஞானப் பிரிவு
இரண்டாம் வருடம்

பக்கத்து வயலின் பசுமை
அதனை பார்க்க பசியாற பல குருவிகள்
வந்து போகும்.
பூத்துக் குலுங்கும் வயல் கண்டு
குருவிகள் புதுமையுடன்பேசிக் கொள்ளும்.
ஆவணிதான் பயிர் அறுவடைக் காலம்
ஜோடிக் குருவிகள் நெல் மணிகள் மேலிருந்து
காதல் இரகசியங்களை
காதலோடு முணுமுணுக்கும்.
கொண்டைக் குருவி
நெல் மணிகளைக் கொறித்து
வாயில் ஊட்டும் இப்படியாக பல குருவிகள்
வந்து பண்பாடும்
பகலின் அஸ்தமனம் அறியாமல்
உண்டு மகிழ்ந்து உறவாடும்.
ஆவணியும் முடிந்தது. அறுவடையும் ஓய்ந்தது.
வயலோ நெற்பட்டை நிறைந்தது
நீரில்லா நிலமாச்சு – ஜோடிக் குருவிகள்
தூரத்து வயலின்
பசுமை கண்டு பறந்து போகும்
இந்த பக்கத்து வயல் மறந்து போகும்!
ஏனோ, ஒரு குருவி மட்டும் தினமும் வந்து போகும்
இரைத் தேட அல்ல! சற்று இளைப்பாற
அது தான் அந்த வயலின்
நேசக் குருவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் தான்

**மா.ரம்யா**
தகவல் தொடர்பாடல்
தொழினுட்பப்பிரிவு

நாரிப்போன ஈனப் பிழைப்பில்

நாகரீகம் காண்பதும்

நாங்கள் தான்

நாளும் கண்ட

இப்பாட்டில்

நாயம் சொல்லி

தேகம் தேய்வதும் நாங்கள் தான்

மாற்றம் தேடி

மனித இனம் திரண்ட போதும்

'நம்மாளு' என்று சொல்லி

நம்மவரை இருக்கையிலும்

இருத்தி வைப்பதும்

தினம் நாங்கள் தான்

பின்

நாளை.....

என எண்ணி

நான் பார்ப்பதுவும்

நாங்கள் தான்......

# மலையகமும் எங்கள் கல்லூரியும்

**இரா.சரிதா**
சங்கீதப் பிரிவு
இரண்டாம் வருடம்

சில்லென்ற தென்றல் காற்று

சீண்டிப் பார்க்க

மலைகளின் மத்தியில் மலர்ந்த

மலர்சோலை எங்கள் கல்லூரி

மலையகத்தின் இருளை போக்கி

மாணவர்களின் அறிவு செழிக்க

அன்பான ஆசான்களை உருவாக்கும்

அழியாத நந்தவனம் எங்கள் கல்லூரி

இருபது ஆண்டுகள் செழிப்பில்

பதினாறு தொகுதி மலர்கள்

மலையக அன்னை கல்வியில் மிளிர

மனமுவந்து பரிசளிக்கப்பட்டன.

வாண்மைத்துவமிக்க ஆசான்களை

வளர்த்தெடுக்க முனைகிறது

மலையக கல்வியை

மலர்ந்திடச் செய்ய துடிகிறது.

வாழ்க எம் கல்லூரி

வளர்க எம் கல்லூரி

மலையக வளர்ச்சிக்காய்– இம்

மண்ணில் அயராது உழைத்திடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழைக் காப்போம்

S.ரஞ்சனி
நடனப்பிரிவு, இரண்டாம் வருடம்

விழி திறந்து உணவென்று உறக்கமென்றோம்

வேறென்ன உலகமதில் தமிழா, கண்டோம்?

பழுத்த மரங்களை நோக்கியங்கு பறவைகள் சென்று

பகையின்றி அவையினமாய் வாழும் போது

அழிந்தொழியும் சதையோடு ஆண்மைபேசி

அவையினிலே உணர்வற்று வாடுகின்றோம்.

மொழி உணர்வை இரத்தத்தின் முறுக்கிலேற்றி

முடி புனைந்து உன் ஆட்சி மலரச் செய்ய

வழியென்ன கண்டோம் நாம், தமிழர் இன்றே

வாழ்வாங்கு எம்மொழியை வாழ வைக்க

வழிபெற்று நாமெழுந்து, வியன் உலகில்

வீரநடை போட்ட மொழியை வாழ வைப்போம்

பழியெமக்கு வேண்டாமிப் பிறமொழியை

படியோமே பதவிக்காய் தமிழைக்காப்போம்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளையாவது விடியுமா?

க.கார்த்திக்
ஆரம்பப்பிரிவு
இரண்டாம் வருடம்

பனித்துளியின் முத்தத்தில் பச்சை இலைகள்
தலைகவிழும் பசுமையான மலையகம் நான்.....!

பறக்க முயன்ற பட்டாம் பூச்சியின் பட்டு சிறகில்
சிந்திய நீர்துளியின் பாரம் தாங்காமல் தவிப்பது போல்
தவிப்பதுவும் நான் தான்.....!

என் எண்ணங்களை விதைத்து விருட்சமாய் வளம் பெற,
நல்ல விளைநிழத்திற்காய் காத்திருப்பதுவும் நான் தான்.....!

நீண்டதொரு வரலாறு நிலைத்து வந்த போதிலும்
நிர்கதியாய் நிற்கும் நிலைக்களைந்து போகாதோ? என
ஏக்கம் கொண்டு நிற்பதுவும் நான் தான்.....!

தென்றல் காற்று சிறகொடிந்து போனது போல்
உரிமை தாகம் தனிய காத்திருப்பதுவும் நான் தான்.....!

மானுடமே...........!
அரியாசனம் ஏற அவா கொண்டு ஏங்குகின்ற எம்மவரின்
உள்ளங்களை அறியாத சனங்களாய்
இருப்பதுவும் ஏனோ?

மலையக வாலிப சோலைகள் மலர,உங்கள் இதய
ஜன்னல்களை இனியாவது திறந்து வையுங்கள்

நாளைய விடியலாவது நமக்காய் விடியும் என்ற
நம்பிக்கையுடன் வசந்த கால வரவுக்காய்
காத்திருக்கு மலையகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தி கெட்ட மலையகம்

து.லாவண்யா காயத்ரி
சங்கீதப் பிரிவு
இரண்டாம் வருடம்

ஆங்கில ஆட்சி காலத்தில்
ஏழை பாலை இந்தியர்
கோப்பித் தோட்ட வேலைக்கு
கொத்தடிமைகளாய் வந்தனர்!

கோப்பி மரங்கள் பட்டுபோய்
தேயிலைச் செடிகளாய் மாறின,
தோட்டங்களும் பெருகின
தொழிலாளரும் பெருகினர்!

பிரச்சினைகள் பெருகின
போராட்டங்கள் வெடித்தன
தொழிற்சங்கங்கள் தோன்றின
தலைவர்களும் தோன்றினர்!

அதிகாரம் வலுத்தது
அரசியலும் புகுந்தது
கட்சிகள் பல தோன்றின
கூறுகளாய் மக்கள் பிரிந்தனர்!

போட்டிக்குழுக்கள் தோன்றின
காட்டி கொடுப்பும் வளர்ந்தது
வெட்டு குத்துகள் ஏற்பட்டு
எம் சமூகம் வெட்கி தலை குனியுது!

புத்தி கெட்ட மலையகம் - ஏதும்
புரியாமல் குழம்பி தவிக்குது
கவ்வாத்து கத்தியை தீட்டியோர்
புத்தியை தீட்ட மறந்ததேன்?

# ஸ்ரீபாத கல்வியற் கல்லூரி

பெ.திருலோகசுந்தர்
இரண்டாம் வருடம்

ஈழத்து மண்ணிலே!
மலையகத்து கண்ணிலே!
மலர்ந்த சோலை
ஸ்ரீபாத கல்விச்சாலை

மக்களுக்கு விழிப்பூட்ட
மாணவர்களுக்கு களிப்பூட்ட
கலைகளால் அமைந்த
கல்வியற் சாலை

தேயிலை வாசத்தில்
உறவுகளின் பாசத்தில்
சமுதாய நேசத்தில்
உருவான கூடம்

மஞ்சள் நிற
பூ கொண்டு
மலைகள் எங்கும்
பசுமை கொண்டு
பாதை எல்லாம்
பனை மரமாய்
பல மரம் கொண்ட
பாவலர் சாலை

தமிழோடு ஈழத்தில்
சிங்களத்தை இணைத்து
சிங்கார மெட்டமைக்கும்
சிங்கார நாடுமிது
சிறப்பான கல்வியற்
சாலை இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி


**ஜோ.மெக்கீனா**
தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்
இரண்டாம் வருடம்


மலையகத்தின் விடிவெள்ளி - நீ
நீ உதித்தால் விடுதலை
பெறும் காரிருள் மலையகம்
உதித்திடு புது பொழிவோடு

மூன்றெழுத்து ஒளிச்சுடர்
மலையக விடுதலை நோக்கி
படை திரட்டி மக்களை
வழி நடுத்த உதித்திடு இன்றே.

உறவுகள் உறைவிடம் இன்றி
நீ இருந்தாலும்
மலையகமே நீ விடுதலை பெற
விடிவெள்ளியாய் உதித்திடு கல்வி அன்னையே.

இடர்கள் கொண்ட மலையக
வாழ்வை கடந்து
புதுயுகம் படைக்க படைகளாய்
புறப்பட வழிகாட்டு அன்னையே

கானல் நீரான எதிர்காலத்தை
நிகழ்காலமாய் அனுபவித்திட
மாற்றியமைப்போம் மலையகத்தை
கல்விக் கொண்டு இன்றே.

# உளியின் வலி


**சி.தயாளன்**
தமிழ்ப் பிரிவு
இரண்டாம் வருடம்


செதுக்கப்பட்ட
சிலை கண்டு
பலர் ரசிப்பதுண்டு
சிற்பியை விட
சிலைகளின்
உருக்களை வடிக்க
துணை நின்ற
உளியின் வலியை
எவருமே
உணர்வதில்லை

தப்பு செய்தவனை விட
தப்பு செய்ய
தூண்டியவனுக்கு
தண்டனை அதிகம் என்பர்

சிற்பிக்கும்
சிலைக்கும்
கிடைக்கும் பாராட்டு
உளிக்கு
ஒன்றும் இல்லை

கல்லுக்கு
உயிர் கொடுத்தவன் சிற்பி
துணையாய் நின்றது உளி
சிலை முழுமையடைய
சிற்பியோடு உளியும் உழைக்கிறது.
உருவம் ஆனதும்
பெருமை
உளிக்கில்லை சிற்பிக்கே
எஞ்சியது
அடியும் வலியும் தான்
உழைப்பு நிறுத்தப்
போராட்டத்தை
உளிகள்
தொடங்காத வரை........




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நனவாகப் போகும் கனவுகள்

ஆ.கோகிலவாணி
தகவல்தொடர்பாடல் தொழிநுட்பப்பிரிவு
இரண்டாம் வருடம்

சேவலும் கூவியது
கதிரவனும் கிழக்கில் உதித்தான்
நனவாகும் என் கனவுகளை
கண்டு,
திறக்க விரும்பாத விழிகளை
ஒரு வேளை
உணவிற்காய்
சட்டெனத் திறந்தாள்

மலை மீதேறி
ஒரு பிடி இலையைக் கிள்ள
எண்ணும் போதே......
ஒரு பக்கம்
உணவையும் படிப்பையும்
நினைத்து ஏங்கும் பிள்ளைகள்
மறுபக்கம்
மதுபானத்தை நினைத்து
ஏங்கும் கணவன்
தன் விதியை நினைத்து
தன்னுள்ளே
நகைத்துக் கொண்டாள்.......

எட்டு முதல் நான்கு மணி வரை
மலையில் போராட்டம்
வரும் வழியில்
தலையில் விறகும்
கடன் வாங்கி சமைக்க
ஏதாவதும
மழைக்குத் தப்பாத தரைகள்
தெப்பக்குளமாய்
சின்னவனின்
கைக்கு அகப்பட்ட
கொப்பிகள்
காகித கப்பலாய்
மிதப்பதைக் கண்டாள்

அந்தியானது
தட்டுத் தடுமாறி நுழையும்
கணவன்
கையில் கொண்டு வந்த
கையில் பிஞ்சு கை
எதையோ தேடி
வாயில் போட

கணவனின் குரல்
லயம் முழுக்க
எதிரொலித்து
முடியும் போது
கண்ணீர் குளம் வற்றி
ஆதரவற்று நின்றாள்

வானத்து விண்மீன்கள்
போர்வை கூரையில்
மின்னத் தொடங்கின
நாளை
விடியும் போதிலாவது
தன்னிலை மாறும் என
குல தெய்வத்தின் பெயரை
முணுமுணுத்தப்படி
கண்ணை மூடினாள்
நனவாகும் தன்
கனவுகளைக்கான.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகர்ந்து விடு

அ.தவஜா
நடனப்பிரிவு
இரண்டாம் வருடம்

தெளிவாகியது போதும்
தெளிந்தெழுவோமா......!
திருத்தங்கள் போதும்
திருப்பங்களை ஏற்படுத்து.

வீதிப் பேச்சில்
பாதிப் போனது பாலாய்......
மீதியை
மீதப்படுத்து........ நீயும்
மிளிர்வதற்காய்

உன்னை
புதைக்க நினைப்பவரை
தடுக்காதே.......
புதைக்கட்டும்
ஊருக்கு மட்டும் நீ புதைக்கப்பட்டவன்
நீ உறுதியெடு
அப்போது தான் நீ
விதைக்கப்பட்டாய் என்று

ஒவ்வொரு நொடியும்
தேடலுக்குள் தேர்வெழுது.......
ஒவ்வொரு பொழுதும்
உனக்கு
ஜன ரஞ்சிதமாகும்......!

எனக்காகவே
அல்ல........!
நமக்காக
பூமியில் வழிகாட்டி
வலிச்சுமந்த பெற்றோர்
நிம்மதி தேடி
நிம்மதியாகுவோம்

முரண் பாட்டுத்தீர்வுக்கு
முற்றிட்டது போதும்
முன்னேற்றத்துக்கு
கமா(,) போடு......!

நடந்ததை மறந்திடு......
நீ நடந்து விடு......
போகும் வழிகளை
விழிகள் காட்டும்.......!

மாற்றம் வேண்டும்
என்பதை
நீ மாற்று........!
அப்போது தான்
மாற்றமடையும்.......!
உன் விழிகளுக்குள்
விருட்சம் வரும் போது
தெரியும்......!
மாற்றமடைந்த
மலையக மண்ணின்
மகத்துவம்......!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திரபோடாக்களா?

A.நிஷாந்தினி
ஆரம்பப்பிரிவு
இரண்டாம் வருடம்

எத்தனை காலம்
இருந்து விட்டோம்
எங்கள் இதயங்களை
உறங்க விட்டு

வலது புறத்தில்
துடிப்பதில்லையாம் இதயம்
நான் சொல்வேன்
சுரண்டப்பட்ட
எலும்பு கூட்டுக்குள்
புதைக்கப்பட்டதால்
இடது புறமும் - எங்கள்
இதயம் துடிப்பதே இல்லை

கூடை பாரத்தால்
கூனரான எங்கள்
நாளைய விடியல் இனி
கானல் நீரோ?

முள்ளுக்குத்துகையில் சேற்றில்
மூழ்கிப் போவது
கால்களோடு எங்கள்
கனவுகளும் தான்

அட்டை கடியிலும்
கட்டை கிராய்ப்பிலும்
உறிஞ்சப்படுவது
உதிரத்தோடு எங்கள்
உயிர் துளியும் தான்
தோட்ட துரையின்
வாய் தோட்டாக்களுக்கு
மண்டியிட்டு மண்டியிட்டு
மரணித்து போகிறோம்

குனிந்து பார்த்து
எங்கள் நிழல் இன்னும்
எமக்கு அடிமை தான் என்று
ஆறுதலடைகிறோம்

நிமிர்ந்து.......!
எங்கே நிமிர்வது
எங்கள் முள்ளென்புகள் தான்
முறிக்கப்பட்டனவே.

மனித குடும்பம்
மலிவாம்
ஆதியிலிருந்து
நாங்கள் மட்டும்
ஆத்திரபோடாக்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் துயரங்கள்

ஆ.கெத்தலின்
ஆரம்பப்பிரிவு
இரண்டாம் வருடம்

நம்ம பொழப்புல மண்ண போட்டு
வயித்தில அடிச்சான் வெள்ளக்காரன்
தமிழ் நாட்டுல - அதுக்கப்புறம்
வெளி ஊருல வேல தாரேன்னு
ஆச காட்டி கூட்டிட்டு வந்தான்
பஞ்சம் பொழைக்க வந்தோம்
ராவண மன்னன் பூமிக்கு
வடக்கிலிருந்து நடந்தே வந்தோம்
நடுகாட்டில் செத்தும் போனோம்
மிச்ச மீதி வந்து சேர்ந்தோம் கண்டிக்கு.........

கொடுமையான காட்டுல எறங்கி
கடுமையாக ஒழச்சோம் கழனியாக்கினோம்
படிச்சா நமக்கு திண்டாட்டம்னு
புத்தகத்த காட்டல நமக்கு
இன்னக்கும் நடக்குது இந்த கத

வெளிச்சத்துல வீட்ட கூட பாத்ததில்ல
கொஞ்சம் வசதியா வீடு கட்ட வழியுமில்ல
வறுமைய வெரட்ட பாடா பட்டோம்
உரிமைக்காக ஒவ்வொரு நாளும் போராடுனோம்
எங்களுக்கும் வாழ்க்கையில் உரிமைகள்
இருக்குதுன்னு பாரம்பரிய கலைகல
இலக்கியங்கல பாதுகாத்தோம்

வெள்ளக்காரன் விடுதல கொடுத்தான்
தேசத்துக்கு அன்று - இன்னமும்
தமிழனுக்கு கெடைக்கல சொதந்திரம்
எம்பத்தி முணுல நமக்கு நடந்த
கொடுமய நெனச்சா இப்பவும்
கொல நடுங்குது.......... மனம் வெதும்புது..........!

சிரிமா சாஸ்திரி ஒப்பந்தோம் போட்டாங்க
எங்கல ஆடுமாடுகன்னு நெனச்சி
இங்கிருந்து ஒப்பாரி கோச்சியில
இந்தியாவுல எறக்குனாங்க - அங்கயும்
நம்பல மாடுகளா தான் பாத்தாங்க
எங்களுக்கு எக்கசக்கமா சங்கங்கள்
இருக்குதுன்னு பீத்திக்கிட்டோம் ஒரு சங்கம் கூட
உறுப்படி இல்லன்னு போக போக புரியுது

இப்பசரி நல்ல படிப்போம்னு நெனச்சா
அதுவும் முடியல மந்த போசனம் வந்துரிச்சி
மந்த போசனத்த போக்க இனி போராடனும்
போல தெரியுது........ஏன்னா
மனப்பாடம் பண்ண தெரிஞ்சா மட்டுந்தான்
இங்க பொழைக்க முடியும்........?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீபாத கல்லூரியே

கோ.அற்புதராஜ்
தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்
இரண்டாம் வருடம்

சிகரங்கள் சூழ்ந்த மலைமுகட்டில்
சிறப்புடன் எழுந்திருக்கும் ஸ்ரீபாத கல்லூரியே
வளமுடன் உன் பணி வற்றாத நதியாக ஓடிக் கொண்டே
ஆசிரிய மாணவ,மணிகளை அரவணைத்தே
ஆயிரமாயிரம் அறிவுச்சுடரே ஒளிப்பெறச் செய்தாயே

மடமை இருள்சூழ்ந்த மலையகத்தில் - உன்
மகத்தான பணியாலே உயர்வடைந்து
குன்றெல்லாம் ஒலி பரவச் செய்த நீ- எம்
தேயிலை தேசத்தின் சொத்தான உன்னை
தேடியே நாங்கள் தினம் வருவோம் இங்கே

மகத்தான கல்விப்பணி மாண்பு பெறுவது உன்னாலே
ஸ்ரீபாத என்ற ஆலமரமே நிழல் தந்து- எந்நாளுமே
ஆயிரமாயிர ஆசிரிய மாணவ, மணிகளை அரவணைத்தே
புடம்போட்டு ஒளிரச் செய்யும் ஸ்ரீபாத கல்லூரியே
உன் சேவை எண்ணி நாங்கள்
இல்லமெல்லாம் தீபம் ஏற்றி வணங்குகின்றோம்.

நிறைவான உன் சேவை எங்களுக்கு
நிம்மதியை தருகிறது மலையகத்துக்கு
ஆங்கிலேய ஆட்சியில் அடிமையாய் வாழ்ந்த- எம் சமூகம்

அதிவிரைவில் கல்வியில் எழுச்சி பெற்று
அன்றாடம் மலையெல்லாம் ஒலிப்பதாலே
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம் தினந்தோறும்

திடமான உன்வழிகாட்டலே
திருப்தியாய் மலையகம் செழித்துவிடும்
என்றும் உன்வழி மேலோங்கி
சிறப்புடனே செம்மை பெற்றிடுவாய்

ஸ்ரீபாத கல்லூரியே..........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற வேண்டும் மலையகம்

P.தேவிகா
சமூகவிஞ்ஞானம்
இரண்டாம் வருடம்

இன்றைய 21ம் நூற்றாண்டில் நவீன யுகத்தில் மக்கள் விஞ்ஞான மயப்படுத்தப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் அதே நேரம் இன்றும் உலகில் அடிமைகளாய் உலகமறியாத கிணற்றுத் தவளைகளாய் எம் மலையக இனம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. விஞ்ஞானம், பொறியியல், தொழிநுட்பம் என்று உலகம் வேகமாக நகர மலையக இனமோ நத்தை வேகத்தில் நகர்ந்து கொண்டிருக்கிறது. உலகளாவிய ரீதியில் இலங்கை அபிவிருத்தியடைந்து வரும் நாடாகவே இனங்காணப்படுகிறது. ஆனால் இலங்கையில் மலையக இனம் மடமைகளாய் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

ஆண்டாண்டு காலம் மாற்றங்களும், நிகழ்வுகளும், மாறி மாறி இடம்பெற மலையகம் மட்டும் மாறாதிருப்பது கவலைக்குரியதே. மலையக மக்கள் நேற்றல்ல, இன்றல்ல எப்போது மலையகம் என்ற வார்த்தை பிரயோகிக்கப்பட்ட அன்றிலிருந்தே அவர்களின் சுதந்திரம், உரிமைகள், விருப்பு, வெறுப்புக்கள் , உணர்ச்சிகள் போன்றன அதிகாரம் எனும் கயிற்றினால் அடக்கியொடுக்கப்பட்டன.

அன்றிலிருந்து ஆண்களும், பெண்களும் அதிகாலையிலே வேலைக்குச் சென்று தோட்ட துரைமார்களுக்கு குனிந்து கும்மிப் போட்டு தேயிலை தோட்டத்திலே வெயில், மழை, குளிர் என்று பாராது கடுமையாக உழைக்கிறார்கள். குனிந்து குனிந்து கும்பிடு போட்டு இன்று வரை கூனி குறுகி போயுள்ளனர். ஆண்களைப் பொருத்தமட்டில் அதிகாரிகளுக்கும், துரைகளுக்கும், கங்கானிகளுக்கும் கும்பிடு போட்டு கவ்வாத்து வெட்டுவதும், தேயிலை செடி நடுவதும் போன்றவாறு அன்றாட வாழ்க்கை கழிய பெண்களோ சமுதாயத்தில் அடக்கப்பட்டவர்களாய், வேலை செய்வதும், கணவனை கவனிப்பதும் பிள்ளைகளை பராமரிப்பதும் இவ்வாறான செயற்பாடுகளே அன்றாட வாழ்க்கையில் சுழல் சக்கரங்களாக சுழன்று கொண்டிருக்கிறது.

மலையக மக்களின் உரிமைகள் அதாவது தமது விருப்பத்திற்கேற்றவாறு வாழ்வதற்கோ, தாம் விரும்பியதை, நினைத்ததை செய்வதற்கோ முடியாதுள்ளது.தோட்டத்தில் எந்தவொரு வேலையென்றாலும் தோட்டதுரைமார்களின் அனுமதியுடனே நடைபெற வேண்டும்.

குறிப்பாக மலையக பெண்களை எடுத்து நோக்கும் போது அவர்கள் அடக்கப்பட்டவர்களாய், கல்வி கற்கும் வாய்ப்பை இழந்தவர்களாய், சுயமாக எதையும் செய்ய முடியாதவர்களாய், கணவனின் அடிமைகளாய், குழந்தைகளின் சேவகியாய் சமுதாயம் என்கின்ற ஒன்றினால் ஆட்டிப்படைக்கும் கைபொம்மைகளாய் காலங்கழிக்கிறார்கள். எப்போது பெண்கள் சுதந்திரம் பெறுவார்கள்? நெஞ்சம் பொருக்குதில்லையே இந்த நிலைக் கெட்ட மானிடரை நினைத்து விட்டால்" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக பெண்களின் நிலையை அறிந்துதான் அந்த பாரதி பாடினானோ என்னவோ?

வெள்ளைக்காரனால் போடப்பட்ட அதே தகரம், அவனால் கட்டப்பட்ட அதே லயன்கள், 8 அடி அறைகள் (காம்புராக்கள்) அதே வாழ்க்கையைத்தான் நாம் இன்றும் வாழகிறோம். அன்று எமமோடு அடிமைக்காக கீழிருந்த ஏனைய சமூகங்களை நோக்கும் போது இன்று அவை வானத்தின் உச்சியளவிற்கு மாடிகளில் வாழ்ந்திருக்க,மலையகமோ இன்னும் மண் குடிசையில் வாழ்கிறது. இவற்றை உற்று நோக்கும் போது சி.வி.வேலுபிள்ளை எழுதிய "தேயிலை தோட்டத்திலே" எனும் கவிதையில் "ஆழப்புதைந்த அப்பனின் சிதைமேல் ஏழை மகனும் ஏறிமிதித்து இங்கெவர் வாழவோ தன்னுயிர் தருவான்" எனும் கவி வரிகள் நினைவு கூறுகின்றன.

ஏனைய சமூகத்துடன் எமது சமூகத்தை ஒப்பிட்டு நோக்கியாவது எமது இனம் முன்னேற வேண்டும். இன்றைய நவீன யுகத்தில் அடிமை எனும் வார்த்தை மலையகத்தில் அடியோடு அழிய வேண்டும். இன்று மலையகத்தில் கல்வி கற்ற சமுதாயம் உருவாகிக் கொண்டிருப்பது பெருமைக்குரிய விடயமே. இருப்பினும் ஆங்காங்கே இன்னும் மலையக மக்கள் அடக்கி ஒடுக்கப்படுகின்றதோடு பெண்களும் அடிமைகளாய் வாழ்கின்றனர்.

இன்றும் அன்றாட கூலிக்காக போராடும் தொழிலாளர்கள், கற்கமுடியாமல் கதிகலங்கி இருக்கும் பெண்கள் சொந்த வீடின்றி எவ்வித வசதிகளுமின்றி லயங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு எப்போது விடிவு கிடைக்கும்?

மாற வேண்டும் மலையகம். கல்வி என்ற ஒன்றினால் மட்டுமே எமக்கான சுதந்திரத்தைப் பெறலாம். பெண்களின் அடிமை வாழ்க்கையை தகர்தெரியலாம், சொந்த வீட்டில் சுதந்திரமாக வாழலாம். ஏனைய சமூகங்களோடு சரிசமமாக வாழலாம். சமுதாயத்தில் உன்னதமானதோர் உயரிய இடத்தை பெறலாம்.

இருளிலும் தடங்கிடா எங்களின் பயணம்
எளிதிலே உடைக்க முடியாதெவரும்

அறிவெனும் வாலினால் அடிமைதனையறுத்து
மலையகம் தன்னை மாற்றியமைத்திடுவோம்.

கல்வி எனும் சுடரினால் அடிமை மலையகம் அழிக்கப்பட்டு ஆளும் மலையகமாக மாற்றப்பட வேண்டும். கல்வி எனும் அரும் பெரும் சொத்தினால் மாற வேண்டும் மலையகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பாராத யதார்த்தம்.

இ.சிவேந்திரன்
விஞ்ஞானப்பிரிவு
இரண்டாம்வருடம்.

இதமாக வீசும் காற்று, காற்றுடன் சிறு துளி நீர் மேனியில் பட்டதும் புத்துயிர் ஊட்டும் காலநிலை. இதனையும் கூட புரிந்துக்கொள்ள முடியாதவனான சிரேன் ஏதோ கடுமையாக உழைத்தவனை போல் களைத்து, முகம் சுருங்கி , மேலும் கீழும் பாரத்துக் கொண்டு மைதான மத்தியில் உள்ள ஆலமரத்தடி திட்டில் அமர்கிறான். கையில் சிறு தடியினை வைத்துக் கொண்டு, மரத்திலுள்ள ஒரு காகத்தை நோக்கி, காக்கா.......காக்கா நா அம்மாவுக்கு லெட்டர் எழுதப் போறேன். என்ன தொந்தரவு செய்யாம நீ போ........ அப்புறம் வா......... என சுழித்த முகத்துடன் கூறிய சிரேன் மெல்ல சிரித்து கொண்டு கீழே குனிந்தவன் கண்களில் கண்ணீர் ஆறாய் பெறுகியது. அம்மா, அம்மா......... என கத்தி புறலுகின்றான். இது இன்று மட்டுமல்ல வழமை.

அழுது புரண்டவன் சிறிது நேரம் மௌனித்து மரத்தடியில் படுத்து, கண்களில் நீர் செறிய கண்களை மூடுகிறான். அவனது அழுகை, ஆழ்ந்த சோகம், வினோத பேச்சுக்கு காரணமான நினைவலை அவ்வப்போது தாக்கும்

அன்றொரு நாள் வியாழக்கிழமை, சின்னா.......சின்னா, எங்கடா இருக்க? பதற்றத்துடன் சிரேனின் தாய் கமலம் சிரேனை அழைக்கிறாள்.

என்னம்மா அவசரம்? ஏன் கூப்பிட்டிங்க? கொஞ்சம் கூட விளையாட விட மாட்டிங்களே..........!

ஒன்னு இல்லடா........நேத்து வாங்குன சம்பள காச எடுத்துகிட்டு காலையிலே டவுனுக்கு போன இந்த மனுஷன காணாண்டா........!(மெல்லிய குறலில்), கொஞ்சம் கள்ளு கடப்பக்கம் போய் பார்த்துட்டு வாடா.......!

என்னம்மா உனக்கு இதே வேலத்தான் ....... கிழமைக்கு ஒருக்க இந்த மாறித்தான் அவரு வந்துடுவாருமா.

இல்லடா......இந்த மனுஷன் நல்லா தான் இருப்பாரு. பெருமூச்சு விட்டப்படி, கொஞ்சம் குடிச்சிட்டா எங்க படுக்கனும், வீட்டுக்கு வர பாதைய கூட மறந்திடுவரு.......... வருஷ முழுக்க இதே தொல்லத்தான். என பலவாறாக புலம்பியப்படி குசுனி உள்ளே சென்றாள்.

தாயின் புலம்பல் சிரேனுக்கு புதியதல்ல. கமலம் சிறிய பிரச்சினையையும் பெரிதாக்கி புலம்புவாள். இந்த புலம்பல் சிரேனின் மனதுக்குள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. சிரேனின் மனதுக்குள் “எப்பயும் எங்கப்பாவ போல வாழவே கூடாது. இப்படி ஒரு அப்பா கிடைச்சதுக்கு எவ்வளவு பாவம் செஞ்சிருக்கனும் எனும் குரல் ஒலித்து கொண்டே இருக்கும்.

இந்த சிந்தனைக்கும் கமலம் மட்டும் காரணமல்ல கூடி வாழும் சமூகமும் கூட முக்கிய காரணம். சமூகத்தவர்கள், ராமையா வீட்டில என்ன பிரச்சன, குடும்பத்துல பிரச்சினையா? என்று மனதை சுக்கு நூறாக்கும் கொடுஞ் சொற்கள் கமலத்தையும் சிரேனையும் தாக்கி கொண்டே இருப்பது வழமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்த வாசல் கதவருகே வந்த சிரேனின் நண்பன் பாலு,

டேய் மச்சான்......மச்சா........ என அழைத்தான்.

"என்னா ....... பாலு......... இந்தப்பக்கம்"

"மச்சா......... ஒங்கப்பா அந்த கேரேஜிகிட்ட கெடக்குராரு......ஊரே அங்க தானடா, இருக்கு. பொலிசுக்கு போன் பண்ணிருக்கங்களாண்டா......... அதோட.........." தயக்கம் காட்டினான்.

என்னடா....தயங்குர....ஒங்கப்பா பேச்சு மூச்சு இல்லாம கெடக்குராருடா......... டாக்டரும் வந்துருக்காரு.........

கமலம், கத்தி கதறியப்படி சிரேனை இழுத்துக் கொண்டு ஓடினாள். ஊர் முழுக்க மரணப் பேச்சு ஓடும் போதே இதயம் நின்று விடும் போல இருச்தது கமலத்துக்கு ........ தாயின் கதறல் சிரேனை ரொம்பவும் உருக்கியது.

டாக்டர், "என்ன கமலம? என்ன இது? புருஷனுக்கு இதே வேலத்தா....ஊரே ராமையா போயிட்டானு வந்து நிக்குது. நல்லவேல, குடிமயக்கத்துல கெடக்குரா ராமையா..... கூட்டிக்குட்டு போ....... இனியாவது பாத்து இரு......."

கமலத்துக்கும், சிரேனுக்கும் பலத்த அவமானம். ஊராரின் சுடும் வார்த்தை, டாக்டரின் பேச்சு என்ன செய்வதறியாது ராமையாவை தூக்கி சென்றனர். வீட்டில் படுக்கையில் இருத்திய ராமையாவை நோக்கி கமலம் புலம்பல் ஆரம்பித்தாள்.

அந்த சமயம் முணுமுணுத்தப்படி எழுந்த ராமையா, ஏய் கமலம் ஏ அழுவுர ,இப்ப நா செத்தா போயிட்டே குடிகார ராமையாவின் பேச்சு நீண்டது. சற்றும் யோசிக்காத சிரேன் கையில் கிடைத்த பூச்சாடியை ராமையாவை நோக்கி எறிந்தான்.

சிரேனுக்கு நேரே நின்றிருந்த ராமையா சற்றும் எதிர்பாராத வகையில் மயங்கி விழ, வீசிய பூச்சாடி நேரே நின்றிருந்த கமலத்தின் தலையில் பட்டு விழுந்தாள்.

விரைந்தோடி கமலத்தை அணைத்து சிரேன்,

அம்மா.....அம்மா...... எழுந்திடும்மா......... எழுந்திடும்மா

அம்மா......................................!

மன வேதனைகளுடன், மனநிம்மதியற்று மகன் மடியில் கமலம். மூச்சு திணறியவாறு உயிர் பிரிந்தது. அந்த அதிர்ச்சியில் முடமாகி நின்றவன் சிரேன்.

அம்மா..........அம்மா..........தெரியாம செஞ்சுட்டன் அம்மா மன்னிச்சுடு அம்மா........... என புலம்பியப்படி அம்மா என்று கத்தியப்படி விழித்தான். மைதான மத்தியில் இருக்கிறான். இம்மைதாமை மன நல மருத்துவமனையில் தான் இருப்பதை அறியாத சிரேன் எழுந்து .

நா லெட்டர் எழுதப் போறே............. நா லெட்டர் எழுதப் போறே ஓடியவாறு கூறி ,சற்று நின்று அழுதப்படி மன்னிச்சிடுமா...................தெரியாம செஞ்சுட்டன் என்ன மன்னிப்பியாம்மா.............அப்பாவ நா அடிக்கலம்மா அம்மா..........அம்மா என்றவாறு தொடர்கிறது இவனது உளக்குமுறல்.

முற்றும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித விழுமியங்கள்

மு.தினேஷ்
சமூக விஞ்ஞானப்பிரிவு
இரண்டாம் வருடம்

இன்று விழுமியங்கள் பற்றிப் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றன. நாடுகளின் தலைவர்கள், சமயத்தலைவர்கள், சமூகத் தலைவர்கள், கல்விமான்கள் தொடக்கம் சாதாரண குடிமக்கள் வரை மனித விழுமியங்கள் பற்றி பேசப்பட்டு வருகின்றது. தற்காலத்தில் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கும், மனித சமுதாயத்தைப் பற்றியுள்ள பீடைகளுக்கும், தொல்லைகளுக்கும் அடிப்படை காரணமாக மக்களின் மனித விழுமியம், ஒழுக்க பண்புகள் என்பவற்றை கடைப்பிடிக்கத் தவறியமையைச் சுட்டிக் காட்டுகின்றது.

நாம் வாழ்கின்ற யுகம் விஞ்ஞான, தொழிநுட்ப அபிவிருத்தி, அதி அற்புத வளர்ச்சி கண்டுள்ள காலப்பகுதி. இதன் காரணமாக மக்களின் வாழ்க்கை வசதிகள், நாகரிக ஆடம்பரங்கள், செல்வ செழிப்புக்கள் என்பன மிகவும் செழித்து ஓங்குகின்றன. அவை மக்களை மகிழ்ச்சியோடு இன்ப வாழ்வு வாழச் செய்யப் போதுமென எண்ணுகிறார்கள். ஆனால்! இன்றைய உலகில், மக்கள் வாழ்க்கையின் உண்மை நிலை என்ன? எத்தனை பேர் திருப்திகரமாக வாழ்கின்றனர்? குறைகள் இல்லாதார் யார் உளர்? அநேகமாக, எவரை சந்திப்பினும், "நான் சந்தோசமாக இருக்கிறேன்" என்று கூறுபவர்கள் மிகச் சிறு தொகையினரே, அதற்கு மாறாக நெஞ்சக் கனதிகளையும், துன்ப சுமைகளையும் சொல்லத் துடிப்பவர்களே பரவலாக உள்ளனர். கோடி வாழ்க்கை வசதிகள் இருந்தும், இன்பங்கள் இருந்தும், அவற்றை அனுபவிக்க முடியாமல் தவிக்கின்றனர். இதுப்பற்றி தெய்வப் புலவர் திருவள்ளுவர் கூறுவதை நோக்குவோம்.

"பண்பு இலான் பெற்ற பெருஞ் செல்வம் - நன் பால்
கலம் தீமையால் திரிந்தற்று"

என்பது குறள். பண்பில்லாதவன் பெற்ற பெரிய செல்வம் ஆனது, பாத்திரத்தின் தீமையால் கெட்டு போன நல்ல பால் போல தனக்கும் பிறருக்கும் இன்பம் தராது அழிந்து போகும், என்பது இக்குறள் கூறும் கருத்து. ஆகவே விழுமியங்கள் ஒருவரிடத்தே காணப்பட வேண்டிய முக்கியத்துவத்தை கூறுகின்றது. மக்கள் வாழ்வில் அமைதி, அடக்கம், திருப்தி, சாந்தி, சமாதானம், நல்லொழுக்கம் என்பன காணப்படும் போது தான் வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக அமையும். ஆனால் இந்நிலமை மிக அரிதாகவே சமுதாயத்தில் உள்ளது. எத்தனைச் செல்வங்கள் இருப்பினும், மனத்திருப்தியும், மன அமைதியும், விழுமியங்களும் இல்லாத பட்சத்தில் அச் செல்வங்களினால் பயன் ஏதும் இருக்காது. இனி மனித விழுமிய சிந்தனைகள் சிலவற்றை பார்ப்போம்.

சத்தியம், எல்லா விழுமியங்களுக்கும் அடிப்படையானது; ஆதாரமானது எனவே அது மிக உயர்ந்த விழுமியமாகப் பேசப்படுகின்றது. சத்தியம் நித்தியமானது, மாறாதது, என்று உபாசித்து கடைபிடிக்கின்றவன் மனிதருள் மாணிக்கமாகி விடுகின்றான். பண்டைய காலத்து அரிச்சந்திரன் முதல் மகாத்மா காந்தி அடிகள் வரை சத்தியத்தை ஒப்பியவர்களை நாம் அறியலாம். அவ்வாறான வாழ்க்கை ஒளி விளக்குகளையும், வழிகாட்டல்களையும் பின்பற்றி இருட்டில் நின்று தத்தளிக்காது கரையேர முயலும் வாழ்க்கை படகுகளில் எத்தனை பேர் உளர்? என்பது வினாவாகவே உள்ளது.

"சத்தியம் வத"- எப்பொழுதும் உண்மை பேசுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சத்தியம் மேவ ஜயதே" - வாய்மையே வெற்றி பெறும்.

"ந அன்றாதம"- "பொய்மை" யால் ஒரு போதும் வெல்ல முடியாது என நூல்கள் கூறுகின்றன. மனிதனால் மட்டுமே சத்தியத்தை பின்பற்ற முடியும். இதனை மனசாட்சி சிறப்பாக ஆற்றும். எது சரி? எது பிழை? எது பொய்? எது அசல்? எது நகல்? நல்லது, கெட்டது என்பவற்றை மனிதன் மனசாட்சியின் படி பெற்றுக் கொள்ளலாம். மனசாட்சியை சாட்சியாக கொண்டு வாழா மனிதர்களாலே இன்று விழுமியங்கள் சாகடிக்கப்படுகின்றன. உண்மையைச் சிந்தித்து, வாய்மையே பேசுதல் வேண்டும், மனசாட்சி சொல்லுக்கு கட்டுப்பட வேண்டும். ஐம்புலன்களை மெய்மையானவற்றில் ஈடுபடுத்த வேண்டும். ஆனால் இங்கு பொய்மைக்குத் தான் முக்கியத்துவம். இதற்கு வள்ளுவன்

"பொய்யாமை பொய்யாமை ஆற்றில் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

எனக் கூறுகின்றார்.

ஆகவே மனித பிறவியின் உயர்வும் சிறப்பும் விழுமியப் பண்புகளிலேயே தங்கியுள்ளது. மனித வாழ்வினைச் செம்மையும், சீரும், செழுமையும், இனிமையும் நிறைந்ததாக மாற்றும் வல்லமை விழுமியங்களுக்கு உண்டு. இந்நிலையை பின்பற்றும் போது, மனித பிறவியை வெறுத்து ஒதுக்க வேண்டிய நிலை தோன்றாது. "மனித பிறவியை வேண்டுவதே, இந்த மாநிலத்தே" என்ற உன்னத நிலை எங்கும் பிரவாகிக்கும்.

மேலும் மனித விழுமியங்களை கடைப்பிடிக்காதவரிடத்தே அச்சம் தலைத்தோங்கி நிற்கும். அச்சம் என்பது ஒருவகை உளக்கிளர்ச்சி சில ஏதுக்கள் அச்சத்தை ஏற்படுத்தி விடும். அபாயம், இடையூறு என்பனவற்றுக்கும் ஏன் சிலர் கரப்பான் பூச்சி, இருள், பாம்பு, பேய் என ஏதோ வகையில் அனைவரும் பயம் கொண்டவர்களாக காணப்பட சிலர் ஒழுக்கங்களை தவறுவதால் தினமும் அஞ்சு நடுங்குபவரும் உண்டு. "அஞ்சாதவர்க்கு ஒரு மரணம்: அஞ்சினவர்க்குச் சத மரணம்" என்று கேள்விப்பட்டுள்ளோம். விழுமியங்களை கடைப்பிடித்தால் அஞ்ச வேண்டியதில்லை பாரதியார் கூற்றுக்கிணங்க.

" உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் ,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"

என்று அச்சமில்லாமல் வாழலாம்.

பலர் அச்சம் காரணமாகவே பொய் சொல்கின்றனர். உண்மையை சொன்னால் சமூகம் தண்டனை வழங்கும் என பொய் சொல்கிறான் எவனொருவன் தீவினைக்கு அச்சம் கொண்டு, உலகம் பழிக்கும் செயல்களில், தீய பாதையில் கால் வைக்க அஞ்சுகிறானோ அவன் உலகில் உயர்ந்து நிற்பான். கீழ் மக்கள் மேன் மக்களாக்குவது அவர்கள் ஒழுக்கம் ,ஆசாரம் என்பவற்றை பொறுத்தே ஆகும். இதனை வள்ளுவர்

"மேலிருந்தும் மேல் அல்லார் மேல்அல்லர் கீழ் இருந்தும்
கீழ் அல்லார் கீழ் அல்லவர்" என்றார்.

எனவே, உண்மை பேசுதல், நேர்மையாக நடத்தல், பிறர் நலம் பேணுதல், இன்னா செய்யாமை, நல்லொழுக்கம் பேணல், அமைதி, அன்பு, அஹிம்சை என இன்னோரன்ன விழுமியங்கள் காணப்படுகின்றன.இவற்றை எம்மால் செய்ய முடியுமா? முடியாதா? முடியும். மனித வாழ்வினை மேம்படுத்தும் பண்புகள் அனைத்தும் மனித விழுமியங்களாகும். எனவே மனிதர்களாகிய நாம் விழுமியங்களை மதித்து ஒழுகுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி

எஸ். ஷாலினி
விஞ்ஞான பிரிவு, 2ம் வருடம்

மனிதனுடைய மிக முதன்மை வாய்ந்த கருத்துத் தொடர்புச்சாதனம் மொழியாகும். அவன் சிந்திப்பதற்கும், கருத்துக்களை தொடர்புபடுத்துவதற்கும் ஒரு சமூகத்தின் அங்கத்தவனாகவும், தனிமனிதனாகவும் செயற்படுதவற்கும் மொழியே முதன்மையான கருவியாக அமைகின்றது. ஒவ்வொரு மனிதனும் தான் வாழும் சமூகத்தினையும் பண்பாட்டினையும் அறிந்து கொண்டவனாக வாழ வேண்டியது அவசியமாகும். அவ்வாறு அவற்றை அறிந்து வாழத்தொடங்கும்போதுதான் அவன் மனிதனாகின்றான். அவ்வாறு அவன் மனிதனாக கற்றற்குரிய முக்கிய கருவியாக அமைவது மொழியாலேயே நடைபெறுகின்றது. மொழி ஒலிக்குறியீடுகளை அடிப்படையாகக்கொண்டு அமைகிறது. மொழிக்கும் கருத்துத் தொடர்புக்குமுள்ள தொடர்பினை நாம் தினந்தோறும் மேற்கொள்ளும் உரையாடல் மூலமாக விளங்கிக்கொள்ளலாம். இத்தொடர்பு பற்றிப் பல அறிவியல் ரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. கருத்துத் தொடர்பிலே ஈடுபடுவர்களென ஒரு மனிதக் குழுவையோ, சமூகத்தையோ குறிப்பிடலாம். அவர்கள் யாவரும் தம்முடைய மொழி, பழக்க வழக்கம் ஆகியன பற்றிய விதிமுறைகளை பின்பற்றி நடப்பார்கள்.

மொழியாய்வு பண்டைக் காலத்திலிருந்தே மெய்யியல், இலக்கிய விமர்சனம் ஆகியவற்றுடன் தொடர்புடையதாயிருந்து வந்துள்ளது. ஆனால் 19ம் நூற்றாண்டளவில் மொழியை அறிவியல் அடிப்படையிலே ஆய்வு செய்யும் மொழியியல் என்னும் துறை தோன்றலாயிற்று. இத்துறை ஏனைய இயற்கை விஞ்ஞானம், சமூக விஞ்ஞானத் துறைகளுடனும் மனிதப் பண்பாட்டியல் துறைகளுடனும் தொடர்புடையதாக அமைந்தது. மொழிகளில் தமிழ்மொழி பற்றி தெய்வத் தமிழ், கன்னித்தமிழ், சுந்தரத்தமிழ், செந்தமிழ், தனித்தமிழ் என்றெல்லாம் ஒவ்வொரு கால கட்டங்களிலே பேசப்பட்டது. தமிழ்மொழியின் சிறப்பினை

சாகிற் தமிழ் படித்துச்
சாக வேண்டும் - என்
சாம்பல் தமிழ் மணந்து
வேக வேண்டும்

ஓடையிலே என் சாம்பல்
கரையும் போதும்
ஒண் தமிழே சலசலத்து
ஓட வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஈழத்து கவிஞர் பாடியுள்ளார்.

சமூகம் என்ற வகையிலே மொழியினைத் தாக்குகின்றது என்பதற்கு பல மொழிகளிலிருந்து பல சான்றுகளைக் காட்டலாம். ஒரு சமூகத்தினர் வாழுகின்ற பிரதேசத்துப் புவியியல் சூழ்நிலை அச்சமூகத்தினர் பேசும் மொழியிலே பெரிதும் பிரதிபலிக்கின்றது. மொழிகளுடைய அடிப்படை இரண்டு வகைப்படும். அவை பேச்சும், எழுத்துமாகும். ஒலிகளை அடிப்படையாகக் கொண்டமைகின்றது பேச்சு. அவ்வொலிகளுக்கு வடிவம் வழங்குவது எழுத்து ஆகும்.

மொழியின் ஒரு வகைச் சிறப்புப் பயன்பாட்டின் விளைவே எல்லா வகையான இலக்கியங்களுமாகும். அவை வாய்மொழி இலங்கியங்களாகவோ எழுத்து வழக்கில் அமைந்தனவாகவோ ஆகலாம். இலக்கியம் இல்லாமல் மொழியுண்டு ஆனால் மொழியின்றி இலக்கியமில்லை. கம்பனுடைய "தீச்சுவை செஞ்சொற்கவியின்பம்" என்னும் பாடலடி கவிதைக்கு சொல்லின் இன்றியமையாமையை எடுத்துக்காட்டும். குழந்தை எவ்வாறு மொழியைக் கற்றுக்கொள்கின்றது என்று அறியத் தொடங்கியபோது உயிரியல், உளவியல் ஆகிய துறைகளுடன் இணைவதற்கு வழிவகுத்தது. மொழியின் கருத்து வடிவ ஆராய்ச்சி கணித மொழியியலுக்கும், கணினி மொழியியலுக்கும் இட்டுச் சென்றது. மொழி பேசுவோரின் பண்பாட்டுக்கும் மொழிக்குமுள்ள தொடர்பினை மானிடவியல் மொழியில் ஆராயத் தலைப்பட்டது.

ஒரு குழந்தை 2வது வயதிலேயே தன் சொந்த மொழியின் இலக்கண அமைப்பு அறிவினை முற்றாகப் பெற்று விடுகின்றது. பாடசாலைக்குச் செல்வதற்கு முன்னரே ஒவ்வொரு குழந்தையும் இந்த மொழியறிவினை வியக்கத்தக்க வகையிலே பெற்றுவிடுகின்றது. பாடாசாலை இலக்கணப் பயிற்சிகள் அல்லது பயிலுந் தமிழ் போன்றவற்றைவிட மொழியியல் ரீதியான விளக்கத்தின் மூலமமே மொழியைச் சரியான முறையில் படம் பிடித்துக் காட்டலாம்.

எனவே மொழியானது கருத்துத் தொடர்பு, பண்பாடு, பிறப்பாக்கம், சமூகம் போன்ற அனைத்து அம்சங்களுடனும் தொடர்புபடுவதுடன் கவிதை, புனைகதை, நாட்டார்பாடல், செய்யுள், கணிதம், விஞ்ஞானம் போன்ற அனைத்து துறைகளுடனும் தொடர்புப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையின் குறிக்கோள்

இராஜமணி சுகிதன்
தமிழ் பிரிவு, 2ம் வருடம்

முதலில் நாம் குறிக்கோள் என்றால் என்ன என்பதை தெரிந்துக்கொள்ள வேண்டும். அதாவது ஏதேனும் ஒரு துறையில் நம்முடைய அறிவை வளர்த்துக்கொள்வதற்கும், ஆற்றலைத்திரட்டி ஒருமுனைப்படுத்தி வெளிப்படுத்து வதற்கும் விடாமுயற்சியோடு நம்மை உழைக்கத் தூண்டுவதற்கும் அடிப்படை இயக்கசக்தியாக விளங்கக்கூடியதுவே குறிக்கோள் எனப்படும். குறிக்கோள் இல்லாத வாழ்க்கை நடுக்காட்டில் வழிதெரியாது தவிக்கும் குருட்டு வாழ்க்கை. அது சோம்பலை வளர்க்கும் வாழ்க்கை. வறுமையின் வளர்ப்புப்பண்ணை. துன்பத்தின் உறைவிடம் என வகைப்படுத்திக்கொண்டே போகலாம்.

மேலும் “உங்கள் வாழ்க்கையின் இலட்சியம் என்ன? என்று கேட்டால் பலருக்கு பதில் சொல்லத்தெரியாது. காரணம் அப்படி ஒரு குறிக்கோளை முன்னே வைத்துக் கொண்டு அவர்கள் உழைக்கப்பழகவில்லை. வாழ்க்கையில் பல சந்தர்ப்ப சூழ்நிலைகள் அவர்களை எங்கெங்கோ இழுத்துச்செல்லும். இத்தகையவர்கள் அதற்கெல்லாம் காரணம் விதி என்று விதியின்மேல் பழியைப் போடுவார்கள்.

நாம் அன்றாடம் மேற்கொள்ளும் சின்னஞ்சிறு பயணங்களுக்கு மாத்திரமே குறிக்கோளை வைத்துக்கொள்கிறோம். எங்கே ஆரம்பித்து எதுவரை செல்ல வேண்டும் என்பதை முன்பதாகவே தீர்மானித்துக்கொள்கிறோம். எமது நீண்ட வாழ்க்கை பயணத்திற்கு ஓர் இலக்கு வேண்டாமா? வாழ்க்கையில் நமக்கு குறிக்கோள் வேண்டாமா?

நாம் பெறவேண்டிய பேறுகள் பல உள்ளன. அவை வெறும் மனக்கோட்டைகள் கட்டுவதற்கோ, ஆசைப்படுவதாலோ மாத்திரம் கிடைத்து விடாது. நம்மிடம் உள்ள தனிப்பட்ட ஆற்றல் எது? அதை எப்படி வளர்த்துக்கொள்வது? அந்த ஆற்றலைப் பயன்படுத்தி எவ்வாறு சமுதாயத்திற்காக உழைப்பது என்பதை சிந்தித்தல் வேண்டும். எனவேதான் நோக்கம் இல்லையேல் ஊக்கமில்லை, ஊக்கமில்லையேல் முயற்சியில்லை, முயற்சியின்றேல் உழைப்பில்லை, உழைப்பின்றேல் பயன் இல்லை எனப்படுகின்றது.

மேலும் சமுதாயத்தின் நலனுக்காகவும் தேவைக்காகவும் நாம் திட்டமிட்டு உழைக்கும்போது அதுவே பயனாக மாறுகின்றது என்பதை நாம ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும். சமுதாயத்திற்காக நாம் கொடுக்க வேண்டியதை கொடுக்காவிட்டால் கிடைக்க வேண்டியது கிடைக்காது. இது இயற்கையின் சட்டம். நம்முடைய வாழ்க்கைக்கு நாமே ஒரு சிறப்பும், மரியாதையும், மதிப்பும் உடையதாக மாற்ற வேண்டுமாயின் அதனிடம் ஒரு குறிக்கோளை கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதுதான் அக்குறிக்கோளை அடைவதற்கான தேர்ச்சி, ஊக்கம் பிறக்கும்.

தேடிச் சோறு நிதந் தின்று - பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக உழன்று - பிறர்
வாடப் பல செயல்கள் செய்து - நரை
கூடி கிழப்பருவ மெய்தி - கொடுங்
காற்றுக் கரையெனப் பின் - பாயும்
வேடிக்கை மனிதனைப் போலவே - நான்
வீழ்வே னென்று நினைத்தாயோ

என்று பாரதியார் பராசக்தியிடம் கேட்பதுபோல் நாம் ஒவ்வொருவரும் கேட்டுக்கொள்ள வேண்டும். மனிதராகப் பிறந்தவர்கள் விலங்குகளைப்போல இரைதேடி அலைந்து இனவிருத்தி செய்து இருந்தவிடம் தெரியாமல் மறையப் பிறந்தவர்களல்லர். குறிக்கோள் கொண்டு வாழப்பிறந்தவர்களாவர்.

நம்முடைய வாழக்கைக்கென்று ஒரு குறிக்கோளை வைத்துக்கொண்டு அதை அடைவதற்காக நம் ஆற்றலை முடுக்கிவிட வேண்டும். முதலில் சின்னஞ்சிறு கவலைகள் ஏற்படுவதை விட்டு நம்முடைய இலக்கை நோக்கி விரைய வேண்டும்.

"வெள்ளத்தனைய மலர் நீட்டம், மாந்தர் தம் உள்ளத்தனையது உயர்வு" என்ற வள்ளுவர் வாக்கும் இதனையே தெளிவு படுத்துகின்றது.

வாழ்க்கை எனும் தோணியைக் குறிப்பிட்ட இலக்கைநோக்கி செலுத்துவதற்கு பயன்படும் துடுப்புதான் குறிக்கோள். கடுங்காற்று வீசினால் என்ன? கடலலைகள் பொங்கினால் என்ன? வாழ்க்கையில் பிரச்சினைகள் ஏற்படத்தான் செய்யும், சோதனைகள் தோன்றத்தான் செய்யும், நெஞ்சில் உறுதியோடு துடுப்பு போடத் தெரிந்துக்கொண்டால் எதிர்ப்படும் இடர்பாடுகளனைத்ததையும் வென்று நம்மால் முன்னேற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டிடுவீர் என் குரலை...

எஸ். தியாகராஜ்
சமூக விஞ்ஞானம், 2ம் வருடம்

பஞ்சனை கேட்கவில்லை
பட்டு வஸ்திரம் கேட்கவில்லை
ஏறி செல்ல காரும் கேட்கவில்லை
பறந்து செல்ல விமானமும் கேட்கவில்லை
மாடி மனை கேட்கவில்லை
மாலையிட வேண்டவில்லை
காடும், மேடும் ஏறி இறங்குகிறோமே
அதற்கேற்ற ஊதியம்
லட்ச லட்சமாய் கேட்கவில்லை
வேண்டுவது இதுவே
உடல் வளர்த்திட உணவும்
உடல் மூடிட உடையும்
ஒவ்வொரு நாளும் கேட்கின்றோம்
உழைத்து தினம் உங்கள்
கைபொம்மைகளாய் ஆனோமே
அதற்கேனும் இரங்கிட மாட்டீரோ
எம் குருதி வியர்வை சிந்தி
உம் குலம் வாழ செய்கிறோமே
அந்த நன்றி கடனுக்காய் என்ன செய்தீர்
ஆசைகளை துறந்து
ஏக்கத்தோடு வாழ்கிறோமே
எம் உணர்வுகளை மதித்திட
மறந்தீரே.....
குப்பையிலே கிடந்தாலும்
குண்டுமணி மங்காது
சேற்றிலே எமை தள்ளினாலும்
செந்தாமரைகளாய் மலர்ந்திடுவோம்
உரிமைகளை பறித்து
ஓட்டாண்டிகளாய் மாற்றினாலும்
வெறுமையென்பதில்லை எம் வாழ்வில்
சிறுமையானோரென்று சிறுகுடிசை
தந்தாலும்
பெருமையுடன் மண்ணில்
புதைந்து புதுச் செடியாய் (பூவாய்)
மலர்ந்திடுவோம் மறவாதீர்

# கறை படிந்த சோகம்

கே. தர்ஷினி
விஞ்ஞானப்பிரிவு, 2ம் வருடம்

உயிரோடு போராடும்
சொந்தங்களைத் தேடி
மனக்கவலையால் எரியும்
கனவுகளோடு
தூக்கத்தை தொலைத்த
துக்க வரலாற்றைப் படித்துப்பாருங்கள்

மழை சிரித்து விளையாடிய
மலையகத்தை
இந்த அவல நிலை சூறையாடும்
காலமிதுவோ!
கறுப்பு முகமூடிகள் அணிந்து
முரட்டு யுக்திகளைக் கொண்டு
திடீரென்று வந்து குதித்த
மனித மிருகங்களோ!
மனிதரை மனிதர்
கொன்று தீர்க்கும்
கொடூர குரோதத்திற்கு
காரணமொதுவோ!
மாந்தரின் அழுகைக் குரல்கள் - இம்
மலையக இல்லங்களில்
முகாரி இராகமாய் ஒலிக்கின்றது
இங்கு மையலுக்கு வந்த
சோதனைதான் என்ன?

இனியும் தொடருமா
இந்த அவல நிலை
யார் வைப்பார்
முற்றுப்புள்ளி இதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பறையில் அன்று

டி. கௌதமி
விஞ்ஞானப்பிரிவு, 2ம் வருடம்

பழுப்பு நிற ஓடுகள்
பழைய கட்டடம்
இடைச்சுவர் இல்லா
நீண்ட வகுப்பறைகள்
மரத்தட்டிகள் பிரிக்கின்றன
இடப்புறம் எளிய பாதையில்
நுழைந்து சென்றால்
உயர்தர வகுப்புகள்

சுவரிலிருக்கும்
கரும்பலகையில்
விஞ்ஞானப்பிரிவு டீச்சரின்
சாக்பீஸ்
தாற்றனின் விதியை
எழுதிச் செல்கிறது
கரும்பலகையிலிருந்து
பனிமழைபோல
சுண்ணாம்புத் துகள்கள்
உதிர்கின்றன.

மங்கலான சூரிய ஒளி
முன் வரிசை இருக்கையில்
கீற்றாக விடுகிறது
நீளவாக்கில்
ஒருபுறம் நீலக் கோடுகள் போட்ட
பதிவு நோட்டில்
எல்லோரும் எழுதுகிறோம்
எழுதிச் செல்லும்
கைகளின் வழியே
நினைவு செல்கிறது..

அன்றொரு நாள்
என் தந்தை
மர இருக்கையின் மேல்
முனை மழுங்கிய
புழுக்கைப் பென்சிலால்
எழுதத் துவங்கிறார்
வரியை எழுத விடாமல்
அழைத்துச் செல்கிறது
தாய்மை

தலைமையாசிரியர்
அறைக்குப் போகும்
சிறிய பாதை
அழைத்துச் செல்லும்
நோக்கத்தை
அறியுரைக்கிறது
தாய்மை
"இனிமேலும் முடியாது
இந்த
குடும்பச் சுமையைத் தாங்க
நம் குடும்பம்
செழிக்க வேண்டும்
உன்னால்"

காலம் மெல்ல நகர்கிறது
மனதால் கலந்து
கனவுகளால் கனிந்து
ஜனனமானேன்

பெற்றோரின் தூண்டலால்
உயர்நிலைப் பள்ளியின் வகுப்புகள்
துவங்கும்
முதல் நாள்
வழித்து சீவிய தலையும்
புது புத்தகப் பையமாக
அன்று நின்றேன்

கூரை வழியே வந்த
மழைத்துளி
என் முகத்தில் பட
தந்தைக்காக
என் இலட்சியத்தை
எய்த
சற்று முன் வந்த
கற்பனை கலைய
தாற்றனின் விதியைத்
தொடர
நண்பனின்
நோட்டை நோக்கித்
திரும்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியத் தொழில்

க. குணநாயகி
சமூக விஞ்ஞானப்பிரிவு, 2ம் வருடம்

தெள்ளிய நல்லறிவினை தேர்ந்தளித்து
நுண்ணறிவு திறனாய்ந்து நுணுக்கமுற கண்டறிந்து
நல்லோராய் திகழும் வகை கற்பிக்கும்
உயர்வான தொழிலாம் - ஆசிரியத்தொழில்

மனதின் பாங்குகளை உய்ந்தறிந்து
கொள்கையிலும், தன்மையிலும், குணத்திலும் சிறந்த
உறுதிபெற்ற நல்ல மாணவராய், சமுதாய உறுப்பினராய்
வடிவமைக்கும் தொழிலாம், ஆசிரியத்தொழில்

வையகத்தில் நெறிபிறழாப் பண்புடையவராய்
நிலைக்குலைந்து சீர்கெட்டுப் போகாதவராய்
வல்லவராய் வாழ சிந்தைக்கு உணவூட்டி
சேவை புரியும் தொழிலாம் - ஆசிரியத்தொழில்

பயனுள்ள தத்துவங்களை வாழ்வில் பயில
சோர்வை நீக்கி நல்லார்வத்துடன் செயல்பட
சொல்லில் செயலில் நேர்மை பேண
வழிகாட்டும் தொழிலாம் - ஆசிரியத்தொழில்

கண்ணியமாய் நடந்து இனியமொழி பேசி
பண்பார்ந்த ஒழுக்க நெறிகளை விதைக்கும்
தரணியிலே மிகச் சிறந்த - உன்னதமான
சீரிய தொழிலாம் - ஆசிரியத்தொழில்

# அன்புத் தாயே!

ஆர். இந்திரகலா
நடனசங்கீத பிரிவு, 2ம் வருடம்

பத்துமாதம் சுமந்து பகலிரவாய் காத்து
இன்றுவரை என்னை
சுகமான சுமையாக சுமக்கின்றாயே
என் அன்புத்தாயே

உன் சுமையை குறைக்க நான்
நினைத்தாலும்
காலமும் நேரமும் அதற்கு
முட்டுக்கட்டையாகி என்னை
இறுக்க கட்டி விட்டனவே

என் வாழ்க்கையில் பல
தடைக்கற்களை
வெற்றி படிக்கட்டுகளாய் மாற்றி
எனை அதிலேற்றி
அழகு பார்த்தாயே அன்புத்தாயே

ஒரு ஏட்டில் எழுத முடியவில்லை
என் இதயத்து சோகங்களை
ஒரு பாட்டில் அடக்க முடியவில்லை
நீ என்னால் படும் பாட்டை

உள் உள்ளக் குமுறல்கள்
என் உடம்பில்
உதிரமாய் ஓடுதம்மா
உனை நினைத்து நித்தமும் எனை
வாட்டுதம்மா

என் நெஞ்சிலிட்ட உன்
அன்புக் கோலங்கள்
ஆயிரம் காலம் சென்றாலும்
அழியாத கோலமம்மா!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித நெஞ்சங்களிலிருந்து

**ஆ. மங்களேஸ்வரி**
தமிழ்ப்பிரிவு, 2ம் வருடம்

பெற்ற பிள்ளைகளை
பத்திரமாய் கரை சேர்த்திட
துடிக்கிற ஒரு நெஞ்சங்களில்
துளிர் விடுகின்ற ஆசைகள் தான்
எத்தனையோ..

மழையிலும் வெயிலிலும்
மாடாய் உழைத்த கஷ்டமெல்லாம்
பிள்ளை ஆளாகி சேர்த்திடும்
பெருமைகளால் பறந்து விடுமென ஏங்கிடும்
பாலாய்போன நெஞ்சங்களின்
ஏக்கங்கள் தான் எத்தனையோ....

பாடுபட்டு வளர்த்த பிள்ளை
பள்ளிப் படிப்பை முடித்து
கல்லூரிக்கு செல்லும் நாளில்
கண்களில் கண்ணீர் பெருக
கைகளை இறுக பற்றிக்கொண்டு
பிரிய மனமில்லாமல்
என்ன சொல்வதென்றறியாமல்
"நல்ல பிள்ளையாக இருந்து
நன்றாக கற்று வா என செல்வமே"
என விட்டு சென்ற அந்த நெஞ்சங்களில்
உண்டான
எதிர்பார்ப்புகள் தான் எத்தனையோ...!

கற்று முடியும் காலம் எப்போது
கவலைகள் தீரபோகும் காலம் எப்போது?
என கல்லூரியின் வாயிலை
பார்த்தப்படி காத்திருக்கின்றனவே
அந்த புனித நெஞ்சங்கள்!

# மேகம் கறுக்குமா

**சி. செல்வகுமார்**
சங்கீதப்பிரிவு, 2ம் வருடம்

உடல் வளம்
உழைப்பு கொண்டு
உயர்நிலையடைய
கடல்வழி இலங்கை வந்து
காடு, மலை, காற்று தாங்கி
அடவி சூழ் சிகரமெங்கும்
அழகு சூழ் தேயிலை இபர்
நாட்டி
இடர்படும் வாழ்வு கொண்டோம்

உழைப்பால்
தொடவொணா சிகரமெல்லாம்
எழில் பெறச் செய்தோம்
எமதுயிர் பாட்டன் பூட்டன்
பொழிலென மாற்றிய
இந்நாட்டின் விழிகளில்
துயரமே மிச்சமாகின

லயமெனும் நீண்ட குடிசை
லயித்திட முடியா வாழ்வு
நிந்தனையை மாற்ற - எந்தப்
புயலும் வரவில்லை

பரம்பரை சோகம் முடிக்க
முனைப்பும் எடுக்கவில்லை

நிழல்தரா மரங்கள்
நிற்கும் தேசத்துள்ளே
நிழல் பெற எதுவுமின்றி
நிர்க்கதியற்றோர்
எம்மக்கள்
உழன்றிடும் நிலை மாற்ற
உழைப்பினை உறிஞ்சும்
உன்மத்தர் வீழ
பனித்துளி வந்து சூழும்
பசுமலை காட்டு மக்கள்

இனிவரும் காலம்
இனிதாய் மாற
கனிமழை மேகம்
கறுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லை என்பதை

**எம். ரேவதி**
தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பிரிவு
2ம் வருடம்

உழைப்புக்கான
ஊதியமில்லை
உணர்வுகளுக்குரிய
மதிப்பும் இல்லை

வீடிருந்தும்
கூரையில்லை
வயது வந்தும்
தொழிலில்லை

காணும் கனவுகள்
நிஜமாவதில்லை
கடன்களைத் தீர்க்க
பணமும் இல்லை

வாக்களித்தும்
பயனில்லை
தலைவர்களின்
கருணையும் இல்லை

பாதி நாட்களுக்கு
உணவும் இல்லை
பள்ளி செல்ல
மனமும் இல்லை

நாட்டின் முதுகெழும்பாம்
முன்னேற வழியுமில்லை
இரவுகள் யோசனையால்
தூக்கமும் இல்லை

வாழ்வில் முன்னேற
எண்ணமிருந்தும்
வழிமுறைகள் சொல்ல
யாரும் இல்லை

இல்லை இல்லையென
இனியும் எண்ண
முடியவில்லை
நாளை நமதென
நம்பிக்கைக்கு
தோல்வியும் இல்லை

# நினைவாகும் ஒருநாள்

**எம்.சத்தியராஜ்**
தகவல்தொடர்பாடல் தொழினுட்ப பிரிவு
2ம் வருடம்

கடல் தாண்டி
மலையேறி வந்த
மக்கள் நாம்
மலையில் தேயிலை
கொழுந்து பறிக்க
என் தாய்
புல்லு வெட்ட
என் தந்தை

காலை மாலை உணவு - அது
அவர்களின் கனவு
எரிக்கும் பகலவனின் வெப்பம்
கண்ணீர் விடும் மேகங்கள்
அது மழைத்துளி
அதனிடையே துன்பப்படும்
என் தாய் தந்தை

பிள்ளைகளுக்கு உணவு
பெற்றோர் வியர்வையில்
கிடைத்த பலன்
பிள்ளைகளின் எதிர்காலம்
அதுவே அவர்களின்
நிகழ்கால இலக்கு

கண்களில் உறக்கம்
கால்களில் நடுக்கம்
ஆனால்
இதயத்தில் திடம்
கதைகள் கேட்டு வாழும்
எனது பெற்றோரின் கனவு
நினைவாகும் ஒரு நாள்
அது என்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையின் மைந்தனுக்கு

செல்வி.நம்பிக்கை நாயுடு சசிரேகா
தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்
1ம் வருடம்

சாமமும் விடியலுமாய்
மாறி மாறி வந்தாலும்
எனக்கு மட்டும் விடியவில்லை
என்றே ஏங்கிக் கொண்டு

காலக் குதிரைக்குக்
கடிவாளம் போட்டதனைக்
கட்டி வைக்கும் கலை தெரியாக்
கவலையிலே கரைந்து கொண்டு

விதியைச் சபித்துக் கொண்டு
வேதனைகளைப் புதைத்துக் கொண்டு

உடலின் உதிரமெல்லாம்
கண்ணீராய் உதிரவிட்டு
வற்றி வதங்கிப் போவதானால்-உலகுன்னை
வெற்றி வீரன் என்றிடுமோ?

எதிர்த்து விதியதனைப்
பொடித்து உரமாக்கி
வாழ்க்கைத் தாவரத்தின்
வேரில் நீ தூவு

நாளை உலகமது
உன்னை வியக்கவொரு
நல்ல சரித்திரத்தை
நீயே உருவாக்கு .... !

# முற்றுப்பெறாத முற்றுப்புள்ளி

ரா.சந்திரகலா
ஆரம்பக்கல்வி

தேயிலை செடிகளுக்குள்
தேடித் திரிகின்றோம்
எங்கும் காணவில்லை
எதுவும் கிடைக்கவில்லை
ஊருக்காக உழைத்து
உரமானவர்கள் தேயிலை செடிகளுக்கே
கொப்பிகளை தூக்கும் வயதில்
தேயிலை கூடைகளை சுமந்து
பிறர் கானம்பாடி மகிழும்
பொழுதுகளில் நாங்கள்
காப்பு காத்த கைகளுக்கு
கண்ணீரை மருந்தாக்கினோம்
ஓய்வெடுக்க வேண்டிய
நேரங்களிலும் ஓட்டமிட்டு
உழைக்கின்றோம்
கால்வயிறு வயிற்றுக்காக
கால்கடுக்க நிற்கின்றோம்
இன்னும் எத்தனை நாட்கள்
இங்கையே எரிந்துகொண்டு
இருப்பது தெரியவில்லை
அறுபது வயதில் இது முற்றுப்புள்ளியென
நான் நினைக்க
என் பிள்ளை பேரப்பிள்ளையென
என்னுடன் இணையும்போது
முற்றுப்புள்ளியும் ஆரம்பிக்கின்றது
ஆரம்பத்தில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வு

கே. ஹம்சாஹினி
தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்
1ம் வருடம்

கல்லுக்குள் செறிவாம்
கல்விக்குள் அறிவாம்
சொல்லுக்குள் பொருளாம்
சுடருக்குள் ஒளியாம்

பணிவுக்குள் உயர்வாம்
பண்ணுக்குள் இசையாம்
பனியதற்குள் குளிராம்
மனதிற்குள் நினைவாம்

கரும்புக்குள் சுவையாம்
பூவுக்குள் தேனாம்
மொட்டுக்குள் மணமாம்
மனித முயற்சிக்குள் வாழ்வாம்

## ஏக்கம்

யு.கிருஸ்பன் ரோய்
ஆரம்பக்கல்வி, 1ம் வருடம்

சொல்லலாமல் சுமை வந்தது
சொல்லிவிட்டு உறவு வந்தது
உறவோடு சுமை வந்தது
சுமை வடிவில் இதயம் ஏக்கம் கொண்டது

மயானம் அன்றே என்னை அழைத்தது
செல்லவில்லை என் கண்மணியே
எண்ணி இன்றழைத்து முடியவில்லை
முழுக்கடனும் முடியவில்லை என்றும்

பட்டுவேட்டி பழையதால் - என்
பண்டிகையே தள்ளிப்போனது
பாவப்பட்ட தாரத்தை தங்க வார்த்தை
மட்டும் நித்தம் அலங்கரித்தது

வரட்டு கௌரவம் என் வாழ்க்கையை
வகையின்றி வாடவிட்டது - வந்த
கடன் மட்டும் வரவாய் இருக்க
வானம் வாழ்த்துறை பயின்று என்ன பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வருவேன்

ஆர். திலிபன்
ஆரம்பப்பிரிவு, 1ம் வருடம்

என்னுடைய தோல்வி எனைக் கொன்றது
இருட்டும் எனைக் கொன்றது
நான் மிரண்டேன்
அல்லது மிரள வைக்கப்பட்டேன்
என் உறவுகள் வரையறுக்கப்பட்டன

ஆனால் என் இரவுகள்
என்னை விடுவதாயில்லை
என்னில் எழுந்த அவ்வுணர்வு
அதிலிருந்து மீண்டேனா? இல்லை

நான் கொல்லப்பட்டேன்
நான்கு வருடங்களுக்கு முன்
அன்று என் சுவாசம்
மட்டும் தான் நல்லடக்கம் செய்யப்பட்டது
என் உடல் மற்றும்தான் வாழ்கின்றது
என்னில் எழும் புது சுவாசத்துடனும்
புது உணர்வுடனும்

ஆனால் நான் மீண்டும் ஒருமுறை
இறக்கப் போவதில்லை

என் புது உணர்வு எழுகின்றது
நான் வீழ்த்தப்படுவதையும்
நாங்கள் வீழ்த்தப்படுவதையும்
தகர்த்தெறிய

# கனவு

நா.ராமதாஸ்
ஆரம்பக்கல்வி, 1ம் வருடம்

கனவு கதைகளின் தாயகம்
கண்ணிமையின் உறைவிடம்
நித்திரையின் சொர்க்கப்புரி
நீளாத நினைவுப்படி
அன்றலர்ந்த மலரின் - அச்சொட்டு
நினைவலையை ஆதாரமாய் தந்துச்செல்லும்
அகப்பட்டவன் நலமிருக்க அன்று
இரவின் நீளத்தை இன்பமூட்டு செல்லும்

கனவில் காரணம் கூற கனவுக்கு
தேவையில்லை - காரணம் காண உன்
கண்களே கவலைப்படுகின்றது காம்பினை
பூவறியாததுபோல

மௌனங்களை நினைவுத்திரையில் தீட்டச்செல்லும்
இதனை நித்தமும் நெருங்காதே
அது உன்னை மெய்யாகவே
தன் கோட்டையில் சிறை செய்து விடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகடிக்குமோ மலையகம்

ஆர். பிரியதர்ஷனி
விஞ்ஞானப்பிரிவு, 2ம் வருடம்

சில நேரங்களில் சிந்தனைகள்
சிகரத்தை தொட்டிட
சிந்திக்கின்றன....!
சிந்தனைகள் சிந்தித்து என்ன
பயன்....!
சிகரமே சிதறிவிட்டதே....!

ஆண்டாண்டு காலம்
அரை குறை அபிலாஷைகளோடு
வாழும்
வழிதவறி வந்த
வம்சாவழிகள் நாங்கள்....!

குதிரைகளுக்கு கட்டப்பட்ட
லயங்கள் - இன்றுவரை
நாங்கள் குடியிருக்கும்
மாட மாளிகைகள்

விண்ணில் இருந்து - வீழ்ந்திடும்
மழைத்துளிகளுக்கு
இடம்கொடுத்திட கூரைகளில்
ஆங்காங்கே சில
ஓட்டைகள் ....!
ஓட்டைகளின் ஓரத்தில்
ஓட்டைகள்....!

எங்கள் வாழ்க்கையில்
சோதனைகள் சாதனை
படைக்கின்றன....!
கண்களின் ஓரம் கண்ணீர்த்துளிகள்
உதிரத்துளிகளாய்
உதிர்கின்றன....!

இத்தனையும் கண்டு
இனியும் - இந்த
இயலாமை இயலாது - என்று
இதயங்களுக்கு கூறி
இதமாய் ஒரு புரட்சி - ஏற்பட்டு
புவியெங்கும் சுழன்று
புகழ்பரப்பிட துணிவோடு நிற்கின்றோம்
நாங்கள்....!
அன்று ரஸ்யாவில் நடந்ததை
போல் அல்ல....!
பிரான்ஸில் நடந்ததை
போல் அல்ல....!
அமெரிக்காவில் நடந்ததை
போல் அல்ல....!

இதயங்களை வென்று
ஈழத்தில் இனிது - வாழ்ந்திட
நடந்திடும் - "தார்மீக புரட்சி" - இது
இங்கு ஆயுதங்கள் இல்லை!
அராஜகங்கள் - இல்லை
அணுகுண்டுகள் - இல்லை
அஹிம்சை வழிநின்று - அவரவர்
உரிமை கேட்டிடும் - "சாத்வீக புரட்சி" இது

நிச்சயம் நிழல்களை
நிஜமாக்கி
நினைவுகளை
நிரந்தரமாக்கிடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரம்

எஸ். விதர்ஷனா
விஞ்ஞானப்பிரிவு, 1ம் வருடம்

விடியற்காலை எழுந்து நின்று
விறுவிறுன்று தலைவாரி
வினாடியிலே முகம் கழுவி
விறகெடுத்து அடுப்பு மூட்டி
தேத்தண்ணி கலக்கி தந்து
சோறுகறி சமைச்சி வச்சி
கலங்கும் குழந்தையை
குளிப்பாட்டி உடையும் மாற்றி
தலையில் துணியை போர்த்திக்கொண்டு
கூடையை முதுகில் சுமந்துகொண்டு
பக்கத்து வீட்டு அக்காவோடு
பனியினிலே பசும்மலையேறி
கொழுந்து இலைகளை கிள்ளி
கூடையிலே வீசுகையில்
கொடுக்கால் கொட்டும் தேன்போல்
கடிந்துக் கொள்ளும் - கங்காணி
சாயங்கால நேரத்துல சலிப்போடு
வீட்டுக்கு சல்லியோடு வரும்போது
இடையிடையே புழுங்குகிறான்
எனக்கு வாய்த்த என் புருசன்
நாட்டுக்கு தந்த சுதந்திரத்தை
தோட்டத்து பெண்களுக்கு எப்போ
தருவான் என ஏங்குதடி - என் மனசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி கற்பித்தலில் நவீன தொடர்பு சாதனங்களை கையாளுதல்

ப.சத்தியசீலன்
சங்கீதப்பிரிவு
இரண்டாம் வருடம்

தமிழ் மொழி விஞ்ஞான தொழிநுட்ப யுகத்திலே புகுந்து வளர்ந்து கொண்டு வருகிறது தொன்று தொட்டு தமிழ் மொழி பேச்சின் மூலமும் எழுத்தின் மூலமும் கருத்தைப் பரிமாறிக் கொள்வதாகவும் கற்பிப்பதாகவுமே இருந்து வந்துள்ளது. நமது பண்டைய சமூகத்தில் யாவும் இலக்கியங்களைப் பற்றிய அறிவு குறைவாகவே இருந்தது. படிப்பறிவுள்ளோர்கள் அரிதாக காணப்பட்டமையே இக் குறைபாட்டுக்குக் காரணம். ஐரோப்பியர் காலத்தில் நிவர்த்தியாக்கப்பட்டது. அவர்களின் மதப்பிரசார நடவடிக்கைகள் முக்கிய காரணமாக தமிழ் எளிமைபடுத்தப்பட்டது. கற்றோர் எண்ணிக்கை அதிகரிக்கலாயிற்று. இன்னும் பல புரட்சிகள் நவீன உலகில் தோன்றின. தற்காலத்தில் அவற்றின் வளர்ச்சி பெருகி விட்டது.

அச்சு ஊடகம், மேந்தலை எறியி, வானொலி, தொலைக்காட்சி, கணணி, இணையம், பல்லூடகம் போன்றன மொழி கற்பித்தலுக்கு முக்கிய காரணமாகவும், சமூகத்தில் கீழ்மட்டத்திலிகும் பாமர மக்களுக்கும் மொழியைப் பற்றி அறிந்துக் கொள்வதற்கும் அளப்பரிய சேவையாற்றி வருவது நவீன தொடர்பு சாதனங்கள் என்றால் மிகையாகாது.

மொழி கற்பித்தலுக்கு அச்சு ஊடகம் எவ்வாறு பங்களிப்பு செய்கிறது என்று நோக்குவோமாயின் செய்யுள்கள், நவீன கவிதைகள், போன்றவற்றையும் ஏனைய விடயங்களையும் ஐரோப்பியர் காலத்தில் மக்களுக்கு கல்வியை புகட்டுவதற்கு புலவர்களும், ஆசிரியர்களும் ஒரு இடத்திலிருந்து கற்பிப்பதற்கு இவ் அச்சு ஊடகம் உதவியது. அத்தோடு பத்திரிக்கைகள், சஞ்சிகைகள், நூல்கள், துண்டுப்பிரசுரங்கள் போன்றவற்றை வெளியிடுவதற்கும் உதவியது. அத்தோடு தமிழ் மொழியை வளரச் செய்ய ஓரளவு படித்தவர் மத்தியிலும் படிக்காதவர் மத்தியிலும் எளிமையாகக் கிடைக்க செய்ய அச்சு ஊடகம் உதவியது என்றால் அது மிகையாகாது.

அடுத்து மேந்தலை எறியி பற்றி பார்ப்போமாயின் ஆரம்ப காலத்தில் எழுதப்பட்ட செய்யுள்கள் மற்றும் ஏனையவற்றை கஷ்டமின்றி இலகுவாக விளங்கப்படுத்துவதற்கு இக் கருவி உதவுகின்றது இதில் முக்கியமாக செய்யுள்களை கற்பிப்பதற்கே இக் கருவி உதவுகின்றது என்றால் அது மிகையாகாது.

வானொலி, தொலைக்காட்சி என்பன பற்றி நோக்குவோமாயின் எந்தவொரு விடயத்தையும் மக்கள் மத்தியில் விரைவாக எடுத்துச் செல்வதற்கு உதவுகின்றது இவற்றினை கேட்பதன் மூலமும் பார்ப்பதன் மூலமும் பல கற்றல் தொடர்பான தேடல்களையும், அறிவினையும் பெற்றுக் கொள்ள உதவுகின்றது. அதாவது விவாதம், கலந்துரையாடல், பட்டிமன்றம், நாடகம்,கவிதை போன்றவற்றிற்கு சந்தர்ப்பம் வழங்குகின்றது. அத்தோடு இலக்கியங்கள், நூல்கள் பற்றிய விமர்சனங்கள் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றிற்கும் உதவுகின்றது அத்தோடு தற்போது வானொலிகளும், தொலைக்காட்சிகளும் பல போட்டிகளை நடத்தி ஊக்குவிப்பு வழங்குகின்றன அத்தோடு தமிழ் மொழி வளர்ச்சிக்கு பெரிதளவு பங்காற்றவிட்டாலும் அப்போது உள்ள நிறுவனங்கள் ஒரு இரண்டு தரமான நிகழ்ச்சிகளையாவது நெறிப்படுத்தி ஒளிபரப்பாகி வருகின்றன என்றால் அது சிறந்த விடயமாகவே கருத முடியும்.

21ம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்துள்ள இக்காலகட்டத்தில் தகவல் தொழில்நுட்பம் மிக வேகமாக வளர்ச்சியடைவதற்கு மனித இனத்தில் முதல் மொழி ஊடகமாக இணையம் விளங்குகின்றது. அது கற்பிப்பதற்கும் ஒரு இலகுவான ஊடகமாக விளங்குகின்றது. உதாரணமாக "தமிழ் ஸ்பை", "மனிதம்", "மதுரை" .com போன்ற இணைய முகவரிகளை கொண்டு பார்தால் பல தகவல்களையும் பெறுவதற்கு உதவுகின்றது.

இன்று தமிழ் மொழி இணையம் வழியாக மென்மேலும் வளர்ச்சியடைந்துள்ளது என்றால் அது மிகையாகாது. இன்று ஆயிரக்கணக்கான தமிழ் வலைப் பக்கங்களும் இலட்சக்கணக்கான வாசகர்களும் இருக்கின்றார்கள். இவ் இணையம் மூன்று வகையான முறையில் தகவல் தொடர்பு முறைகளைக் கொண்டுள்ளது. இந் நிலையில் மொழியின் வளர்ச்சியும், இருப்பும் இன்று தொழிநுட்பத்தின் கையில் தங்கியுள்ளது. இன்று வீட்டுக்குவீடு இணையம் காணப்பட்டாலும் அது சாதமா? பாதகமா? என்பதே பிரச்சினை. இவ்வாறு இவ் ஊடக சிறப்பான சேவையை ஆற்றி வருகின்றது. அது பல தகவல்களை தேடுவதற்கும் கற்பதற்கும் இலகுவாக இருக்கின்றது என்றால் அது மிகையாகாது.

ஆரம்பத்தில் எழுத்து மூலமும் பேச்சு மூலமும் பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வருகிறது. பேச்சு வழியாகவும் எழுத்து வழியாகவும் தகவல்களைப் பெறுவதற்கு நீண்ட காலம் எடுத்தது. அதனை நிறைவு செய்யும் முகமாகவே தற்காலத்தில் கணனி உருவெடுத்திருக்கின்றது என்றால் அது கணனிக்கு கிடைத்த ஒரு சாதகமான விடயம். இன்று வீட்டுக்கு வீடு ஒரு கணனி காணப்படுகின்றது. அதாவது தமிழ் அகராதிகள் அதில் பதித்து வைத்திருப்பதால் தெரியாத சொற்களுக்கும் அர்த்தங்களை பெற்றுக் கொள்ள உதவுகின்றது. வேறு மொழிகளில் உள்ள தகவல்களையும் எமது மொழியில் பெற்றுக் கொள்ளலாம் அத்தோடு தகவல்களை இலகுவாகவும், தெளிவாகவும் பெற்றுக்கொள்ள இன்று முக்கிய இடத்தைப் பெறுவது ஏனைய ஊடகங்களை விட கணனியே சிறந்ததாக விளங்குகின்றது.

அடுத்து பல்லூடகத்தை பற்றி பார்த்தால் பல்லூடகம் என்னும் போது மேற்குறிப்பிட்ட சகலமும் சேர்கின்றது. அனைத்திலுமே தகவல்களைப் பெறுவதற்கும் கற்றலை சிறப்பாக செயற்படுத்தவும் இவ் அனைத்து ஊடகங்களும் சிறப்பான பங்காற்றுகின்றன என்றே கூற வேண்டும். அவற்றை பொருத்தமான விதத்தில் பயன்படுத்தும் ஆற்றலை ஆசிரியர்கள் வளர்த்துக்கொண்டு மொழிக்கற்பித்தலில் பிரயோகிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய கல்வியும் கல்வியற் கல்லூரிகளும்

ச.சகுந்தலாதேவி
கர்நாடக சங்கீதப் பிரிவு
இரண்டாம் வருடம்

நமது நாட்டின் ஆசிரிய கல்வி நீண்ட வரலாற்றினை கொண்டது. பண்டைய காலத்தில் குருகுல கல்வி முக்கியத்துவம் பெற்றிருந்தது. குரு தனது சிஷ்யர்களுக்கு அனுபவத்தையும் அறிவையும் பாரம்பரியத்தையும் கடத்தும் செயற்பாடாக இக்குருகுல முறைமை அமைகின்றது. பெரும்பாலும் குருவின் இல்லங்களிலும், கோயில்களிலும் இக்குருகுல கல்வி முறை இடம் பெற்றது. இங்கு தான் கல்வியில் தோற்றமும் தொடக்கமும் வளர்ச்சியும் ஆரம்பமானது. பின்னர் படிப்படியாக மாறி ஆங்கிலேயர் தமக்கேற்ற தமது நாட்டு முறையிலான ஆசிரிய பயிற்சி கல்லூரியை ஆரம்பித்தனர்.

இலவசக் கல்வி அறிமுகத்துடன் அதிகளவில் அதிகரித்த பாடசாலைகளில் ஆசிரியர்களும் அதிகமாக சேர்க்கப்படலாயினர். ஏற்கனவே இருந்த நிலையங்களால் ஆசிரிய பயிற்சிக் கேள்வியினை ஈடுசெய்யாரியலாத நிலை இருந்தமையால் பல புதிய ஆசிரிய பயிற்சி கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன. கல்லூரிகளிலும் பலவித பாடநெறிகள் புகுத்தப்பட்டன. பல்கலைகழகத்தின் வெளிவாரி முகவர் நிலையம் மூலம் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. இவ்வாறான முயற்சிகளின் மூலமும் ஆசிரிய தேவையை திருப்திகமாக பூர்த்தி செய்யவியலாத நிலையில் ஆசிரியப்பயிற்சி தேவை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே இருந்தது. புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு ஆரம்ப கல்வி, இடைநிலைக்கல்வி போன்றவற்றில் பயிற்சிகளும், அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. பிற்காலத்திலே ஆசிரிய கல்விப்பயிற்சி முறைகளில் மாற்றங்கள் எழுவதற்கான சூழல் உருவானது.

1980ம் ஆண்டு கல்விச்சீர்த்திருத்த, கல்வி வெள்ளையறிக்கையுடன் ஆசிரிய ஆட்சேர்க்கும் முறையிலும் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி அனைத்து ஆசிரியர்களும் நியமனத்திற்கு முன்பே தொழில்சார் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இங்கிலாந்து போன்ற மேற்கத்தேய நாடுகளில்க கல்விக்கல்லூரிகள் மூலம் வழங்கப்படும் சேவை முன்பயிற்சியின் முக்கியத்துவம் இங்கு உணர்த்தப்பட்டது. இது ஆசிரிய சேவைக்கு கட்டாயமானதும் தவிர்க்கப்படாததும் என்று ஆலோசனையளிக்கப்பட்டது.

எனவே, தற்போதைய எதிர்க்கட்சி உறுப்பினரான திரு.ரணில் விக்கிரமசிங்க அவர்களின் ஆலோசனையின் வெளிப்பாடாக கல்வியற் கல்லூரிகள் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டன. 1985ம் ஆண்டு கல்வியற் கல்லூரிகள் தொடக்கி வைக்கப்பட்டன.

ஆங்கில மொழி மூலம் பஸ்துண்ரட்ட கல்வியியல் கல்லூரி களுத்துறையிலும், சிங்கள மொழிமூலம் சியன கல்வியியல் கல்லூரி வெயாங்கொடயிலும், சிங்கள மொழி மூலம் ஹாபிற்றிகம கல்வியியல் கல்லூரி மீரிகமயிலும், சிங்கள மொழிமூலம் ஊவா கல்வியியல் கல்லூரி உயன்வத்தையிலும் ஆரம்பிக்கப்பட்டன. ஏற்கனவே ஆசிரிய பயிற்சி கலாசாலைகளாக இருந்தவையே இவ்வாறு கல்வியற் கல்லூரிகளாக மாற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றன. அதாவது ஆசிரிய சேவை முன் பயிற்சி நிறுவனங்களாக செயற்படத் தொடங்கின என்பது குறிப்பிடத்தக்கது.

1986ம் ஆண்டு இவற்றிற்கு ஏகமனதான அங்கிகாரம் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டது. அப்போது ஏற்கனவே அமைக்கப்பட்ட கல்வியற் கல்லூரிகளுக்கும் அதிகாரபூர்வமான அந்தஸ்து வழங்கப்பட்டது. இக்கல்வியற் கல்லூரிகளுக்கு தேசிய கல்வி டிப்ளோமா பட்டம் வழங்கவும், படிப்படியாக கல்விமானிப்பட்டம் வழங்கவும் ஏற்பாடுகள் சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

1987ம் ஆண்டு அக்குரஸ்ஸயில் ஜப்பானிய அரச அனுசரணையுடன் நில்வள கல்வியற் கல்லூரியும் 1991ம் ஆண்டு ஜேர்மன் அனுசரணையுடன் பத்தனை ஸ்ரீபாத கல்வியற் கல்லூரியும் புதிய கட்டிட வசதிகளுடன் ஆரம்பிக்கப்பட்டன.

இலங்கையில் ஆசிரிய கல்விக்கு மிக முக்கிய இடமளிக்கப்பட்டுள்ளது. எனவேதான் ஆசிரிய கல்வியிலும் அதனுடன் இணைந்த துறைகளிலும் கட்டாயம் கவனம் காட்ட வேண்டியது அவசியம். ஆசிரிய நியமனம் பெறுவதற்கு எதிர் காலத்தில் தேசிய கல்வியற் கல்லூரிகள் மூலம் தொழில்சார் பயிற்சி பெற்றிருத்தல் கட்டாயமென்று கூறப்படுகின்றது.

எனவே கல்வியற் கல்லூரிகளில் இருவருட வதிவிட உள்ளகப் பயிற்சியும் ஒரு வருட கட்டுறுப்பயிற்சியும் அளிக்கப்படுகின்றது. 25 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலரும் அனுமதிப் பெறுகின்றனர். மேலும் க.பொ.த(உ/த) தரத்தில் சித்தியடைந்து அதி உயர் புள்ளிகள் பெற்றவர்களே பயிற்சி நெறிகளுக்கு சேர்க்கப்படுகின்றனர். இங்கு முதலிரு வருடங்களுக்கு மாதாந்தம் ரூபா 2500 வும், மூன்றாம் வருடம் மாதாந்தம் 3000 ரூபாவும் உணவு, விடுதி செலவிற்காக அரசினால் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. பயிற்சி முடிவில் தேசிய கல்வி டிப்ளோமா பட்டம் வழங்கப்படுகின்றது. பட்டமளிப்பு வைபவத்தில் இது உறுதி செய்யப்படும். இன்று நாட்டில் 17 கல்வியற் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. ஆசிரிய கல்விப் பயிற்சி வேலைத்திட்டங்களாவன: ஆசிரிய தொழில் பெறுவதற்கு முன்னரே தொழில் சார் பயிற்சி பெற்ற ஆசிரியராக பயிற்றுதல். முழுநேர தொழிற் திறன் பெறும் இப்பயிற்சி சேவை முன் பயிற்சி எனப்படும். இவற்றை விட ஒரு குறிப்பிட்ட தொழில்சார் ஆரம்பப் பயிற்சிப் பெற்றதன் பின் சேவையில் இருந்துக் கொண்டே தகுதிகளை விரிவாக்கும் நோக்குடன் பெறும் தொடர்கல்விப் பயிற்சிகள் இவ்வாறான பயிற்சி நெறிகள் கல்வியற் கல்லூரிகளிலேயே இடம்பெறுகின்றன. கற்கை நெறிகளின் தரமும், தகுதியும் பயனும் பற்றி பொதுவில் நல்லதொரு அபிப்ராயம் நிலவுகின்றது. ஆசிரிய கல்வியில் மனித மாண்புகளும், மக்கட் பண்புகளும் உயர் ஒழுக்க விழுமியங்களும் உயிரோட்டத்துடன் இழையோடுகின்றன.

ஆசிரியர்கள் புத்துலகம் படைப்பவர்கள். ஆசிரியர்கள் சமுதாய வழிகாட்டிகள். ஆசிரிய தொழில் புனிதமானது, மகத்தானது, பாரியது, தொழிலின் தரமும் திறமும் பேணப்பட வேண்டிய ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக கல்வியில் புதிய சாத்தான்கள்

K.ராஜேஸ்வரன்
சமூக விஞ்ஞானப்பிரிவு
இரண்டாம் வருடம்

இலங்கையில் பொருளாதார சுமையை தாங்கும் கூடையான மலையகம் இன்று கல்வியாலே வளர்ந்த சமூகமாக காணப்படுகின்றது. 1820 இல் எமது வரலாறு ஆரம்பிக்கப்பட்டு இற்றைக்கு 190 வருடங்களுக்கு மேல் ஆகினாலும் கல்வியில் இலவச கல்வி (1945) அறிமுகத்தின் பின்னரே நாம் எழுச்சி அடைய தொடங்கினோம். இன்று இதில் பெரும் தளர்வு ஏற்பட வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. "நவீன தொழிநுட்ப சாதனம்" எனும் சாத்தான் எம்மை அடிமையாக்க முயற்சித்துள்ளது.

ஒரு காலத்தில் நாடற்றவர்களாகவும், பல குறியீட்டு பெயர்களாலும் அழைக்கப்பட்ட நாம் வாக்குரிமையின்றி, தேசவிரோதிகளாய் பிறரால் நோக்கப்பட்டோம். இலவச கல்வியால் படிப்படியாக முன்னேறி எமக்கென ஒரு கல்லூரி, எதிர் காலத்தில் ஒரு பல்கலைகழகம் (கனவு தான்) என வளர்ந்த இன்று எம்மை இவ் தொழிநுட்ப சாத்தான் ஆட்டிப்படைக்க ஆரம்பித்துள்ளது. மேலும் மாணவர் மனதில் அவர்களை அறியாமல் தொல்லை நுட்பிகளாக பின்வரும் நச்சு திரவியங்கள் தெளிக்கப்பட்டுள்ளன.

தொலைபேசி, வானொலி, இறுவட்டு இயக்கி, கணினி, இணையத்தளங்கள், செய்மதி தொலை காட்சி சேவை போன்ற நவீன் தொடர்புசாதனங்களான இவை எவ்வாறு மாணவர்களது கல்வியைப் பாதிக்கின்றன என நோக்குதல் வெண்டும்.

தூர பிரதேச பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக பெற்றோரால் வழங்கப்பட்ட தொலைபேசியினால் எமது மாணவர்களின் தவறான பிரயோகங்கள் காரணமாக தொல்லை பேசியாக மாறியுள்ளது. தேவையில்லாத தொலைபேசி இலக்கங்கள், இணைய இணைப்புகள்(GPRS), நினைவகம்(memory card) போன்றவற்றை தவறான பிரயோகத்திற்காக பயன்படுத்துகின்றனர். எம் மாணவர்கள் தேவையற்ற இலக்கங்கள், பாடல்கள், ஒளிப்பதிவு காட்சிகள் என பாடசாலை வேளைகளில் இவற்றைப் பயன்படுத்துகின்றனர். தனக்கு தெரிந்த விடயமொன்றை தனது சகபாடிகளுக்கு காண்பிப்பதன் மூலம் ஒரு கூட்டமே சீரழிகின்றது. இவ்விடயங்கள் விஸ்தரிக்கப்பட்டு பாடசாலை மற்றும் தனியார் வகுப்பறைகள்வரை வென்றுவிடுகின்றன. இதனால் தவறான நண்பர்களின் அறிமுகம் கிடைக்கின்றது. தொலைபேசியிலே அதிக நேரத்தை கழித்து வாழ்க்கையை வீணடிக்கின்றனர்.

காணொளி(Tv), இறுவட்டு இயக்கி இவ்விரண்டும் மேலும் எமது மாணவர்களின் நன் நடத்தை பிறழ்வில் செல்வாக்கு செலுத்துகின்றன. இன்றைய திரைப்படங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் செல் நெறியை விட்டு துர்நடத்தையை நோக்கி நகர்த்தி செல்கின்றன. மாணவர்கள் போதைப் பொருள் பாவணை, புகைத்தல் மதுபாவனை என்பன இளம் பிராயத்தில் மேற்கொள்கின்றனர். இதற்கு காணொளி மற்றும் இறுவட்டு இயக்கி இதுவே காரணமாகும். மேலும் தவறான திரைப்படங்கள் என்பன பார்த்து கல்வியை விட்டு விலகி சமூக விரோதிகளாக மாறி வருகின்றனர். கல்வியில் உயர்தரம் வரை நோக்கி சென்றாலும் உயர் கல்வி கனவை தானே தீ வைத்துக் கொள்கின்றனர்.

மேலும் திரைப்பட காட்சிகளில் வரும் தவறான நடத்தையை பாவனைக்கு உட்படுத்துகின்றனர் இதனால் தான் எனவோ பள்ளிப்பருவ வயதில் காதல் வயப்படல், துஷ்பிரயோகங்கள் என்பன அதிகரிக்கின்றன.

கணினியும், இணையத்தள பாவனையும் உலக மக்களின் அறிவு விருத்திக்கு செயற்பாடுகளுக்கு பயன்பட்டாலும் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பது போல் மாணவர்கள் இதிலும் மூழ்கி போய் வாழ்க்கையில் கவிழ்ந்து விடுகின்றனர். தவறான இணையதள பாவனை மூலம் துர் நடத்தைக்கு இலகுவில் அடிமையாகி விடுகின்றனர். மேலும் மாணவர்கள் உடற்சுகாதாரமும் நலிவடைகின்றது. சிறுவயதில் பார்வை கோளாறு, உடலியற் கோளாறு என்பன ஏற்படுகின்றன. பெற்றோரும் அக்கறை செலுத்துவதாய் இல்லை.

மலையகத்தை சீரழிக்க புறப்பட்டிருக்கும் புதிய நரகாசுரன், செய்மதி, தொலைக்காட்சி சேவை இதன் மூலம் உலக தொலைக்காட்சி சேவைகள் கிடைக்கின்றன. எம்மக்கள் இந்திய தொலைக்காட்சி சேவையை அதிகம் விரும்புகின்றனர். மாணவர்கள் பொழுதுபோக்காக பார்க்கச் சென்று கல்வியையே போகியாக்கி விடுகின்றனர். இச் செய்மதி தொலைக்காட்சி சேவையே தெரிகின்றது. இதனாலேயே எத்தனையோ மாணவர்களின் கல்விக் கனவுகள் நசிகின்றது.

இதற்கு என்ன தீர்வு? நாம் எமது அறிவு பசிக்காகவும், நன் நடத்தைகளுக்கு மாத்திரமே தொழிநுட்ப சாதனங்களை பயன்படுத்த வேண்டும். எனவே ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளையின் கல்வியிலும், நடத்தையிலும் கட்டாயம் கவனம் செலுத்தி ஆக வேண்டும் மலையக பரம்பரை தலை நிமிர கல்வியால் மட்டுமே முடியும். எனவே ஒவ்வொரு ஆசிரியனும் மலையக மாணவர் வாழ்வில் அக்கறை செலுத்த வேண்டும். ஒவ்வொரு மாணவனும் தனது எதிர்கால வாழ்வின் தீபமே கல்வி தான் என நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். எனவே இலங்கை அரசியல் அநாதைகளான நாம் வாழ்வில் முன்னேற சமூக அந்தஸ்தைப் பெற இறுதியான ஒரு வாய்ப்பு கல்வி. இக்கல்வியை நவீன சாதனங்கள் என்ற அற்ப சக்திகளால் இதனை நசுக்கி விடாதீர்கள் “மலையகத்தை கல்வி எனும் நெம்பு கோலால் நிமிர்த்துவோம்”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக கலைகள்

A.ரன்சியாகுளோரி
தமிழ்ப்பிரிவு
இரண்டாம் வருடம்

கலைகள் ஒரு சமூகத்தின் உயிர்த் துடிப்பாகும். மலையகத்தில் வந்து குடியேறியவர்கள் தமது பாரம்பரிய தெய்வ வழிபாடுகளை, கலாசார நடன மரபுகள் என்பவற்றைத் தங்களுடன் கொண்டு வந்தனர். மலையக கலை கலாசார அம்சங்கள், தென்னிந்திய கலாசார அம்சங்களின் தொடர்ச்சியாகவே காணப்படுகின்றன. கலை இலக்கியங்கள் வர்க்கம் சார்ந்தவை. அந்த வகையில் இங்கு குடியேறியவர்களில் அதிகமானோர் தென்னிந்திய சமூக அமைப்பின் அடித்தள மக்களாகவும் இருந்தனர். இந்த அம்சத்திற்கு உட்பட்டே கலை இலக்கியக் கருப்பொருள்களும் வெளிப்பாடும் அவற்றின் தன்மைகளுமாக அமைந்தன எனலாம்.

அன்றைய மலையக கலைஞர்களின் கலைகளில் பக்திப்பரவசம் இருந்தது. காதல் இருந்தது, உணர்வு இருந்தது, உருக்கம் இருந்தது, உண்மையில் நல்ல செய்திகளும் இருந்தன. அவை போற்றும் தன்மையுடயனவாகவும் இருந்தன. ஒருவருக்கு சாட்டையடி கொடுப்பனவாயும் இருந்தது. கலை மூலம் ஒருவனை வெட்கித் தலை குனிந்து முக்காடு போடவும் செய்தனர். மலையகத்தில் சிறுகதை, கவிதை, நாவல், நாட்டார்பாடல் கணக்கெடுப்புகளும், ஆய்வுகளும் நடத்தப்பட்டுள்ளன. ஆனால் மலையக மக்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்த இலக்கியமான கலைகளைப்பற்றிய தகவல்கள் மிகக்குறைவாகவே வந்துள்ளன.

இயற்கை எழில் நிறைந்த மலையக கலைக்கும் பெயர் பெற்றது காமன்கூத்து, கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், ஒயிலாட்டம், அருச்சுனன் தபசு, நல்லதங்காள் கதை, பொன்னர் சங்கர் கதை, நாட்டுக்கூத்து, உடுக்கு, தப்பு, உருமி, மயிலாட்டம் என்பனவெல்லாம் மலையகத்தின் மங்காப் புகழ் பெற்ற கலைகளாகும். இது போன்று பாரம்பரிய கருவிகளான உறுமி மேளம், தமுர், செஞ்சனக்கட்டை, சங்கு, சேகண்டி, தண்டை போன்ற கருவிகளும் உபயோகிக்கப்படும்.

மலையக மக்களின் பாரம்பரிய இசைக்கருவிகளில் ஒன்றுதான் தப்பு. இந்தத் தப்பு கருவியை பதினெட்டு வகையாக காணலாம் காலைத்தப்பு, பிரட்டுத்தப்பு, திருமணத்தப்பு, சடங்குத்தப்பு, சாவுத்தப்பு, காமன் பண்டிகைத்தப்பு, திருவிழாத்தப்பு, கரகத்தப்பு. இப்படி பலவிதமான குறியீடுகளாக தப்பின் ஒலியை உணரலாம். இது போன்று, காவடியாட்டம், கரகாட்டம், திருவிழா உற்சவங்களுக்கு தப்பு கருவியை பயன்படுத்துவார்கள். மற்றும் காமன் கூத்து, அருச்சுனன் தபசு, பொன்னர் சங்கர் கதை ஆகியவற்றிற்குத் தப்புக் கருவியை பயன்படுத்துவார்கள். இன்னொரு முக்கிய இசைக்கருவி உடுக்கு. காவடியாட்டம், கரகாட்டம், பேயாட்டம் போன்றவற்றிற்கு உடுக்கே நாயகனாக திகழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத் தோட்டங்களில் பக்தியுடன் அதி சிறப்பாகக் கொண்டாடப்படுவது காமன் கூத்தாகும். மலையக மக்கள் வாழ்க்கையோடு இணைந்த ஒரு கூத்து தான் காமன் பண்டிகை. பெருந்தோட்டங்களில் காமன் கூத்து அல்லது காமன் "கம்பம் நடுதல்" என்னும் நிகழ்ச்சியோடு ஆரம்பமாகின்றது. மாசி மாதம் அமாவாசை கழித்த மூன்றாம் நாளில், மூன்றாம் பிறையில் காமன் வாத்தியர் தலைமையில் காமன் கூத்தில் பங்குபற்றுவோரும் ஏனையோரும், ஆற்றங்கரை அல்லது தோட்டத்திலுள்ள பீலிக்கரை முதலான நீர் நிலைக்குச் செல்பவர் அங்கு "கம்பம் பாலித்தல்" என்னும் சடங்குடன் ஆரம்பமாகும். பேய்க்கரும்பு, குட்டைமுத்து, செங்கரும்பு, துவரை, மூங்கில் குறுத்து, ஆகியவற்றை ஒரு கட்டாகக் கட்டி இவற்றின் இலைகளையும் இக்கட்டுடன் சேர்த்து, வைக்கோலை கயிறுபோல் திரித்துக் கட்டாக கட்டிச் சேர்த்துக் கம்பத்துக்கு மேலாகச் சுற்றி, பூசை செய்து பக்திப்பரவசத்துடன் ஊர்வலமாக கொண்டு வருவர். தப்பு வாத்தியம் முழங்க அனைவரும் குளித்து ஈர உடுப்புடன் வரும் போது பக்திச்சிரத்தையை வெளிக்காட்டும் காட்சியாக இது அமையும்.

இவ்வாறு கொண்டு வந்த கம்பத்தை வழமையாக நடும் காமன் பொட்டலில் நடுவர். இவ்வாறு கம்பம் நடும் இடமே காமன் கோயில் எனக் கணிக்கப்படும். காமன் கம்பத்தை நடுவதற்கு முன்னர், சென்ற வருடம் மூடிய பழைய குழியைத் தோண்டுவர். அதில் இட்ட வெள்ளிக் காசுகளை மட்டும் எடுத்துக் கொண்டு பழையபடியே அட்சரத்தோடு இணைந்த வெள்ளித்தகட்டையும், தங்கம், பிடிமண் என்பவற்றையும் காமன் வாத்தியார் வசமுள்ள பிடிமண் என்பவற்றையும் போட்டு கம்பத்தை நடுவர். பின்னர் கம்பத்திற்கு பால் ஊற்றப்படும். குழியிலிருந்து பெறப்பட்ட நாணயங்களை வைத்திருந்தால் நோய்நொடி தீரும் என்ற நம்பிக்கை உண்டு. காமன் பண்டிகையின் கம்பம் ஊன்றும் முதல்நாள் நிகழ்ச்சியின் போது குழியினுள் இடப்படும் பிடிமண் பரம்பரையாக காமன் பற்றி எரிந்த இடத்திலிருந்து பெறப்பட்டதாயும், பழமை வாய்ந்ததாயும், மன்மதன் அருள் அதற்கு அதிகமாக உண்டு என்ற நம்பிக்கையுமே அதற்குக் காரணம்.

கம்பம் பாலிப்பது, கம்பம் நடுதல், இரதி மதன் திருமணம், தூதன் வருதல், மதன் ரதிதர்க்கம், இந்திரனை மன்மதன் சந்தித்தல், பரமன் தவநிலைக்கேகுதல், பஞ்ச மலர்களை எய்தல், மன்மதனை பரமசிவன் நெற்றிக் கண்ணால் எரித்தல், ரதியின் துயரத்தைப் போக்க மன்மதனை அருபியாக சிவபெருமான் உயிர் எழுப்பிவிடுதல் வரை இடம்பெறும். பதினாறாம் நாளில் கம்பம் எரிவதோடு விழா முடிவடைகின்றது. இந்தக் குறிப்பிட்ட நாட்களில் இரதி, மன்மதன், தூதன், இந்திரன், வீரபத்திரர், சிவபெருமான் ஆகியோருக்கான வேடமணிபவர்கள் நோன்பு இருப்பார்கள். முதல் நாளான திருமண நாளிலிருந்து கடைசி நாள் வரை விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். பயபக்தியோடு இது நடைபெறும். சுருக்கமாக கூறின் தாம்பத்திய உறவு கூட வைத்துக் கொள்ளாத அளவில் பயபக்தியாக காமன் கூத்தை நடத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்களின் பண்பட்ட நெஞ்ச ஆல அகலத்தையும் புற ஆற்றலையும் நாட்டுப் பாடல்களிலே காணலாம். இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களை மலையக மக்கள் வெறும் கதையாக மட்டும் எண்ணிப் படிப்பதில்லை. பக்தியுணர்வுடன் படிப்பார்கள். மலையக மக்களின் வாழ்வோடு இணைந்துவிட்ட மகாபாரதக் கதையில் வரும் அருச்சுனன் பெருமைகளை விளக்கும் எண்ணமே "அருச்சுனன் தபசு" என்று ஆடப்படுகிறது.

மலையகத்தில் கூத்து வடிவில் ஆடப்படும் இன்னொரு நிகழ்ச்சி "பொன்னர் சங்கர்" கூத்தாகும். வீரத்தை வலியுறுத்தும் இக் கூத்து நகைச்சுவையோடு ஓசை நயமும் கொண்டது. பாட்டும் வசனமும் கலந்த இக்கூத்து மலையக பாரம்பரிய கலைகளில் தனிச்சிறப்புடையது. குறு நில மன்னனான மலையப்பன் தான் வில்லன். ஆராயு என்ற பெண்ணை சிறைப்பிடித்தப் போது பொன்னர்-சங்கர் உயிரையும் மதிக்காமல் மலைமேல் படையைக் கூட்டிப் போரிட்டு சிறை மீட்டியதாக உருவம் கொடுக்கப்பட்ட கதையிது. இக் கதையைக் தொடர்க்கதையாக சுவைபட தமிழக முதல்வர் மு.கருணாநிதி அழகாக எழுதியுள்ளார்.

மேலும் பாரம்பரிய கலைகளில் முக்கியமானது கரகாட்டம். இக்கரகக்கலை கண்ணகி அம்மன் வழிபாட்டுடன் நெருங்கிய தொடர்புடையதாகக் காணப்படுகிறது. மலையக மக்கள் தோட்டத்து ஆலய உற்சவங்களிலும் விழாக்களிலும் ஆடி வருகின்றனர். கரகக்கலை இவ்வாறு பக்தியுணர்வுடன் விளங்குவதுடன் உற்சவத்திற்கும் புறம்பான பொது வைபவங்களில் ஆடப்படும் கலை நயமிக்க ஆட்டமாகவும் விளங்குகின்றது. மற்றொரு பாரம்பரிய கலைகளில் ஒன்று ஒயிலாட்டம். ஆண்கள் மட்டுமே பங்கு கொள்ளும் இந்த ஆட்டக்கலைக்கு ஒயில், கும்மி என்ற பெயருமுண்டு. உடலை வில்போல் வளைத்து நெளித்து தாளம் மற்றும் பாட்டுக்கேற்றதாக ஆடப்படும் கலையாக இது உள்ளது. இது ஒரு குழு நடனம்.

மலையக பாரம்பரிய கலைகளில் சிலம்பாட்டம். ஓர் தற்காப்பு கலையாக இருப்பினும் அதை நிகழ்த்தும் போது பாரப்பதற்கும், ரசிப்பதற்கும் உரிய கலையாக காட்சியளிக்கின்றது. கையிலுள்ள கம்பை வீசி ஒலியெழுப்பும் ஒரு வகையான விளையாட்டே சிலம்பாட்டம். அதனை வலரிவீச்சு என்றும் கூறுவர். இப்போது நம்மிடையே இல்லாதது தேவராட்டம். கயிலை மலையில் பரமனுக்கும் பார்வதிக்கும் திருமணம் நடைபெற்றப் போது தேவர்களெல்லாம் கூடி மகிழ்ச்சியாக ஆடிய ஆட்டம் இது இப்பொழுது தமிழகத்தில் பல சிற்றூர்களில் ஆடப்படுகின்றது.

மலையகத்தில் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்கு முக்கிய இடமுண்டு. கடந்த காலங்களில் இந்தியத் தமிழர்களை இங்கு ஏமாற்றிக் கூட்டி வந்தமை வெள்ளைக்கார துரைமார்களின் கொடுமைகள், கொட்டும்பனி, அட்டைக்கடி, இவற்றையெல்லாம் விபரிக்கும் வண்ணம் வில்லுப்பாட்டு இசைத்து வருகின்றனர். இசை, பாடல் ஆகியவற்றுடன் கதைசொல்லும் இந்த நிகழ்ச்சிக்கு மலையக மக்களிடையே பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்புண்டு. இரசாங்கத்தின் கீழ் இயங்கும் கல்வி அமைச்சு, பாடசாலைகள் தோறும் ஒவ்வொரு ஆண்டும் நடத்தும் தமிழ்தின விழாவில் வில்லிசை நிகழ்ச்சியும் ஒன்றாக இருப்பதால் வில்லிசை மறைந்துவிடாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

மலையகத்தில், தமிழக சினிமா நாடகம் என்பன மக்களை பெரிதும் பாதித்தன. தமிழகத்திலிருந்து சுயமரியாதை கலுத்துக்கள், திராவிடம், சமூகம், திராவிட முன்னேற்ற சமூகம், முதலியவற்றின் பிரச்சார ஏடுகள் மலையகத்திற்கு வரத்தொடங்கின. மலையக மக்கள் திராவிட முன்னேற்ற கழக பிரசார நாடகங்களை மேடையேற்றினர். இத்தகைய நாடகங்கள் தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் அரகேற்றப்பட்டன. மலையகத்தில் உரிமையற்ற தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் தி.மு.க பிரசார நாடகங்களுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. முதல்வர் கருணாநிதியின் மணிமகுடம், தூக்குமேடை, நச்சுக்கோப்பை, எம்.ஆர். ராதாவின் இரத்தக் கண்ணீர் போன்ற நாடகங்கள் மலையகத்தில் பல பகுதிகளிலும் மேடையேற்றப்பட்டன. இத்தகைய சீர்திருத்த நாடகங்களை மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் முற்போக்கான கருத்துக்களை அவர்கள் பெரிதும் விரும்பி வரவேற்றனர். விடிவை நோக்கி காத்திருக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியில் தி.மு.க பிரசார நாடகங்கள் ஆரம்ப காலங்களில் மாற்றத்தையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தின. இதன் காரணமாகவே சொந்தமாக நாடகங்கள் எழுதி மேடையேற்றப்பட்டன.

இன்று மலையகப் பாரம்பரிய கலைகளில் ஒன்றான காமன் கூத்து தேசிய கலையாக அங்கிகரிக்கப்பட்டுள்ளது. இலக்கியத்துறையைப் போலவே கலைத்துறையிலும் மலையகத்தைச் சார்ந்த இளந்தலை முறையினர் சாதனை நிலை நாட்டத் தவற மாட்டார்கள். கலையென்றால் கெசட், ரேடியோ பொத்தானை அழுத்திவிட்டப்பின் எழும் பாட்டுக்கு ஆடுவது என நினைக்கின்றனர். பள்ளிக்கூடங்களில், கோவில்களில், பண்டிகைகளின் போது, திருமணவீடுகளில், கட்சி கூட்டங்களில் என்று எல்லா இடங்களிலும் ஒலி நாடாப் பாடல்களை ஒலி பெருக்கி மூலம் காதுகிழிய போடுவதே நாகரீகமாகிவிட்டது.

நாகரீகம் பொருளாதார நிலை வேலைப்பளு தொலைக்காட்சி, வீடியோ, சினிமா மோகம், தப்பான அபிப்ராயம், கலையார்வமின்மை. இவை அனைத்தும் எமது இளைய சமூகத்தினர் மத்தியில் ஆக்கிரமிப்பு செய்து அவர்களை திசைதிருப்பிக் கொண்டிருக்கின்றன. களியாட்டம் என்ற பெயரில் மதுவுக்கு தங்களை அடிமையாக்கிக் கொள்ளத் துடிக்கின்றார்கள். கலையின் மகிமையும், மகத்துவத்தையும், மக்கள் அறிந்திடச் செய்தல் வேண்டும். அப்படி ஒரு நிலை தோன்றுமானால் அன்று மலையகம் புத்துணர்வு பெறும் என்பது உறுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பும் கண்ணகியும்

A.நித்தியரூபன்
தமிழ்பிரிவு
இரண்டாம் வருடம்

தமிழ் கூறும் நல்லுலகில் கண்ணகி கற்பின் சின்னமாகவும், பத்தினி தெய்வமாகவும் கணிக்கப்படுவதை நாம் காண்கிறோம். ஆனாலும் இது கண்ணகியின் மீது திணிக்கப்பட்ட ஒரு பார்வையாகவே தோன்றுகின்றது. சிலப்பதிகாரம் ஆரம்பம் முதல் இறுதிவரை கண்ணகியை கற்பின் சின்னமாகவே கூறிச் செல்கின்றது. கண்ணகியனை கற்பின் சின்னமாக போற்றுவது அல்லது பார்ப்பது எவ்வளவு தூரம் பொருத்தமானது? என்பதினை ஒரு வரலாற்று பார்வையோடு விமர்சன ரீதியாக நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கற்புடையவளைதான் பத்தினி என்பார்கள். பத்தினி என்பவள் யார்? அவளுடைய ஒழுக்கம் யாது? அவள் எப்படி வாழ வேண்டும்? என்பதெல்லாம் ஆராய்ச்சிக்குரியது. தன் கணவனின் இன்ப வாழ்வுக்காய் தன் வாழ்வை அர்ப்பணித்து அவனுடைய வாழ்வே தன் வாழ்வு என்று வாழ்வதே பத்தினித்தன்மை என்பது பழங்கால கொள்கை. கட்டிய கணவன் ஒருத்தனாக மட்டும் கடைசிவரை வாழ்வாளாயின் அவள்தான் பத்தினி என்பது இக்கால கொள்கை.

இதன்படி இளங்கோவும் தன் காப்பியத்துள் கண்ணகியின் கற்பைத்தான் கூற முனைந்தான் என்பது கூட இலக்கியவாதிகளின் ஒர் பக்கச்சார்பான பார்வையாகத்தான் இருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது. ஏனெனில் புலவன் தன் காப்பியத்துள் கண்ணகியின் கற்பைதான் கூற முனைந்தானாயின் எதனால் தனது காப்பியதிற்கு சிலம்பு + அதிகாரம் - சிலப்பதிகாரம் என தலைப்பிட வேண்டும். சிலம்புதான் கதையினை வளர்த்து செல்லவும், கண்ணகியின் மகிமையை எடுத்துக் கூறவும் ஓர் ஆயுதமாக பயன்பட்டுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. ஆகவே காப்பிய ஆசிரியர் கண்ணகி கற்பை தான் காத்திரமாக படைத்தார் என்பது பொருத்தமற்றது.

கற்பினை உயிரென போற்றி வாழும் பெண்கள் தன் கணவன் முன்பே அலங்கரித்துக் கொள்வார்கள். தன் கணவனைப் பிரிந்தால் அவன் மீளும்வரை அவனை நினைத்து ஏங்கி இருப்பார்கள். கண்ணகியும் தன் கணவனை பிரிந்தபோது இப்படித்தான் இருந்தாள். ஆகையால் கற்புக்கரசி என நினைவுக் கூறுவார்கள்.

அப்படியாயின் இன்று பல காரணங்களால் கணவரை பிரிந்து வாழும் பெண்கள் அலங்காரம் செய்யக்கூடாதா? அல்லது வேறொருத்தியுடன் இன்பம் நுகர்ந்து கொண்டிருப்பவனை எண்ணி தவித்துதான் கற்பின் புனிதத்தை விளங்க வைக்க வேண்டுமா? தன் கணவனைப் பிரிந்து தனியே வாழ்ந்தாளாயின் அவள் கற்புடையவளாக வாழ முடியாதா? அல்லது கணவனை பிரிந்து வாழும் அத்தனைப் பெண்களும் கற்பினை இழந்தவர்களா? என்றெல்லாம் எண்ணத் தோன்றுகின்றது.

அடுத்ததாக கண்ணகி கற்பு பற்றி பேசுவோர், சோம குண்டம், சூரிய குண்டம் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு தடாகங்கள் உண்டு. அவற்றில் மூழ்கி காவேள் கோட்டத்தை வணங்குவோர் தம் கணவருடன் இன்புற்று இருப்பர். இறந்த பின்பும் சுவர்க்கம் புகுவர். ஆகவே அங்கு நாம் சென்று காமனை வழிபடுவோம், என தேவந்தி கண்ணகியை அழைத்தபோது கண்ணகி அது கற்புடைய பெண்களுக்கு பெருமை தராது. கணவனை வணங்குவதே பத்தினிப் பண்பு என மறுத்துரைத்தாள்.

அப்படியாயின் இன்று பல குறைபாடுகளை சொல்லி கோயில் கோயிலாக வலம் வரும் அத்தனைப் பெண்களும் யார்? மாதவியோடு சென்ற இன்றைய கோவலன்களை மனம் திருத்தி தன்னோடு வாழ இறைவன்பால் மண்டியிடும் பெண்களை என்னவென்று சொல்வது? கண்ணகியின் கூற்றுப்படி கற்புடைய பெண்கள் இறைவனை வழிபடுவது தவறு என்றல்லவா அர்த்தம்.

காப்பியத்துள் கண்ணகிதான் கற்றபின் கின்னமென்றால் புனிதமான கற்புடைய கண்ணகியை விட்டு விட்டு எதனைத்தேடி கோவலன் மாதவியிடம் சென்றான்? இங்ஙனம் கோவலன் மாவியிடம் சென்றது மாதவியின் அழகினால் என்றால் கண்ணகியின் கற்பிலும் பார்க்க மாதவியின் அழகு சிறந்தது என்றல்லவா அர்த்தம். மாறாக கோவலன் மாதவின் கலைத்திறத்தால் கட்டுண்டு தன் மனையாளை மறந்தானாயின் கண்ணகியின் தெய்வ கற்பிலும் பார்க்க மாதவியின் சீரிய கலைதான் சிறந்தது என்பதை ஒப்புக்கொள்ளதான் வேண்டும்.

கண்ணகியின் கற்பினை எடுத்துரைப்போர் கோவலனுக்கு அடங்கி போன தன்மையினை ஓர் ஆதாரமாக கூறுவார். கோவலன் மாதவியோடு கூடி வாழ்ந்தபோது கண்ணகி பொறுமை எனும் அணி பூண்டு பொறுத்ததுகூட அவளின் கற்பின் தன்மைதான் என வாதிடுவர். இங்கு கண்ணகிக்கு பொறுமை காப்பதைத்தவிர வேறு வழி ஏதேனும் இருந்ததா? என்பதும் சிந்திக்கப்பட வேண்டும்.

கண்ணகியிடம் கோவலன் தான் பரத்தையை விட்டுப் பிரிந்து, தன் தவறை எண்ணி, கூறி வருந்துவான். கண்ணகியோ தன் கணவன் பரத்தைக்கு கொடுக்க பொருளில்லாததால் தான் இப்படி சொல்கிறான் என எண்ணிக் கொண்டாள். எனினும் பதில் பேசி கணவனை வருத்துவது பத்தினி பெண்ணுக்கு முறையாகாது என கருதியதால் “சிலம்பு உள கொண்மின்” என்றதாக புலவர் கூறுவார்.

புலவரின் கூற்றுப்படி பத்தினி என்பவள் தன் கணவன் தீய வழியில் சென்றால் தானும் அதற்கு உதவிதான் தன் கற்பின் வலிமையை விளங்க வைக்க வேண்டாமா? இதுதான் கற்புடையவளின் பத்தினிப் பண்பா? மாறாக தன் கணவனை திருத்தி நல் வழிப்படுத்துவது பத்தினிப் பண்பாகாதா? ஆகவே கண்ணகியின் பொறுமையினையும் கற்போடு தொடர்பு படுத்தியமை கண்ணகியின் கற்பு உயர்வு நவிற்சி படுத்தப்பட்டுள்மையை மேலும் தெளிவுப் படுத்துகின்றது.

மேலும் கோவலன் கொலையுண்டான் என செய்தி கேட்டதும் கண்ணகி கொதித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்தது கூட கண்ணகியின் பத்தினித்தன்மை என்பார் பலர். இங்கு நோக்கின் கோவலன் இறந்தது பரத்தையோடு கூடி வாழ்ந்த காலத்தில் அல்ல. மாதவியிடம் ஊடி அவளைப் பிரிந்து இல்லக் கிழத்தியை நாடிய பொழுதே. அதாவது இல்லறத்தில் ஈடுவடுவதற்கு கணவனும் மனைவியும் ஒன்றாக செயற்பட தொடங்கியபோதே கோவலன் கொலையுண்டான்.

ஆகையால் கண்ணகியிடம் எழுந்த சீற்றம் கற்பின் சீற்றம் என கூற முடியாது. மாறாக ஒன்று சேர்ந்த கணவனும் மனையியும் சிறிது நாட்கள் கூட ஒன்றாக சேர்ந்து இல்லறம் நடத்தாத, அவலம் போன்ற பல இன்னல்கள் சேர்ந்து கோப வெறியாக, அல்லது தன் எதிர்ப்பார்ப்புகள் எல்லாம் அழிந்ததால் ஏற்பட்ட ஏக்க உணர்வு சீற்றமாக மாறி, மதுரையை எரித்தது என்று வேண்டுமானால் சொல்லலாம்.

இவை எல்லாவற்றையும் விட கண்ணகியின் கற்பினை தெளிவு படுத்தியதில் தொல்காப்பியருக்கு பெரியதோர் பங்குண்டு. இவர் கற்புடைய பெண்களை மூன்று வகையாக வகுத்துள்ளார். 1. முதானந்தம் 2. புறங்காடு 3. தாமத நிலை. தன் கணவன் இறந்தான் என கேட்டவுடனேயே இறக்கும் மனைவி முதானந்தம் நிலை அடைந்தவள். இது மிகவும் உயரிய கற்புநிலை. கணவனது ஈமப் புறங்காட்டில் உடன் கட்டை ஏறுதல் இரண்டாவது நிலை. விதவை கோலம் பூண்டு ஆபரணம் களைந்து சிறிய உணவு உண்டு தவம் காத்தல் மூன்றாவது நிலை.

கண்ணகி இந்த மூன்றையும் செய்யவில்லை. அப்படியாயின் கண்ணகியை கற்பின் இலக்ககணமாக கூறுவது எவ்வளவு தூரம் பொருத்தமானது? மாறாக பாண்டிமா தேவி முதானந்தம் அடைந்தாள் என போற்றுவது பாண்டிமா தேவிக்கு பொருத்தமானதே அன்றி கண்ணகிக்கு பொருத்தமானது அல்ல.

இறுதியாக தன் கணவனுக்காக பாண்டிய அரசனிடம் நீதி கேட்டு அவன் மீது குற்றப் பத்திரிகை வாசித்து பாண்டியனின் உயிர் பறித்த கண்ணகி தனக்கு துரோகம் செய்த தன் கணவனிடம் நீதி கேட்க முடியாமல் போனது பெரும் அறியாமையே. அரசன் செய்தால் அது மறம். புருசன் செய்தால் அது அறமா?

ஒட்டு மொத்மாக நோக்குகையில் சிலப்பதிகார இலக்கணப்படி அல்லது இலக்கியவாதிகள் பலரின் கருத்துப்படி கண்ணகி கற்பின் சின்னம் என கூறுவது எவ்வளவு தூரம் பொருத்தமானது? என்பதெல்லாம் ஆராய்ச்சிக்குரியது. ஆயினும் கணவன் இறந்தவுடன் தன் உயிர் நீத்த பாண்டிமா தேவியின் கற்புக்கும், கண்ணகியின் வீர நியாய நடத்தைக்கும் பாரிய வேறுபாடு உண்டு என்பதை நீங்கள் உணர்வீர்கள் என்பது பரிபூரண நம்பிக்கையாகவுள்ளது.


உசாத்துணை:

1. இளங்கோவின் பாத்திரப்படைப்பு - டாக்டர் எஸ்.ராமகிருஸ்னன்
2. தமிழ் வரலாற்று படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண் நிலை நோக்கு
3. தமிழ் காப்பியங்களில் அவல நாயகர்கள்
4. தமிழ் பண்பாடும் இலக்கியமும்
5. இணையம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்த விதம்

R.சரஸ்வதி
தமிழ்பிரிவு
இரண்டாம் வருடம்

தனித்துக் கிடந்திடும் லாயம் - அதில்
தள்ளியடைக்கப்படும் குதிரைக்கும்
கனைத்திட உத்தரவுண்டு - வீட்டில்
காரிகை நாணவும் அஞ்சவும் வேண்டும்
கனத்த உன் பெற்றோரைக் கேளே -அரர்
கல்லாத்த நெஞ்சையுள் கண்ணீரினாலே
நனைத்திடுவாய் அதன் மேலும் - அவர்
ஞாயம் தராவிடில் விடுதலை மேற்கொள்

என்று பாரதிதாசனின் பாடலிலும் கூட பெண்ணானவள் அடிமைப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிந்தது. இந்தப் பெண்கள் காலம் காலமாய் அடிமைப்பட்டு வருகின்றனர். அந்த வகையில் ஆரம்ப காலகட்டத்தில் பெண்களை ஒரு பொருள் போலவே கருதினர். இவ்வாறிருந்த பெண்களுக்கு உரிமை வழங்கப்பட்ட விதத்தைப் பின்வருமாறு கூறப்படுகின்றது.

உரிமை எனும்பொழுது வாழ்வதற்கான உரிமை பெரிதும் அவசியமாகின்றது. அந்த வகையில் அடிப்படை உரிமைகள் இருந்தால் மட்டும் போதாது. நாட்டின் உண்மையான பிரஜைகள், சிறப்பாக விளங்கவும், அரசியல் உரிமையைப் பெறவும் வாக்குரிமை என்பது பெரிதும் அவசியமாகின்றது. பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்த விதமே இங்கு நோக்கப்படுகின்றது.

தேர்தலில் வாக்களிக்கும் உரிமை பெண்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முதன் முதலில் முன் வைத்தன் மூலம வரலாற்றில் இடம் பிடித்தவர் “மேர் லொல்ஸ்டெனோகிராப்ட்” என்ற பிரித்தானிய பெண் எழுத்தாளர். இவர் பெண்களுக்கும் வாக்குரிமை கிடைக்க வேண்டுமென்ற நீதியான சமத்துவத்தை பெறுவது சம்பந்தமான அழுத்தத்தை கொடுக்கும் நோக்கத்துடன் செயற்பட்டவர்.

1772 ல் (A Vindication of the Rights of Women) த வின்டிகேசன் ஒப் ரைட்ஸ் ஒப் விமன் என்ற பெயரில் உழுதி வெளியிட்ட நூலில் அந்தக் கோரிக்கையை வெளிப்படுத்தினார். அக்காலத்தில் தமது ஆட்சி முறையைப் பற்றியோ அரசியலமைப்பை பற்றியோ பேசுவதற்கான சுதந்திரம் மக்களுக்கு இருக்கவில்லை.

மேலும் “சார்டிஸ்டிஸ் இன் பிரிட்டன்” போன்ற சீர்திருத்தவாத இயங்கங்ள் பல 1830 களில் அரசியல் மறுசீரமைப்பு காரணமாக போராட்டங்களில் ஈடுபட்ட பொழுதும் அவர்களின் பிரதான நோக்கமாக இருந்தது ஆண்களுக்கு மாத்திரம் வாக்குரிமையை பெற்றுக்கொள்வதாகும். அதனால் பெண்கள் அந்த போராட்ட இலக்கிலிருந்து விலகி நின்றனர். அவ்வேளையில் அமெரிக்கரின் போராட்டங்களும் இடம்பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில உலகமும் பெண்களுக்கான வாக்குரிமையை பெற்றுக்கொள்வதற்கான முதல் போராட்டம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஐக்கிய அமெரிக்காவில் ஆரம்பமானது. அதில் சம்பந்தப்பட்டவர்களின் முதலாவது கூட்டம் அதாவது ஒன்று கூடலானது நியூயோர்க் மாநிலத்தில் செனேகாபோல்ஸ் எனும் இடத்தில் 1848ல் நடைபெற்றது. அக்காலகட்டத்தில் லுக்கிரேஷிலா மொட் மற்றும் எலிசபெத் கெட்ஸ்டென்டன் ஆகிய இருவரால் பெண்களின் உரிமை சம்பந்தமாக முன்வைக்கப்பட்ட சாசனமும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

பெண்களுக்கு வாக்குரிமை கிடைப்பதைக் சகிக்காத பல்வேறுபட்டவர்களின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் இவ்விடயம் சம்பந்தமாக மேலும் பல பொது கூட்டங்கள் நடத்தப்பட்டன. பிறப்பிலேயே ஊனமுற்றிருந்த ரொஜரி நட்ரூத் மற்றும் ஹெரியட் டகிமன் ஆகிய இரு பெண்கள் அந்தக் கூட்டங்களில் பிரதான பேச்சாளராக இருந்தனர்.

19ம் நூற்றாண்டில் அரைப்பகுதியில் செயல் திறன் மிக்கதாகவும் பலம் வாய்ந்ததாகவும் இவ்வமைப்பு உருவெடுத்தது. 1890ல் ஐக்கிய அமெரிக்க நாட்டில் வியோமிரர் மாநிலம் உள்ளூராட்சி தேர்தலில் வாக்களிக்கும் உரிமையைப் பெண்களுக்கு அளித்த முதல் மாநிலம் எனும பெயரை பெற்றது.

பிறகு மூன்று வருடங்களின் பின் அதாவது 1893ல் நடந்த பொதுத் தேர்தலின்போது வாக்களிக்கும் உரிமையை பெண்களுக்கு வழங்கியதன் மூலம் நியூசிலாந்து நாடு உலகில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய முதலாவது நாடு என்ற பெருமையை பெற்றது. இதனை நிறைவேற்றும் பொருட்டு அந்நாட்டின் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மகோதா இரண்டு மேலதிக வாக்குகளை மட்டும் பெற்று நிறைவேற்றப்பட்டது.

அந்நேரத்தில் பெண்களின் வாக்குரிமைக்காக போராடிக்கொண்டிருந்த பிரந்தானி அமைப்பு நியூசிலாந்து பெண்களின் இந்த வெற்றியால் உற்சாகமும், புத்துயிரும் பெற்றது. முதலில் அவர்களின் போராட்டம் அமைதிவழிப் போராட்டமாக இருந்ததுடன் அந்த அமைப்பைச் சேர்ந்த எமலின் பங்ஹர்ஸ்ட் எனும் உறுப்பினர் “பெண்கள் சமூகம் மற்றும் அரசியல் சங்கம்” என்ற பெயரில் புதியதோர் இயக்கத்தை அமைத்தார்.

தங்கள் வாக்குரிமையை பெற்றுக்கொள்வதற்காக வாய் மூலமாக எழுப்பும் குரல் மாத்திரம் போதுமானதல்ல என வளர்ந்த இப்புதிய இயக்கம் எமது எதிர்ப்பை வெளிப்படுத்த ஊர்வலங்கள் நடத்தவும், சொத்துக்களை சேதப்படுத்தவும் தொடங்கினர். காவல் துறையினர் அவர்களில் பலரை கைது செய்தனர். நீதிமன்றம் அவர்களை சிறையிலிட்டது. சிறையினுள் இப்பெண்கள் உரிமைகோரி உண்ணாவிரதம் இருந்தனர்.

நீதிமன்ற தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்த பெண்கள் சமூக அரசியல் சங்க உறுப்பினரான எமலிடேவிசன் நீதிமன்ற தீர்ப்புக்கு தனது எதிர்ப்பை தெரிவிக்கும் பொருட்டு குதிரையின் கால்களுக்கிடையில் பாய்ந்து மரணத்தை தழுவிக்கொண்டார். இத் துக்ககரமான சம்பவம் 1913 ல் டர்ப் நகரில் நடந்தது.

1914 ஜுலை மாதம் 26ம் திகதி முதலாம் உலக மகா யுத்தம் ஆரம்பமாகியது. இந்தளவில் தமது போராட்டங்களையும் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் நிறுத்திய சமூக அரசியல் சங்க அங்கத்தவர்களாகிய பெண்கள் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமது அணியை அர்ப்பணிப்புடன் கூடிய செயல் திறன் அணியாக மாற்றியமைத்தனர். அது வரையும் சம்பிரதாயபூர்வமாக ஆண்களுக்கு மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்த பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்களை பெண்கள் தமதாக்கினர்.

அத்துடன் ஆண்களுக்கு பெண் சளைத்தவரல்ல என்பதற்கு ஏற்ப, ஆணுக்கு சரிநிகராகத் தங்களாலும் தொழில் செய்ய முடியும் என்பதை யதார்த்த பூர்வமாக நிரூபித்தனர். 1918 நவம்பர் 11ம் திகதி முதலாம் உலகமகா யுத்தம் முடிவடைந்தது. அதே வருடம் பிரித்தானியாவில் 30 வயதுக்கு மேற்பட்ட சகல பெண்களுக்கும் வாக்குரிமை கிடைத்தது. இருந்தபோதும் அங்கு ஆண்களின் வாக்களிக்கும் வயதெல்லை 21 ஆகும்.

1928 இல் பிரித்தானிய பெண்களினது வாக்குரிமை வயதெல்லை 21 ஆக குறைக்கப்பட்டது. 1920 இல் ஐக்கிய அமெரிக்காவில் சகல பெண்களுக்கும் வாக்குரிமை கிடைத்தது. அந்த காலகட்டத்தில் இந்திய, இலங்கை போன்ற நாடுகளிலும் பெண்களின் வாக்குரிமை தொடர்பான பிரச்சினைகள் காணப்பட்டன.

பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்த விதத்தில் இலங்கையின் நிலைமையை நோக்கும்போது பின்வருமாரு காணப்பட்டது. இலங்கையில் பல்வேறு அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான போராட்டங்கள் எம்மவரால் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக 1910 ல் மக்களாம் சீர்திருத்தத்தின் வாயிலான படித்த சொத்துள்ள இலங்கையருக்கு மாத்திரம் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது.

அதுவும் ஆண்களுக்கு மாத்திரம் வாக்குரிமை கிடைத்தது. இவர்களின் தொகை வெறும் 4 வீதம் மாத்திரமே. இந்த 4 வீத வாக்காளர்களினால் ஒரே ஒரு பிரதிநிதியை மாத்திரமே தெரிவு செய்யக் கூடியதாக இருந்தது. ஏனைய அனைவரும் ஆட்சியாளர்களால் நியமிக்கப்பட்டவர்கள் தவிர வாக்குரிமை மூலம் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்ல. பிரித்தானியர் அவர்களின் விருப்பத்தின் மூலம் பிரதிநிதிகளை நியமித்தவர்களே தவிர தேர்தல் மூலம் நியமிக்கவில்லை. அதில் பெண்களில் எவருமே இல்லை.

தேசிய விடுதலை போராட்டத்தில் ஈடுபட்ட சிங்களம், தமிழ், முஸ்லிம் தலைவர்களால் 1919ல் உருவாக்கப்பட்ட "தேசிய சங்கம்" மக்களின் வாக்குரிமை சம்பந்தமாக பல்வேறு கோரிக்கைகளை ஆட்சியாளரிடம் முன்வைத்தாலும் அவை அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்காக வீணாகின. அரசியலமைப்பு நிர்ணய சபையில் ஆண், பெண் பேதமின்றி 50 பிரதிநிதிகள் இருக்க வேண்டுமென்பது அவர்களின் கோரிக்கைகளில் ஒன்றாகும்.

அதே நேரம் பெண்களுக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரமே வழங்கப்பட்டது. வாக்களிக்கும் உரிமை ஆண்களுக்கு முழுமையாயவும், பெண்களுக்கு வரையறுக்கப்படட உரிமையும் கிடைக்க வேண்டும். டொனமூர் ஆணைக்குழுவின் விதந்துரைப்படி 1931 ஜூன் மாதம் 13ம் திகதி இந் நாட்டில் சர்வசன வாக்குரிமை சட்டரீதியாக வழங்கப்படும் வரை பெண்களுக்கு மாத்திரமல்ல பெரும்பான்மையான ஆண்களுக்கும் வாக்குரிமை இருக்கவில்லை பிரித்தானியாவிலே சர்வசன வாக்குரிமை இவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டபோது இலங்கை பிரித்தானியாவின் குடியேற்ற நாடாகி 132 வருடங்கள் ஆகியும் பிரித்தானியவில் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டு 03 வருடங்கள் ஆகியும் பிரித்தானிய ஆட்சியாளர்கள் இங்கு மக்களுக்கு அத்தகைய உரிமைகளை கொடுக்க ஆயத்தமாக இருக்கவில்லை.

இவ்வாறு பல போராட்டங்களின பிறகு வாக்குரிமையை பெற்றுக்கொண்ட பெண்கள் எதிலும் சளைத்தவர்கள் இல்லை என்றும் இன்றும் நிரூபித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கூறுவதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழுந்து மடுவம்

டீ.மகேஸ்வரன்
சமூக விஞ்ஞான பிரிவு
இரண்டாம் வருடம்

"கடவுளே விடிஞ்சிருக்கும் இந்த பொழுதும் நாளும் இந்த ஓலகத்துள வாழ்ற எல்லா ஜீவராசிகளுக்கும் நல்ல ஒரு நாளா அமையனும், அதுக்கு நீ தான் சாமி துணை புரியனும்" என்று தன் விண்ணப்பத்தை இறைவனிடம் சமர்ப்பித்து விட்டு தட்டில் இருந்த விபூதியை எடுத்து தன் நெற்றியை மறைத்துக் கொள்கிறான் சின்னன்.

அப்போது ஒரு டம்ளர் தேநீரை கொண்டு வந்து சின்னனின் கைகளில் வைத்துவிட்டு "என்னங்க.... இன்னைக்கும் கடவுள் கிட்ட உங்க வேண்டுதல சொல்லீட்டிங்களா? ம்..... கல்யாணம் பன்னி இருபது வருசமாச்சி. அப்படி என்னத்தான் கேக்குறிங்களோ அந்த கடவுளுக்குத்தான் தெரியும்" என்றவாறு ஒரு புன்முறுவலை கணவனிடம் காட்டிவிட்டு அடுப்பங்கரையை நோக்குகிறாள் மனைவி முத்தாயி.

தன் மனைவியின் கைகளால் தினமும் முதல் வேளையாக தேனீரை பெற்று பருகுவதில் சின்னனுக்கு அலாதி இன்பம்.

அன்றும் வழமைபோல தேனீரை பெற்றுக்கொண்டவன் முத்து... முத்து..... என்று அடுப்பங்கரை பக்கமாக தன் கண்களை ஓடவிடுகிறான்.

அந்த புகைமாளிகைக்குள் சிக்குண்டு கிடந்த முத்தாயி, "என்னங்க நேரம் போகுதுங்க நேரத்தோட நீங்க போயிட்டு வந்துட்டிங்கனா நமக்கும் ஏதோ ஒரு கஸ்டம் குறையும்ங்களே...." என்றவாறு தான் வெளிப்படுத்த முடியாத வருத்தத்தை ஓரிரு இருமலின் ஊடாக கணவனிடம் எச்சரித்தாள்.

காரணம் முன்பு மலைவேலையின் போது நுகர்ந்த வெற்றிலை பாக்கு இப்போது இருதய நாளத்தில் சிறு துவாரமாக உருவெடுத்துள்ளது.

எனினும் இன்னும் அவை நுகரப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

சின்னன் "அதுதான் முத்து நானும் நினைச்சேன் வெல்லன போனாத்தான் அவர கண்டுக்களாம்" என்றான்.

திடிரென சின்னன்... சின்னன்.. என்றொரு குரல் அவனை அழைக்கிறது. தன் புகை மாளிகையில் இருந்து வாங்க அண்ணே என்றான்.

"என்னப்பா சின்னன் வேலைக்கு வரலையா?" என்றான்.

"இல்ல அண்ணே நேத்து உங்க கிட்ட சொன்ன விசயமா போயிட்டு வரலானு பார்த்தேன்" என்றான்.

"சரி சின்னா.. வேலைக்கு நேரமாச்சு அப்ப நா போயிட்டு வாறேன்" என்று விடைபெறுகிறான் வேலு.

வேலு அண்ணன் சின்னனின் குடும்பத்துக்கு அவ்வப்போது சிறு பண உதவிகளை செய்து வருபவர். ஏறத்தாழ இரத்த தொடர்பு இல்லாத உறவினர் வேலு அண்ணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னனும் தனது பதினாறும் பெற்ற கோட்டை மாட்டிக் கொண்டு வெளியே கிளம்ப ஆயத்தமாகிறான். (அத்தனை கிழிஞ்சல்கள் கோட்டில் இருப்பினும் அத்தனைக்கும் தாழ்பால்கள் போடப்பட்டுள்ளன.)

"என்னங்க இத நீங்க கட்டாயம் போட்டுகிட்டுதான் போகனுமா?" என்றாள் முத்தாயி.

"அடவா புள்ள... புள்ள இல்லாத வீட்டுல துள்ளி விளையாடுறானாம் கிழவன்" என்ற மாதிரி இந்த வயசுல என்ன யாரு பாக்கப் போறா?" என்றவாறு வீட்டிலிருந்து வெளியேறுகிறான் சின்னன்.

முத்தாயி புகை மாளிகைக்குள் நுழைகிறாள்.

சின்னன் ஆப்பிஸ் வாசலுக்குள் நுழைகிறான். அங்கே தபாற்கார முருகன் சின்னனை காண்கிறான்.

"என்ன சின்னா காலையிலேயே இந்தப்பக்கம்... தொர ஏதும் உனக்கு ஆபிசுல வேல போட்டு கொடுத்துட்டாரா....?" என்று தன் அசட்டுத்தனமான கௌரவத்தை காட்டினான்.

"இல்ல அண்ணே தொர சாமிய கொஞ்சம் கண்டுகிட்டு போகலாம்னு வந்தேன்" என்றான்.

"ஓ அப்படியா! நானும் அவரத்தான் கண்டுக்க வந்தேன். ஆனா அவர் இன்னும் வரலயடா" என்று கூறியவன் தன் பெருமைகளை உணர்த்த எத்தனித்தான்.

சற்று நேரத்தில் நில நடுக்கத்தில் சிக்குண்டவர்களை போல ஆபிஸ் அலுவலர்கள் அங்குமிங்கும் பரபரக்கின்றனர். காரணம் தோட்டதுரை சொகுசு வாகனத்தில் வருவதை கண்டுவிட்டனர் போல.

இதனை அறிந்த சின்னனும் முருகனும் தன் உடலை வளைத்து கைகளை இருக கட்டி குளிர் வாடையால் இடம் தேடுபவர்களை போல ஒதுங்குகின்றனர்.

அப்போது "கம்பீர தோற்றத்தில் உலகமே தனக்கு என்பது போலி காட்சி தந்த தோட்ட அதிகாரி" வழமை போல் தன் அலுவலர்களோடு சிறு சம்பாஷனை நடாத்தி விட்டு ஓரக்கண்ணால் சின்னனையும் முருகனையும் நோக்கி விட்டு தன் அறைக்குள் நுழைகின்றார்.

சற்று நேரம் கழித்து அதிகாரியின் அறைக்குள் தலையை சொறிந்து கொண்டு சென்ற முருகன் ஓடி வந்து,"சின்னா உன்ன தொர வற சொல்லுறாருடா" என்று கூறிவிட்டு விடை பெறுகிறான்.

சின்னா தன் பதினாறும் பெற்ற கோட்டை சரி செய்து கொண்டு, பனை மரத்தில் பாதியை உடைத்து கட்டப்பட்டது போன்ற ஆபிசுக்குள் "வானுயர்ந்த மனிதன் போல" தலையை குனிந்துக் கொண்டு மெதுவாக, "ஐயா" என்றான்.

"ஓ... சின்னனா.... என்ன வேலைக்கு போகலையா.... காலையாலயே இந்தப்பக்கம்" என்றார் அதிகாரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னன் "இல்லைங்க சாமி ஒங்கலத்தான் கண்டுக்கிட்டு போகலாம்னு வந்தேன்" என்றான்.

"என்ன விஷயம் சொல்லு... போன கிழமைதானே வீடு ஒழுவுதுனு தகரம் தந்தேன்! இப்ப என்னா கதவு வேணுமா?" என்றார் கில்லாரி கலந்த பேச்சில்.

"அதெல்லாம் ஒன்னுமில்லங்க சாமி" நீங்க மனசு வச்சா நாங்களும் கொஞ்சம் நாள் வாழலாம்ங்க"

அதிகாரி "என்ன சின்னன் சொல்ற தெளிவா சொல்லுடா.... "என்றார்.

சின்னன் "இல்லிங்க சாமி உங்களுக்கே தெரியும் என் நிலைமை என்னானு.... மனுசனா பொறந்துட்டா பொறந்ததுக்காகவாது வாழனும்ங்களே" அது தான் என்று தன் குரலை மெதுவாக இழுத்தான்.

"அதுக்கு இப்ப என்னடா" என்றார் அதிகாரி.

"இல்லைங்க தொர..........." என்று தன் குரலை இழுத்து விட்டான் "தந்தி அருந்த வீணை போல"

"என்ன சின்னன் சுருங்கா சொல்லுடா நிறைய வேல கிடக்கு".

அந்த அமைதியான சூழலில் அவனது மனம் தத்தளிக்கறது. தன் நிலையை உணர்ந்த

"சுருக்கா சொல்லப்பா நிறைய வேல கிடக்கு" என்றார் அதிகாரி

"இல்லைங்க சாமி போன கிழமை ஒரு கடதாசி கொடுத்தேன். முடியாதுனு சொல்லிட்டிங்களாம். கணக்குபிள்ளை ஐயா சொன்னார். அது தான்.... என்றான்.

"டேய் உனக்கு என்ன பைத்தியம் பிடிச்சு போச்சுதா..... வாழறதுக்கு எவ்வளவோ வழி இருக்கப்ப இது என்னடா... முட்டாள் தனமான யோசனை.....

"பேசாம போய் வேலையை பாரு" என்றார் அதிகாரி.

"இல்லைங்க சாமி வீடு நிலைமையை யோசிச்சேன்.. தொரைக்கே தெரியும். அது தான் இப்ப... என் சின்னவனும் படிக்கிறான்..... முத்தாயிக்கும் முன்னமாதிரி இல்லங்க... அதுதான்" என்றான்.

"அதுக்கா.....?" என்றார் அதிகாரி.

"இல்லைங்க தொர ஏதோ எனக்கு கிடைக்கிறத வச்சிதான் இவ்வளவு நாளா சமாளிச்சோம். ஆனா இப்ப உள்ள நிலைமைக்கு நா வாங்குற சம்பளமெலாம் எங்க வீட்டு ரெண்டு நாள் சாப்பாட்டுக்குத்தான் சரியா இருக்கு சாமி" என்றார்.

"அதுக்காக முட்டாள் தனமான உன் யோசனைக்கு என்ன துணை போக சொல்றியா?

"சாமி இப்ப முடியாதுனு சொல்லிடிங்கனா பிறகு என் நிலைமையை கொஞ்சம் யோசிச்சு பாருங்க....

"அதுக்காக இது தான் உன் முடிவா.. வேற யோசனையே உனக்கு இல்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தொரைக்கு இப்ப வெளி நிலைமைகளும் தெரியும் யார நம்பி என்ன செய்ய முடியும்ங்க....கூடவே இருந்தே கொஞ்சம் ஆறுதலாவது இருக்கும்க..... அதுதான் சாமி"

"சின்னன் இதோ பார் உங்கள்ள ஒருத்தனா இருந்துதான் நானும் இந்த தொழிலுக்கு வந்தேன். அதுதான் உனக்கு இவ்ளோ சொல்றேன். இப்படியேத்தான் எங்க வாழ்க்கை தொடரனுமா?

"அதுவும் நெசந்தாங்க. ஆனா இப்பயெல்லாம் 1கி அரிசி வாங்கனும்னா ரெண்டு செம்பு இரத்தமாவது வேனுங்களே! எனக்கு இப்ப அவ்ளோ இரத்தமெலாம் இல்லீங்க. அதுதாங்க ஏதோ கொஞ்சம் பங்கீட்டுக்கலாம்னு நினைக்கிறேன்" என்றவாறு சின்னனின் கண்களில் கண்ணீர் பீறிட்டுக் கொண்டிருந்தது.

'உடனே தோட்ட அதிகாரி "இதோ பார் சின்னன் நா சொல்ல வேண்டியத சொல்லிட்டேன் இனி உன் முடிவுதான்" என்றார்.

"இல்லீங்க சாமி இனி மாற்றமில்லிங்க. மாறினா எல்லாமே மாறிடும்ங்க" என்றான்.

"சரி சின்னன் இனி நா என்ன சொன்னாலும் நீ கேக்க போறதில்ல நா கணக்க பிள்ளைகிட்ட டேட் சொல்லி விடுறேன். அவர் சொன்ன பிறகு அனுப்பு என்றார்.

பிரசவத்தில் இருந்த தாய் சுகப்பேறு பெற்றது போல பெரு முச்சுடன் "ரொம்ப நன்றி சாமி" என்று கூற பீறிட்டுக் கொண்டிருந்த கண்ணீர் பீச்சியடித்தது.

சின்னனுக்கு நாள் சொல்லப்பட்டு விட்டது.

"காலை வேளை வழமை போல முத்தாயி தேனீரை கணவனின் கைகளில் சேர்த்துவிட்டு சாப்பாடு ஒன்றை தயார் செய்து அடுப்புத்தின்னையிலே வைக்கிறாள். சின்னன் தன் பதினாறும் பெற்ற கோட்டை மாட்டிக் கொள்கிறான். தரம் பதினோறாம் ஆண்டு புத்தகங்கள் ஒரு மூளையில் அடுக்கப்படுகின்றன.

"வறுமையின் பிடியில் இதுவும் ஒரு நாடகம்தான்" என்ற விரக்தியை ஏற்றுக்கொண்டு அடுப்புத்தின்னையிலே வைக்கப்பட்டிருந்த சாப்பாட்டை எடுத்துக்கொண்டு "அம்மா எல்லாரும் போறாங்க நானும் போயிட்டு வாறேன்" என்ற உற்சாக குரலுடன் வாணி தாயின் கூடையை தலையிலே சுமந்துக் கொண்டு தடம் பதிக்கிறாள் அந்த.....

கொழுந்து மடுவத்தை நோக்கி..........!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ந்து வரும் மலையகக் கல்வி

த. தீபதர்ஷினி
தமிழ் பிரிவு
இரண்டாம் வருடம்

"உடையார் முன் இல்லார் போல் ஏக்கற்றும்

கற்றார் கடையரே கல்லாதவர்"

வறியவரைப் போல் ஏக்கமுற்றவராயினும், முயற்சியுடன் கற்று சிறந்தவர்களே சிறப்புடையவர் ஆவார் கல்லாதவரோ கடையானவரகளே என்பது இயற்புலவர் மொழிந்தது.

இந்த வகையில் இன்று மலையகத்தில் (அதாவது மேலைத்தேய நாடுகளில் மட்டுமல்லாது மலையகத்தில் கூட) கல்வியின் வளர்ச்சி முன்னேற்றகரமானதாகவே உள்ளது. தற்காலத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு பெற்றோரும் தான் கல்வி கற்கா விடினும் தமது பிள்ளைகள் கல்வி கற்க வேண்டும் என்றே எண்ணுகின்றனர். இதனால் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புகின்றனர். அவர்களுக்கு கல்வி கற்க வாய்ப்பளிக்கின்றனர்.

மலையகத்தைப் பொறுத்தமட்டில் கல்வியானது சிறப்பாக அமைவதற்காக பல பாடசாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி கல்வி கற்ற மாணவர்கள் சிறப்பான தொழிற் பயிற்சியினை பெற்றுக் கொள்வதற்காகவும் 'தொண்டமான் பயிற்சி நிலையம்' போன்ற பல நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும் சிறப்பாக கல்வி கற்று க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர் தரங்களில் மாணவர்கள் சிறப்பான பெறுபேற்றை ஒவ்வொரு வருடமும் பெற்றுக் கொள்கின்றனர். இதன் காரணமாக மலையகத்திலிருந்து வருடந்தோரும் பல்கலைக்கழகம், கல்வியற் கல்லூரிகள் போன்றவற்றிற்கு பல மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள். மலையகத்தை பொறுத்தவரையில் கல்வியானது சிறப்பாக வளர்வதாலேயே மலையகத்திற்கென ஒரு பல்கலைக்கழகம் உருவாக்கப்படுகின்றது. மட்டுமல்லாது கொட்டகலை ஆசிரியர் பயிற்சி கலாசாலை, தேசிய கல்வியற் கல்லூரி போன்ற ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் நிலையங்களும் கூட உருவாக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் வள்ளுவரால் எமது கண்ணிற்கு ஒப்பிடப்பட்ட கல்வியானது வெறும் ஏட்டுக் கல்வி மட்டுமல்ல. அக்கல்வியில் நற்பண்புகள் அனைத்தும் அடங்குகின்றன. இந்த வகையில் மலையக கல்வியில் ஒழுக்கங்களுக்கும், ஏனைய நல்ல விடயங்களுக்கும் கல்வியை விட பெருமளவு வரவேற்பு வழங்கப்பட்டுள்ளமை, அனைவராலும் போற்றப்பட்டுள்ளது. இத்துடன் இங்கு கலை, கலாச்சார பண்புகள் உயர்நிலையை அடைந்துள்ளன. இவற்றுக்கு அடிப்படையாக விழாக்களும் போட்டிகளும் அமைகின்றன.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்...."
எனும் நிலை மாறி இன்று
"பாடசாலை இல்லா ஊரில் வாழ வேண்டாம்...."
எனும் நிலை மலையகத்தில் ஏற்பட்டு விட்டது.

சுருங்கக் கூறின் பாடசாலை எனும் விளக்கில் மாணவர்களை திரியாக கொளுவி, ஆசிரியர்கள் அதில் தீபமாக சுடர்விடுவதுடன் அந்த திரியை அறிவு பொருந்தியதாக சுடர்விட செய்து மலையகத்தை தூண்டா மணவிளக்காய் திகழ செய்கின்றனர். இப்பணிகள் தொடரும் வரை நாம் கல்வியால் நிகரற்றவர்களாக திகழ்வோம் என்பதில் ஐயமில்லை

"எம்மை யுலகத்தும் யாங்காணோங் கல்வி

போல் மம்மாறுக்கு மருந்து" - நாலடியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவ்வாத்துக் குச்சி

S. தர்ஷிகா
சமூக விஞ்ஞானப் பிரிவு
முதலாம் வருடம்

அந்த அம்புலன்ஸின் அகோரமான சத்தம் அவனுக்கு ஏதோ உணர்த்திக் கொண்டே இருந்தது. தலையணை இல்லாததால் அவனது இருதாடைகளும் பாவப்பட்டு ஒட்டிக் கொண்டு அவளது தலையை தாங்கிக் கொண்டன.

"மலையகத்தானும் ஆங்கிலேயனை விட சிவப்பாகலாம்"

என்பதை இப்போது புரிந்து கொண்ட தேயிலைகள் பாதையின் இருமருங்கிலும் நின்று காற்றோடு தலையசைத்து வரவேற்றன.

இவனுக்கு குழந்தை என்றால் "பொங்கல் அட்வான்ஸ்" போல அலாதிபிரியம் அதனாலோ என்னவோ இருபது பயசிலேயே கலியாணம் முடித்துவிட்டான். அவளுக்கும் அதே வயசுதான். ஆண்கள் நிரையில் கொழுந்து எடுத்து விட்டு வரும் போது தேயிலை செடி அசைவதைப் பார்த்த அவன் முயல் என்று நினைத்து அங்கே போய் தேயிலையை விலக்கிப் பார்த்தான்.

அங்கே..... அங்கே அவள்.... கட்டுக் குச்சி உடைத்துக் கொண்டிருந்தாள்.

என்ன புள்ள செய்யு.... ற?

அவனது கவ்வாத்து கத்தியின் முனை போன்ற கூறிய குரல் அவளது காதில் விழுந்து கீற அவள் என்னா செய்யுறோம்னு ராசாவுக்கு தெரியலையோ? என்று அந்தக் கத்திக்கு சானை பிடித்தாள்.

"அட சும்மா கேட்டேம் புள்ள.... நாங் கேக்கக் கூடாதோ"?

"நீக்கயென்ன யேம்மாமனா புருஸ்ச......................

வார்த்தை ரயில் தடம் புரண்டது. அவனது மனமாகிய ரயிலும் பீலி பாய்ந்தது.

அப்புறம் என்ன? துளிர்ந்தது இவர்களின் காதல் கொழுந்து.

"கொழுந்து துளிர்த்தால் கொய்வது தானே முறை".

ஆனால் மடுவத்துக்கு பின்னும், மூங்கில் ஆற்றைத் தொடாது தடுக்கம் தரையிலும், தேயிலைச் செடிகளிலுமாக வளர்ந்தது குறிஞ்சிக் காதல்.

அந்த கொழுந்துகளின் அசைவு, அவர்களின் காதலை இரசித்த படியே பாவப்படும். அந்த அளவு வளர்ந்தது காதல்.

மீசை முளைச்சி ரெண்டு வருஷம் முடியுறதுக்குள்ளே பூத்த கலியாணக் காதல், காதல் கலியாணமாக ரொம்ப நாள் செல்லவில்லை.

இவனுக்கு அப்பா அம்மா வாசனையே தெரியாது. அவளுக்கு தேத்தண்ணி வாசத்தை விட அப்பா அம்மா வாசனையெல்லாம் பிடிக்காது. எனவே உடனே மாரியம்மன் சாட்சியாக பெரும் கோலாகலமாக, யாருமே அப்படி ஒரு கலியாணம் செய்யவில்லை என்பது போல வரலாறு காணாத பிரம்மாண்டமாக இவர்களது கலியாணம், இவர்களின் வருகையோடு மட்டும் முடிவுற்றது. ச்சீ தொடங்கியது இவர்களுக்கென ஒரு லயவறை இல்லாமலா போகும்? அதிலே குடித்தனம் தொடங்கியது.

"கீ............க்...............க்

அம்புலன்ஸ்க்கு முன்னால் தேயிலை லொறி வந்தது. அந்த இரட்டையடி பாதையில் "சைட்" கொடுக்க பத்து நிமிடங்கள் ஆனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவனோ சிவப்பாக"

திரும்பவும் நினைவுகளோடு அவனது கண்கள் திறந்தபடியே பேசின.

இப்படி வாழ்க்கை போக வழக்கம் போல அவளுக்கு கூடை தலையிலே ஏறிக்கொள்ள ஐந்து மாத கர்ப்பிணியாக நடக்கவும் முடியாமல் நடந்தாள்.

லீவு கேட்டும் கிடைக்கவில்லை. ஐந்தாம் மலையிலே அவள் "வங்கி"க்கு அருகில் கொழுந்தெடுத்துக் கொண்டிருக்கும் போது வழுக்கிக் கீழே விழ........ பாவம் கர்ப்பிணி என்று கீழே கவ்வாத்து கழிக்கப்பட்ட குச்சி உணர்ச்சி வசப்பட்டு அவளை பிடிக்கப்போய் வயிற்றைக் குத்திக் கிழித்தது.

உடனே சேதி கேட்ட அவன் பத்தாம் மலையியிலுந்து வந்ததும் இருபது நிமிடத்தில் வெகு சீக்கிரமாக அம்புலன்ஸ் வந்தது.

ஆம்........... ஆஸ்பத்திரி அவளை கைகளில் தாங்கியப்படியே இந்த சிவப்பு தோட்டக்காட்டான் டாக்டரை நோக்கி ஓடினான்.

"டாக்டர் இவள்"......

சொல்லி முடிக்க முன்பு அவள் உள்ளே கொண்டு செல்லப்பட்டாள் சொல்ல வேண்டியது கடமை.

அவளை இறக்கி வைத்த பின்னும் அவனது கையில் ஏதோ இருந்தது போல உணரந்தவன் டக்கென்று கையைப் பார்த்தான்.....

த்..... ஆ...... ன்

அய்யய்யோ .......... கடவுளே.........

எப்படி சொல்வேன்.........

அவனது கை அவளது வயிற்றை இதுவரையும் அணைத்து வந்ததால் அவனது கையில் ....... ஒரு சிறிய ........ மிகச் சிறிய குழந்தையின் கால்

மயக்கத்துடன் விழுந்தான்.

எழுந்தான்..........

எழும் போது அவளது மலருடல் கொண்டு வரப்பட்டது.

இஸ்டோர் சங்குகள் முழங்க.......

மரண ஊர்வலத்தில் மழையும் புகுந்து கொண்டது. தனது அனுதாபத்தை வானமும், மின்னல் வடிவில் மூக்கு சிந்தி அழுதது.........

தேயிலைகளுக்கிடையே தோண்டப்பட்ட புதைக்குழியில் ஏற்கனவே இருந்த எலும்புகளை எடுத்து வீசிவிட்டு இவளை வைத்தான்.

கொழுந்தில் பட்ட மழைத்துளி அத்தேயிலைகளில் உரமாகிப் போன முன்னோர்களின் கண்ணீர்த்துளியாக பட்டு வடிந்தன.

பின்னர்............

வடிந்து கொண்டேயிருந்தன............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பெருங் காப்பியங்களின் கதை

பெ.இரமேஸ்ராஜா
தமிழ் பிரிவு
இரண்டாம் வருடம்

காப்பியம் எனும் போது பல இலக்கிய இலக்கண நூல்கள் தெளிவான வரைவிலக்கணங்களை எடுத்துக் கூறுகின்றன. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு புருடார்த்தங்களையும் கொண்டு கடவுள் வாழ்த்து, அவையடக்கம், வாழ்த்துரை, நாட்டுச்சிறப்பு ஆகியன பரவி வரும் வகையில் தெளிவாகவும் எளிமையாகவும் கூறுவது காப்பியமாகும்.

தொல்காப்பிய ஆசிரியர் தொல்காப்பியத்தில் காப்பியம் பற்றி பின்வருமாறு கூறுகின்றார். தொன்மை, விருந்து, இயைபு, புலன், வண்ணம், குறிப்பு, மெய்பாடுபொருள் ஆகியனவற்றை உணர்த்துவதாய் காப்பியம் அமையுமெனவும் "காப்பியம்" எனும் சொல் பழங்காலத்தில் பயன்படுத்தாமல் பாவனையாக மூன்றாகக் கொள்ளப்பட்டது இதனுள் நாடகச் செய்யுள் மூன்றினுள் காப்பியத்தை தொடர்நிலைச் செய்யுளென எடுத்துக்காட்டினார்.

முப்பெருங் காப்பியங்கள் எனும் போது சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தானணி ஆகியன முறையே தமிழிலக்கிய வரலாற்றின் அடிப்படையில் முதலிரண்டும் சங்கமருவியக்காலத்திலும் சீவகசிந்தானமணி சோழர் காலத்திலும் தோற்றம் பெற்றதென்பர்.

01. சிலப்பதிகாரம்

இளங்கோவடிகளால் முத்தமிழான இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றும் விரவப் பெற்றக் காப்பியமான சிலப்பதிகாரம் புகார், மதுரை, வஞ்சி ஆகிய மூன்று தலைநகரங்களை மூன்று காண்டங்களாக கொண்டுள்ளது. முப்பது காதைகளையும் தெளிவும் எளிமையும் கொண்டு காணப்படுகின்றது.

சிலப்பதிகாரத்தில் முப்பது உட்பகுதிகளில் இருபத்திரண்டு பகுதிகள் காதைகள் எனவும், ஏனையவை பாடல், மாலை, குரரை, வரி எனவும் பெயர் பெற்றன. தமிழிலக்கிய மரபுக்கேற்ப ஐந்நில மக்களின் பண்பாட்டினை கூறுவது போல இக்காப்பியம் அமைந்துள்ளது.

கதை

புகார் நகரிலுள்ள மாநாய்கன் மகள் கண்ணகிக்கும் மாசாத்துவான் மகன் கோவலனுக்கும் திருமணம் நிகழ்கிறது. பரத்தைகளின் ஒருவளான மாதவியின் ஆடலைக் கண்டு மயங்கி கண்ணகியை விட்டு நீங்குகிறான். பின்னர் மாதவியுடன் இணைந்து வாழ்கிறான். பின் ஊழ்வினைக் காரணமாக மாதவியை விட்டு பிரிந்து மீண்டும் கண்ணகியை அடைந்து இழந்த செல்வத்தை மீட்க இருவரும் மதுரை மாநகர் செல்ல வழித் துணையாக கவுந்தியடிகள் செல்கின்றார். கவுந்தியடிகள் இடைகுல மாதரிடம் கோவலன் கண்ணகியை அடைக்கலமாகக் கொடுக்கிறான். கண்ணகியின் சிலம்பை விற்க கோவலன் மதுரைக்குச் செல்கிறான். அங்குப் பொற்கொல்லனின் சூழ்ச்சியால் கோவலன் கொல்லப்படுகின்றான். கண்ணகி வழக்குரைத்துக் கோவலன் கள்வனல்லன் எனும் உண்மையை உலகுக்குணர்த்தி மதுரையை சுட்டெரித்தப் பின்னர் சேரநாடு அடைந்து அங்குத் தன் கணவனுடன் விண்ணுலகம் எய்துகிறாள்.

சிலப்பதிகாரத்தில் கிளைக்கதைகள் பல இடம்பெறினும் அவை மூலக்கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதையா வண்ணம் புனையப்பட்டுள்ளமை சிறப்புக்குரியதாகும். பலகிளைக்கதைகள் மையக் கதைக்கு உறுதுணையாக அமைந்துள்ளன.

விழுப்பொருள்

காப்பியத்தின் கதையையும் பாத்திரங்களையும் தொடர்புபடுத்தி அமைப்பதினால் காப்பியம் செம்மையான நிலையை பெறுகின்றது. சிலப்பதிகார காப்பியம் உயர்ந்த பாத்திரங்களை கொண்டு விழுமிய கருத்துக்களையும் உண்மைத் தன்மைகளையும் சிறந்த அறங்களையும் வலியுறுத்துகின்றது.

01. "அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்றாவதும்"

02. "உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்"

03. "ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்"

இவை போன்ற அறிய உண்மைகளை உலகுக்குணர்த்த தோன்றிய காப்பியமாக சிலப்பதிகாரம் காணப்படுகின்றது. தமிழ் மறைக்கூறும் ஓர் அரிய உண்மையை இக்காப்பியம் செம்மையுறக் கூறுகின்றது.

"இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவ தொழியாது
செல்லுந் தோத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன் மாஞாலத்து வாழ்வீ ரிங்கென்"

என்ற உண்மைணை உலகிற்கு உணர்த்தி நிற்கின்றது.

## 02. மணிமேகலை

மதுரை கூல வாணிகர் சாத்தனார் புத்தரின் வரலாற்றோடு கூடிய அறங்களை உள்ளுறையாகக் கொண்டு மணிமேகலை காப்பியம் படைக்கப்பட்டுள்ளது. இளங்கோவும் சாத்தானாரும் உயிரும் உணர்வும் ஒன்றிய நட்புத்தன்மையைக் கொண்டு படைக்கப்பட்ட காப்பியமாக சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன காணப்படுகின்றன. இவை 'இரட்டைக் காப்பியங்கள்' எனவும் அழைக்கப்படுகின்றன.

மணிமேகலையின் சிறப்புப் பாயிரத்தின்கண் காவிரிப் பூம்பட்டினத்தின் வரலாறும் அதன் தலைநகரான சோழ நாட்டு மற்றும் காவிரி ஆற்றின் வரலாறும் கூறப்பட்டுள்ளது. இந்திரனுக்கு விழா எடுக்க முரசறைதல், மணிமேகலை பிறப்புற விரதம் என இடையிடையே பல கிளைக்கதைகள் இழையோடி காப்பியத்தை அலங்கரித்துள்ளன.

கதை

சிலப்பதிகார மாதவியின் மகளான மணிமேகலை காப்பியத்தலைவியாகக் கொள்ளப்படுகிறாள். இன்பத்தை வெறுத்துப் புத்தப் பிக்குணியாகத் தன் பாவத்தை நீக்கும் வகையில் மணிமேகலை படைக்கப்பட்டுள்ளாள்.

முரசறையும் வள்ளவன் இந்திரவிழாவில் கலந்து கொள்வதை நகர மக்களுக்கு அறியத்தருகின்றான். மாதவியும் அவ்விழாவில் சொல்லாட்டம் நிகழ்த்துகிறாள். இச்சந்தர்ப்பத்தில் தன் தந்தை கோவலனுக்குற்றது கேட்டு மணிமேகலை கண்ணீர் சிந்த அந்த கண்ணீர் புத்த படிமத்திற்று சாத்தப்பட வேண்டிய பூமாலையில் விழுந்தமையாலி தூய்மை இழக்கின்றது. புதிய மலர் கொணர மணிமேகலையும் சுகமதியும் உவவனம் செல்கின்றனர். உதயகுமாரன் மணிமேகலையைக் கண்டு காமுறுகிறான். அப்போது மணிமேகலா தெய்வம் மணிமேகலையை மணிப்பல்லவத் தீவிற்கு தூக்கிச் செல்கின்றது. அங்கு மணிமேகலை தனது முன்பிறப்பை அறிகின்றான். அட்சயப் பாத்திரம் பெறுகின்றாள். உதயகுமாரன் காஞ்சனனால் கொலையுறுகின்றான். மணிமேகலை சிறையுறுகின்றாள். சிறையை அறை கோட்டமாக மாற்றி கச்சி மாநகர் செல்கின்றாள். அறவண அடிகளின்பால் நோன்பு இருந்து முக்தியடைகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாத்திரம்

மணிமேகலை காப்பியத்தில் தலைசிறந்த பாத்திரமாக மணிமேகலையும், ஆபுத்திரனையும் படைத்து அவர்களின் வழி சிறந்த நீதிநெறிகள் உலகிற்குத் தெளிவாக உணர்த்தப்படுகின்றது. இவ்விரு பாத்திரங்களினூடாகவே ஆசிரியர் உலகிற்கு கூறும் சகல கருத்துக்களையும் கூறி வருகின்றார்.

மணிமேகலையின் துறவரத்தைத் தூய துறவரமாகக் காட்டியிருக்கிறார். காப்பிய ஆசிரியர் ஆதிரை, நல்லாள், மருதி, சுகந்தன், மாவன்கிள்ளி ஆகிய துணைப் பாத்திரங்களைக் கொண்டு காப்பியம் உயர்வாக உன்னதமாக படைக்கப்பட்டுள்ளது.

## 03. சீவகசிந்தாமணி

திருதக்க தேவரால் படைக்கப்பட்ட செந்தமிழ்க் காப்பியமாக சீவகசிந்தாமணி காணப்படுகின்றது. மூவாயிரத்து நூற்று நாற்பத்தைந்து பாக்களையும் பதின்மூன்று இலம்பங்களையும் கொண்டுள்ளது.

சீவகன் காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, காமஞ்சல, இலக்கணை ஆகியோருடன் தனித்தனியாக மணம் செய்துகொண்டமையை ஒவ்வொரு இலம்பகங்களில் கூறப்பட்டுள்ளது. பதின்மூன்று மணங்களை பகர்வதால் இது 'மணநூல்' எனவும் அழைக்கப்படுகின்றது. காப்பியத் தலைவனாக சீவகன் காணப்படுகின்றான். அவனின் குணம், ஆற்றல், தெய்வக்குணகம் பொருந்தியவனாகவும் 'நிலையாமை' என்ற பொருளை உணர்த்துவதாக இக்காப்பியம் கருதப்படுகின்றது.

### கதை

ஏமாங்கத நாட்டரசன் சச்சந்தன் விசையை மணம் புரிந்து ஆட்சியை மறந்ததால் அமைச்சனான கட்டியங்காரனால் ஆட்சியில் இருந்து வீழ்த்தப்படுகின்றான். அரசி விசயை சுடுகாட்டில் சீவகனை பெற்றெடுக்கின்றாள். கட்டியங்காரனின் யாணையை அடக்கிச் சிறைப்பட்டு சுதஞ்சனனால் தப்புகின்றான் சீவகன.

இலக்கணையின் தந்தையின் உதவியுடன் கட்டியங்காரணை வென்று நாட்டை மீட்கின்றான். பின் தன் மகனுக்கு அரசளித்து துறவுபூண்டு முக்தியடைகின்றான் சீவகன். மையக்கதை குலையா வண்ணம் கதை நிகழ்வு களத்தை செம்மொழியால் அமைத்திருக்கின்றார் காப்பிய ஆசிரியர்.

சீவகசிந்தாமணியின் குறிப்புப் பொருள் காப்பியம் முழுவதும் பரிவிக்கிடக்கின்றது. முக்தியடைவதே ஆன்மாவின் நோக்கமாயினும் உலக இன்பங்களில் அளவோடு இருந்து முக்கியடைவதே சிறப்பு என்பதை வலியுறுத்தும் சிறந்த தமிழ்நடைக் காப்பியமாக சிந்தாமணி காணப்படுகின்றது.

### விழுப்பொருள்

உலகில் நல்வாழ்க்கை வாழ வேண்டும் என விரும்பும் மக்களுக்கு உறுதிப்பொருள் பலவற்றை வழங்குகின்றது. இன்பத்தில் மூழ்குவதால் இன்னலும் கடமை மறந்தால் கருத்துயரும் அடைவான் என்றும் சூழ்ச்சி செய்பவன் அதனாலேயே அழிவான் போன்ற உண்மைக் கருத்துக்களை உள்ளடக்கி செம்மையான மொழிடையில் மனதை கவரும் வகையில் அமைந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | சிலப்பதிகாரம் | மணிமேகலை | சீவகசிந்தாமணி |
|---|---|---|---|
| ஆசிரியர் | இளங்கோவடிகள் | கூலவாணிகள் சாத்தனார் | திருத்தக்கத் தேவர் |
| காலம் | இரண்டாம் நூற்றாண்டு | மூன்றாம் நூற்றாண்டு | ஒன்பதாம் நூற்றாண்டு |
| முதல் நிகழ்வு | கோவலன் கண்ணகியைப் பிரிதல் | மணிமேகலையை மலர் வனத்தில் உதயகுமாரன் காதல் கொள்ளல் | கட்டியங்காரனின் யானையை சீவன் அடக்குதல் |
| திருப்பம் | கோவலன் மாதவியைப் பிரிதல் | மணிமேகலைக்கு அமுதசுரபி கிடைத்தல் | சிறையிலிடப்பட்ட சீவகன் தப்புதல் |
| உச்சம் | கோவலன் கொலை | உதயகுமாரன் கொலை | சீவகன் கட்டியங்காரனை வெல்வது |
| வீழ்வு | கண்ணகி வழக்குரை | கொலைக்கு பின் நிகழ்பவை | சீவகன் வெல்வதற்கு பின் உள்ளவை |
| முடிவு | கண்ணகிக்கு கோட்டம் அமைத்தல் | மணிமேகலை தவம் செய்தல் | சீவகன் முத்தி அடைதல் |

தமிழிலக்கிய மரபிலே முப்பெருங் காப்பியங்கள் என அழைக்கப்படும் சிலப்பதிகாரம் மணிமேகலை, சீவகசிந்தாமணி என்பன காப்பிய ஆசிரியர்களால் எளிமையாகவும் தெளிவாகவும் படைக்கப்பட்டுள்ளமை வரவேற்க வேண்டியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவுக்கு கலியாணம்

து. நாகேஸ்வரி
தமிழ் பிரிவு
இரண்டாம் வருடம்

"நா நெனக்கவே இல்ல ராஜா இப்படி செய்வானு.... ராஜா, ஏ தங்கச்சிட நண்பன்......"

அவனுடன் பேசி பழகியது சில நாட்களெனினும் அவனது பண்பான பேச்சும் கனிவான நடத்தைகளும் அனைவரையுமே ஈர்க்கத்தான் செய்தன. அன்பின், அமைதியின் முழு தோற்றம் ராஜா. அத்தகையவனின் செயலின்று அனைவருக்கும் அதிர்ச்சியைத் தான் தருகிறது!........

"வகுப்பில் நல்லக் கெட்டிக்காரன். படிப்பில் நல்ல முன்னேற்றம்......"

என் தம்பி உட்பட சக நண்பர்கள் மற்றும் வகுப்பு ஆசிரியரும் அடிக்கடி கூறுவதுண்டு விளையாட்டிலும் அளவில்லா ஆர்வமும் திறமையும் கொண்டவன். ராஜா சிறுவயதிலேயே தனது தந்தையை இழந்துவிட்டான். அன்றிலிருந்து தேயிலைத் தோட்டத்தில் தன் வியர்வை சிந்தி, அரும்பாடுப்பட்டு அவனது தாய் அம்புஜமே அவனை வளர்த்து வந்தாள்.

அம்புஜத்தை விட்டு ராஜா பிரிய மாட்டான். அந்தளவு அம்புஜத்தின் மீது ஆரா அன்பு. எப்போதும் தன் ஈன்றெடுத்தவளது கரங்களைப் பற்றிக் கொண்டே திரிவான். தன் ஒற்றை மகனென அவளும் அவனை பிரிந்ததில்லை. இவர்களை போலவே இவர்களது வீடும் அன்பு நிறைந்த சோலை!......

இவர்களது வாழ்க்கை இடர்கள் ஏதுமின்றி இனிதே சென்றுக் கொண்டிருக்க திடீரென ஒரு செய்தி இடியாய் வந்திறங்கியது. அம்புஜத்திற்கு மறுமணம் முடித்து வைக்க உறவினர்கள் தீர்மானம் எடுத்தமையே.......

சிறுவயதிலிருந்தே பெரியவர்களின் பேச்சுக்கு மறுபேச்சு பேசாத அவள் மறுக்க முடியாது வேதனையில் உருகினாள். தன் மகனின் எதிர்காலம்...... தன் கணவன் மீதான அன்பும் மதிப்பும்..... அத்தனையும் மாறி மாறி நினைவலையாய் வந்து அவளிதயத்தை மோதி வலி தந்தன. ராஜா ஓடி வந்தணைத்த வேளை அழுதழுது சிவந்து போயிருந்த அவளது கண்கள் சிந்தும் கண்ணீரைப் பார்த்து திகைத்துப் போனான்.

பன்னிரு வயதுடையவன் என்பதால் அம்பஜத்தின் மறுமணம் குறித்து அவனால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. தன் அன்பு மகன் ராஜாவை அணைத்தபடியே ஏதேதோச் சொல்லிச் சொல்லி புலம்பினாள் அம்புஜம். அத்தனையையும் தானும் உடன் அழுதுக் கொண்டே கேட்டான்.

"நீ என்ன விட்டு போயிருவியாம்மா?"

பதிலளிக்கவும், இளம் வயதிலேயே விதவையானாள் படும்பாட்டை சொல்லவும் முடியாத ஊமையாக என்ன செய்வதென்றே புரியாதவளாய் விம்மினாள்.

இரவு நித்திரைக்குச் சென்றும் பயனில்லை அம்புஜத்தின் அழுகையும், புலம்பல்களுமே ராஜாவினனது நினைவுகளில் உழன்றன. மறுநாள் வழக்கமாக விடிய அம்புஜமும் வீட்டு வேலைகளை முடித்து கூடையை சுமந்துக் கொண்டு புறப்பட ஆயத்தம் ஆனாள்.

"இன்னைக்கு ஒன்ன பாக்க மாப்ள் வீட்ல இருந்து வாறாங்க நீ வேலக்கி போவேணா...." என்று வீட்டார் கூறியதும் இவளது இயலாமையை நினைத்து நாணி தலை குனிந்தாள்.

பெண்பார்க்க வரும் செய்தி அககம் பக்கம் அவசரஅவசரமாக விரைந்து பரவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜாவிடம் ஊரார் விசாரித்தனர். அத்தனை ரனங்களையும் தாங்காது அந்த பிஞ்சுள்ளம் நினைத்தது என்னவோ?.... அம்புஜத்திடம் போய் அடக்க முடியாத அழுகையுடன்

"நீ திரும்பவும் கல்யாணோ செஞ்சிக்கப் போறி....யாமே?.... எல்லாரு சொல்றாங்கம்மா......"

"நா ஒனக்கு பதில் சொல்ல முடியாத பாவியாகிட்டேண்டா...... ராஜா..."

இறுக அணைத்தபடி இருவருமே கண்ணீர் மழையில் ஆழ்ந்தனர்.

சிறிது நேரம் சென்றதும் அம்புஜத்திற்கு அலங்கரிப்புகள் செய்துவிக்க பெண்கள் அணிதிரண்டனர். அழுதழுத கண்கள் சிவந்திருந்தவளை அலங்காரமும் அழகிய சிருங்காரம் மிக்கவளாக மிளிரத்தான் செய்தது. அவளழகை மெச்சியபடியே மாப்பிள்ளை வீட்டாரை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அம்புஜமோ துயரக்களைப்பில் வாடி போயிருந்தாள். திடீரென நினைவு மீண்டெழ அவளது கண்கள் ராஜாவை தேடியலைந்தன. அங்கு அவன் இருக்கவில்லை.

ஒரு பக்கம்

"மாப்ள வீட்ல வந்தாச்சி......."

வீட்டின் பின்புறம்

"ஐயோ!"

அனைவரும் திகைத்தோடி பார்த்த போதுதான்...... அங்கு ராஜா..... உடல் மட்டும் கிடந்தது அவனது உயிர் எங்கே?...... தன் தாய் அம்புஜத்தின் பிரிவைத் தாங்கிக் கொள்ளவும், அவளது துயரை நீக்கவும் முடியாது தன்னுயிரை மாய்த்துக் கொண்டான் ராஜா.

அருகில்

"அம்மா..... நீ இன்னொரு அப்பா கூட போயிருவியாமே...... நா தனியாகிடுவேனா..... நீ என்ன விட்டுட்டு போறதுக்கு முன்னாடி நா போறே........"

ராஜாவின் வார்த்தைகள் சிறு துண்டொன்றில் தொடர்ந்தன.... அப்போது தான் தான் ராஜாவிடம் புலம்பியது அம்புஜத்தின் நினைவில்,

"செத்தொழிஞ்சாத்தா தொல்ல விட்டு போகுண்டா ராஜா...."

"நா சாகனும்னு சொன்னத தப்பா புரிஞ்சிக்கிட்டானே பாவி....!

புலம்பியப்படியே மயங்கினாள் அம்புஜம்.

இத்தனையும் என்தங்கை என்னிடம் கூறி

"எல்லாமே விதிப்பயன்" என பெருமூச்சு விட்டாள். மறுமணம் பெரும் மன வேதனையைத்தான் தந்துள்ளது. இவ்வாறு பல அம்புஜங்களும் ராஜாக்களும் இருக்கின்றனர் போலும்....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைநாட்டு மக்கள் நாம்

ச. திலீபன்
சங்கீதப் பிரிவு
இரண்டாம் வருடம்

கப்பல் ஏறி கடலில் கங்காணியுடன் வந்தோம்
கடிதத்தில் கூட எங்கள் வம்சம் இல்லை
தேயிலைக்கு இங்கு எவ்வளவு வயதாகிறதோ
அவ்வளவு வயதாகிறதாம் எங்களுக்கும்

தேயிலை விதைத்த வெள்ளைக்காரன்
எங்களையும் கூட மலைகளில் விதைத்தான்
நாங்கள் விதைக்கப்பட்டது வளர்வதற்காக
அல்ல உரமாய் உறிஞ்சப்படுவற்காக

அட்டைகளோ எங்கள் ரத்தத்தை உறிஞ்சின
மனித இன அட்டைகளோ எங்கள் உடல், உயிர்
உரிமை அனைத்தையும் உறிஞ்சின

றபர் மரம் உதவாதபோது வெட்டி வீழ்த்தப்படுகின்றது
நாங்களும் அப்படியே
ஆனால் ஒரு வித்தியாசம்
விளைச்சல் உள்ளவரையும், மரங்கள் போசிக்கப்படுன்றன
பாதுகாக்கப்பபடுகின்றன
மலைநாட்டு நாங்களோ! விளைச்சல் தரும்போது
நாய்களாய், பேய்களாய் லயங்களில்
அடைக்கப்பட்டு கிடக்கின்றோம். - தடுப்பு
பண்ணைகளில் தவித்த யூதர்களைப்போல்
அதனால் நாங்களும் மரங்கள் அல்ல

எங்களுக்காக கேப்பார் யாரும் இல்லை
கேள்வி எழுப்புவதற்கும் யாருமில்லை
நாங்களும் மனிதர்கள் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போ!
நாங்களும் சாதனையாளர்கள் தான்
சாதிக்க பிறந்தவர்கள் தான்

நாங்கள் உருவாக்க போவதெல்லாம்
தேயிலை தோட்டத்தோடு எங்கள்
வயதை அளக்க முயலும் அறியாமை சட்டங்களை

நாங்கள் உருவாக்க போவதெல்லாம்
சாதி, இனம், வர்க்கம், அடிமை இல்லாத
புது மனித பூமியை

நாங்கள் உருவாக்க போவதெல்லாம்
றபர் மரம் என்று நினைத்த மனிதர் மத்தியில்
ஆலமரங்களாய் நிற்பதற்கு

நாங்கள் உருவாக்க போவதெல்லாம்
வைத்தியர், விஞ்ஞானி, ஆசிரியர், இஞ்சினியர் இன்னும்
பலர் எம்மத்தியிலும்

ஏன் எனில்!
உயர் மனித விடுதலைக்காய் நிற்கின்றோம்
நாங்கள்
உலகில் உயர் மனித இனமாய் உருவெடுத்து
அடிமையை ஒழுக்கப் போகின்றோம்
நாமும் மலைநாட்டு மக்கள்
இயற்கையில் இணைந்து வாழும்
உயர் மலையின் மனிதன்
ஒற்றுமையே பலம் என்று திறன்
உன்னால் முடியாதென்பது இல்லை
நாமும் மலை நாட்டு மக்கள் தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது ஒரு தொடர்கதை....

ச. காளிதாஸ்
சமூகவிஞ்ஞானபிரிவு
இரண்டாம் வருடம்

ஐந்து மணி ஆகிவிட்டால்
மணியோசை கேட்குமுங்க
அசந்து தூக்கி விட்டால்
பஸ் பிடிக்க முடியாதுங்க

ஆறு மணி ஆனவுடன்
நடப்பதற்கு ஆரம்பிப்போம்
பஸ் வண்டி வரும் வரை
பயணத்தை தொடர்ந்திடுவோம்

பயணம் தொடர்கிறது
முடிவென்று இல்லாமல்.....

சனக் கூட்டத்துல
நாங்களும் நின்றிருப்போம்
எங்களின் கால்கள் கூட
சிலருக்கு ஆசனமாய் இருந்ததுண்டு

பாதித்தூரம் வந்தது மே
பசியால் வயிறு கத்துங்க
பசியினை தீர்ப்பதற்கு
பாக்கெட்ல காசு இருந்ததில்ல

பயணம் முடிவதற்கு
ஒன்றரை மணி நேரமெடுக்கும்
டவுனுல நிற்கும் போது
எங்களின் கால் கடுக்கும்
அடுத்த பஸ் வருமுன்னு
அன்னாந்து நாங்க பார்ப்போம்
ஐந்து நிமிடம் என்று சொன்னால்
அரை மணி நேரம் ஆகிவிடும்

பள்ளிக்கு செல்வதற்கு
ஒன்பது மணி ஆகிவிடும்
வகுப்பறைக்கு சென்றவுடன்
ஒரு பாடம் முடிந்தவிடும்

பஸ்சுல ஏறும்போது
கண்டெக்டரு சீறுவாறு
சுணங்கி வந்தோமுன்னு
சேரு எங்கள பேசுவாரு

இருந்தும் பயணம் தொடர்கிறது...

ரெண்டு மணி வந்தவுடன்
நாங்கள் எல்லாம் போவோமுங்க
நான்கு மணி வரைக்கும்
கால் கடுக்க நிற்போமுங்க

வீடு திரும்பும் போதும்
கண்டெக்டரின் வார்த்தைகள் தாக்கும்
சீறி எழும்போது - பசி
எம்மை தடுக்கும்

கையிலிருக்கும் கடிகாரம்
எழு மணியென கத்தும்
நாங்களும் பயணத்தை முடிப்பதற்கு
பஸ் மணியை எட்டி அடிப்போம்

போய் வருவதாய்
அறுபது கிலோமீற்றர் ஆயிருச்சி - அதனால்
அன்றைக்கு பொழுது
எங்களுக்கு முடிஞ்சிருச்சி

இருந்தும் பயணம் தொடர்கிறது
முடிவொன்று இல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் ஓர் கண்ணோட்டம்

சண்முகம் காளிதாஸ்
சமூகவிஞ்ஞானப் பிரிவு
இரண்டாம் வருடம்

ஆசிரியன் ஆசிரியனாக பிறக்கின்றான்
அவன் உருவாக்கப் படுவதில்லை
- சோக்கிறற்றீஸ்

எந்தத் தொழிலும் அதனால் மனிதகுலம் நன்மையடையுமானால் மகத்தானதே கல்வியை வழங்கல் கற்றலை ஏற்படுத்துதல் ஆகியவற்றுடன் தொடர்புடைய ஆசிரியத்துவம் மேன்மையும் மகந்துவம் நிறைந்தது. மானுட சேவை பணி தொண்டு உள்ளிட்ட உயர் கண்ணியத்தொழில் என ஆசிரியத்துவம் குறிப்பிடுகின்றது.

கல்வியின் பிரதான நோக்கம் கற்போனைச் சான்றோன் ஆக்குதல் மனம் மொழி மெய்யினால் தூய்மையுடையோர்கள் சான்றோர், நடை, உடை, பாவனை, வாழ்க்கை முறைகளில் எளிமை, இனிமை, நடுநிலைமை, ஒழுங்கு ஆகியவற்றை பேணிவருபவர்கள் சான்றோர் எல்லாவித அபிவிருத்திக்கும் ஆதாரம் சான்றாமை.

"சானறோன் ஆக்குதல் தந்தைக்கு கடனே" என்று பண்டை தமிழ் மக்கள் கல்விபற்றி கொண்டிருந்த கருத்தை பொன்முடியார் எனும் புலவர் புறநானூற்றில் குறிப்பிட்டுள்ளார்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோ னெனக் கேட்ட தாய்"

என திருவள்ளுவரும் சான்றோனின் உயர்வினை கூறுகின்றார். தந்தையே, ஆசிரியனாகவும் முற்காலத்தில் விளங்கியுள்ளான். மேற்கூறப்பட்ட புறநானூற்று அடியில் வருகின்ற "தந்தை" எனும் சொல்லுக்கு ஆசிரியன் என்னும் பொருள் கொள்ள முடியும்.

மனிதர்களை சான்றோர்களாக விருத்திச் செய்கின்ற ஆசிரியப்பணி மகத்தானது புனிதம் நிறைந்தது, புண்ணியம் சார்ந்தது என்பதில் எத்தனை ஐயமும் இல்லை. ஆசிரியர்கள் ஆற்றுகின்ற பணி "மனித ஆக்கம்" ஆகும். நாளைய சந்ததியினருக்கு நல்லறிவு புகட்டி, திறன்கள், ஆற்றல்கள், வல்லமைகள் ஆகியவற்றை அவர்களிடம் விருத்திச் செய்து, நல்ல மனப்பாங்குகளையும் மனித விழுமியங்களையும் அவர்கள் உள்ளத்தில் உற்பத்தி செய்து அவர்களை மனிதர்களாக ஆக்குபவர்கள். ஆசிரியர்கள் ஏனையோரை உயர்வுக்கு இட்டுச் செல்வதால் ஏணி என்றும் அவர்களின் இலக்குகளை அடையச் செய்ய உதவி கரை சேர்ப்பதால் தோணி என்றும் ஆசிரியர்கள் வர்ணிக்கப்படுகின்றார்கள்.

ஆசிரியனைத் தெய்வத்துக்கு ஒப்பாக போற்றிய பெருமை தமிழ் மரபிற்குரியது. "எழுத்தறிவித்ததவன் இறைவன் என்றனர்", "குருவே பிரம்மா குருவே விஷ்னு குருவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேஸ்வரன் குருவே பரப்பிரம்மம்" என்று குருவை மிக உயர்வாக மதித்து வருவது இந்து தர்மம்.

இறைவன் உயிர்களுடன் ஒன்றாய், உடனாய், வேராய் நிற்பவன் இதனால் இறைவனுக்கும், உயிர்களுக்கும் இடையிலான தொடர்பு காட்டப்படுகின்றது. ஆசிரியனுக்கும் மாணவர்களுக்கிடையேயுள்ள உறவும் அவ்வாறே அமைய வேண்டும். ஆசிரியன் தனது தனித்துவத்தையும் மதிப்பையும் பேணும் அதேவேளை ஆசிரிய - மாணவ உறவு சிறப்பாகவும் அமையும்போதே ஆசிரியத்துவம் மகத்துவம் எய்துகின்றது.

சோக்றற்றீஸ் ஆசிரியர் பற்றி கூறும்போது "ஆசிரியர் என்போர் ஞான விளக்குகள், எவர் பணம் கொடுத்துக் கேட்டாலும் தம் அறிவை விற்பவர் ஞான விளக்குகள் அல்லர் அவர்கள் அறிவுப் பரத்தையர் ஆவர் என்கின்றார்.

ஆசிரியர் புகழுக்கும், பொருளுக்கும், பதவிக்கும் அன்றி அறிவிற்கும், வாய்மைக்கும், மனிதப் பண்புகளுக்கும் அஞ்சலி செலுத்துபவராக அமைதல் வேண்டும். மானுடம் ஆசிரியனுள் வீற்றிருக்க வேண்டும். ஆசிரியர்கள் பற்றிய இத்தகைய கருத்துக்கள் உலகில் வாழ்ந்த அனைத்து சமுதாயங்களிலுமே இருந்து வந்திருக்கின்றது. ஆசிரியர்பற்றி சிந்திக்கும்போது இத்தகைய கருத்துக்கள் உலகில் வாழ்ந்த அனைத்து சமுதாயங்களிலுமே இருந்து வந்திருக்கிறது. ஆசிரியர் பற்றிச் சிந்திக்கும்போது இத்தகைய நல்லாசிரியர் இலக்கணங்கள், பண்புகள் எல்லாம் நம்முன் தோன்றுகின்றன.

கல்வியலாளர் ரூசோ காலத்திலிருந்து ஆசிரியர், ஆசிரியத்துவம், ஆசிரிய வாண்மை என்பனப் பற்றி மேலும் விரிவுப் பெற்றும் அகலிப்பு அடைந்தும் வருகின்றன. ஆசிரியர் இன்று ஒரு முகாமையாளராக, வழிகாட்டியாக, நண்பராக, நல்லத் துணைவராக, நிபுணத்துவ ஆலோசகராக விளங்கி மாணவரின் முழுமையான உதவுபவராக அவரின் பொறுப்புகள் பெருகியுள்ளன.

"ஆசிரியர் எவரும் ஆசிரியராக பிறப்பதில்லை. அவர்கள் உருவாக்கப்படுகின்றார்கள் என்ற தற்கால கருத்துக்கமைய கல்விசார் அறிவு, தொழில்சார் பயிற்சி, மனப்பாங்கு, விழுமியங்களின் வளர்ச்சி மூலம் உருவாகும் ஆசிரியர்களாலேயே தற்காலத்துச் சமுதாயத்தினை எதிர்நோக்கும் சவால்களை எதிர்ந்து முகம் கொடுத்து வெற்றி கொள்ளக்கூடிய நற்குடி மக்களை விருத்தி செய்ய முடியும். ஆசிரிய வாண்மையின் விரிவினை இதிலிருந்து அறியலாம்.

இன்றைய நிலையில் "எழுத்தறிவிப்பது" மாத்திரம் ஆசிரியரின் பணியாக கொள்ளாது, "மாணவர்களின் தேவைகளையும், கல்வி நோக்கங்களையும் நிறைவு செய்யும் வகையில் முழுக்கல்விச் செயற்பாட்டையும் ஒருங்கிணைப்பவர் ஆசிரியர் என்று கல்வியலாளர்கள் கூறுகின்றனர். மேலும் அறிவு திறன்களை மாணவரிடம் விருத்தி செய்யும் அதேவேைள நல்ல மனித விழுமியங்களையும் அவர்களில் வளர்க்க வேண்டும் என்ற கருத்தும் வலுப்பெற்று வருகிறது கல்வியே சமூகத்தின் மிகச்சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பு ஆகும். அந்த வகையில் ஆசிரியர் சமூக பாதுகாப்பினையும் உறுதிபடுத்துபவராக உள்ளார்.

ஆசிரியத் தொழிலின் மகத்துவத்தை பேணுவதற்கு பின்வரும் கருத்துக்களை கவனத்தில் கொள்ளலாம்.

ஆசிரியர்கள் மனித குல மேம்பாட்டை ஆக்குபவர்களாகவும், புதியக்கருத்துக்களை வாழ்க்கையோடு தொடர்புபடுத்தியும் பொருத்தியும் காட்டும் ஆற்றல் பெற்றவர்களாகவும் நிகழ்காலத்தை உணர்ந்தவர்களாகவும் பண்டைய அறிவினைப்பக்குவப்படுத்தி கால உணர்வோடு நிகழ்காலத்திற்குரியயதாக்க கூடியவார்களாகவும், ஓரளவிற்கேனும் எதிர்காலம் எதிர்வு கூறக்கூடிய பண்பினரையும் விளக்குதல் இன்றியமையாதது. அல்பிரட் வைற்கெட் எனும் தற்கால அமெரிக்க கல்வியலாளர் மேற்போந்த கருத்துக்களை கூறியுள்ளார். ஆசிரியர்கள் தூரதிருஸ்டி, மானிட நேயம், மாற்றங்களுக்கு நெகிழ்ந்து கொடுக்கும் பண்பு உலகநோக்கு என்பவற்றை கொண்டிருக்க வேண்டும் என்று பேற்றம் றசல் கூறியுள்ளார்.

தானங்களில் சிறந்தது வித்தியாதானம். கொடுக்க கொடுக்க அதிகரிக்குமே தவிர குறையாது. கல்வி வழங்குதலை விளக்கேற்றல் என்பார் நாவலர் பெருமான். ஒரு விளக்கிலிருந்து பல விளக்குகள் ஏற்றப்படுவதுபோல ஒவ்வொரு ஆசிரியரிடமிருந்து பல அறிவுச் சுடர்கள் ஏற்றப்படுகின்றன.

"சொல்வாற்பனமும் அவதானமும் கல்விச் சொல்ல வல்ல

நல்வித்தையும் தந்தடிமைக் கொள்வாய்"

என்று "கல்விச் சொல்ல வல்ல" தான் கற்பிக்கும் திறனைத் தனக்கு நல்கும்படி புலவர் ஒருவர் வாணியை வேண்டுகின்றார்.

"அன்ன யாவானும் புண்ணயங்கோடி

ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்று மகாகவி பாரதியார் ஆசிரியத் தொழிலை வியந்து பாராட்டுகின்றார்.

ஆசிரியர் தொழிலின் மகத்துவம் பற்றிச் சிந்தித்த நாம், இக்காலத்தில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அழுத்தங்கள், நெருக்குதல்கள் பற்றியும் அறிந்திருக்க வேண்டியது அவசியம். ஆசிரியத்துவத்தை வானளாவ உயர்த்திவிட்டு ஆசிரியரின் நிலைப்பற்றி கவனத்திற்கு எடுக்காது விடுதல் நன்றன்று.

சமூக அமைப்பிலும் கல்வி அமைப்பிலும் தற்போது நிகழ்ந்து வருகின்ற மாற்றங்களின் விளைவாக ஆசிரியர்கள் பல அழுத்தங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியவர்களாகின்றனர். பின்வரும் ஏதுக்கள் காரணங்களாகலாம். ஆசிரியரின் பணிகள், கடமைகள், கூறுகள் பற்றிய தெளிவின்மையும் கருத்து முரண்பாடும், மிதமிஞ்சிய பணிச்சுமை, நிறுவன எல்லைகளுக்கூடான சிக்கலான தொடர்பாடல், சமூகத்தினால் விமர்சனத்துக்கு உள்ளாதல், கல்வித்திட்டமிடல், பாடப்பரப்பை தெரிவுச் செய்தல் பாடத்திட்டம் தயாரித்தலின் ஆசிரியரின் பங்கு பற்றல் இன்மையும் பணிப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரில் அவற்றை வகுப்பறையில் அமுலாக்கம் செய்யும்போது எழுகின்ற இடர்பாடுகளும், சமூக அந்தஸ்து குறைப்பாடு, குறைவான சம்பளம் மேலதிகாரிகளின் கெடுபிடிகள் என்ப அவற்றுள் சில.

இத்தகைய இடர்பாடுகளுக்குப் பரிகாரம் காணல் வேண்டும் அப்பொழுதுதான் ஆசிரியத்துவம் மதிப்பிற்குரிய ஒன்றாகும். உவப்பற்ற தொழில் நிலைமைகள் இனங்கண்டு, ஆசிரியர்கள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம்.

ஆசிரியத்துவம் ஓர் வாண்மை தொழிலா இல்லையா என்பதுபற்றி வாதங்களும் பிரதிவாதங்களும் நடைபெறுகின்றன. சட்டம், மருத்துவம், கணக்கியல் போன்று ஆசிரியத்தொழில் இல்லை என்றனர். அவர்களின் வாண்மைத் தொழிலுக்குரிய இலட்சனங்களைக் கூறி அவை பெரும்பாலும் ஆசிரியத்தோடு பொருந்துவதில்லை என்கின்றனர் இன்னொரு சாரார் வலிந்து பொருத்திக் காட்டி ஆசிரியத்துவம் வாண்மை தொழிலே என்று வாதாடுகின்றனர்.

இன்றைய நிலையில் கல்விப் பொறுப்பினை அரசு மேற்கொண்டிருப்பதாலும், ஆசிரியர்கள் அரச ஊழியர்களாக இருப்பதாலும் மேலிடங்களிலிருந்து வரும் பணிப்புரைகளை அப்படியே நிறைவேற்றுபவர்கள் ஆக விளங்குவதாலும், ஆசிரியர்கள் பல்வேறு வெளிச்சக்திகளின் செல்வாக்கிற்கும் நெருக்குதல்களுக்கும் இசைந்து கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டமையாலும் ஆசிரியத்துவம் தன்னாதிக்கத்தையும் சுதந்திரத்தையும் இழந்து நிற்கின்றது. வாண்மை தொழிலுக்குரிய ஏனைய இலட்சினங்களை ஆசிரியத்துவம் முழுமையாக பெற்றிருக்காவிட்டாலும் பெருமளவிற்கு கொண்டிருக்கிறது எனலாம்.

எவ்வாறாயினும் ஆசிரியர் தொழில் ஒரு வாண்மை தொழில் அந்தஸ்த்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே அதன் மகத்துவம் அங்கீகாரம் பெற்றதாக கொள்ளப்படும் என்று எண்ணுதல் அத்துணை பொருத்தமானது அல்ல ஆசிரியத்துவத்தைப் பிறிதொரு தொழிலின் நிலையில் வைத்து அதன் அந்தஸ்த்தை கணிப்பது சரியன்று. ஆசிரியத்துவம் தனித்துவமானது தன்னிகரற்றது அதற்கு வேறு அங்கிகாரம் தேவை இல்லை.

சமுதாயச் சிற்பிகளாகவும், அறிவொளி ஏற்றும் தீபங்களாகவும் விளங்கும் ஆசிரியர்கள் தாம் ஏற்றும் விளக்குகளால் மேலும் பல விளக்குகள் ஏற்றப்பட தூண்டுகோல்களாய் அமைந்தால் எதிர்காலத்தை ஏற்றமுறச் செய்யும் நல்லதோர் சமுதாயம் உருவாகும் என்பது வெள்ளிடை மலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகமும் மதுபானமும்

பீ. கோமதி
சங்கீதப் பிரிவு
இரண்டாம் வருடம்

இயற்கையின் இன்னல்களுக்கும்
இரும்பு இயந்திரங்களுடன்
மலையக மைந்தன் இயந்திரமாய்

தலையிலே கூடையும்
நிலையிலே மெய்யாக உழைத்தும்
மனதிலே மயானம்
மலைக்கைகளோ மதுகடை வியாபாரம்

மலையேறி கொழுந்தெடுத்தும்
படியேறி செல்ல அனுமதியில்லை
கணவனோ?
நிலைத்தடுமாறி தடியுடன்

பத்து பதினைந்து பெற்று விட்டு
பசியால் துடிக்கும் குழந்தைகள்
என் செய்வேன் என இடி கூடை
தாயின் தலையிலே

முடங்கி கிடப்பவர்கள் அனைவரும்
முடவர்கள் அல்ல
முன்னால் வந்தவர்கள் அனைவரும்
புத்திசாலியும் அல்ல

மலையக சமுதாயம் என்ன விகசிக்கும்
விட்டில் பூச்சிகள் தாம்
சாராய சாக்கடைகள் சாயமல்
சரித்திரம் படைக்க புறப்பட்டு வா
மைந்தா மலையக மைந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

- தமிழ்ச்சங்க கலை விழாவிற்கு வருகை தந்து விழாவை சிறப்பித்த பிரதம அதிதி அவர்களுக்கும்
- சிறப்பு அதிதி அவர்களுக்கும்
- கல்லூரியின் பீடாதிபதி அவர்களுக்கும்
- தமிழ்ச்சங்க பிரதம ஆலோசகர் அவர்களுக்கும்
- தமிழ்ச்சங்க பொறுப்பு விரிவுரையாளர்களுக்கும்
- போட்டி நிகழ்ச்சிகளை நடத்த உதவிய நடுவர்களுக்கும், இணைப்பாளர்களுக்கும், ஏனைய விரிவுரையாளர்களுக்கும்,
- தமிழ்ச்சங்க மலர் வெளியீட்டு விழாவிற்கான ஒத்துழைப்பை நல்கிய கல்லூரியின் பதிவாளர் உள்ளிட்ட கல்விசாரா உத்தியோகஸதர்களுக்கும்
- ஆக்கங்களை தந்துதவிய இரண்டாம், முதலாம் வருட ஆசிரிய பயிலுநர்களுக்கும்
- லயம் சஞ்சிகையை சிறப்பாக வடிவமைத்து தந்த Extreme நிறுவனத்தாருக்கும்
- மலர் வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்பித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும், கட்டுறுப்பயில்வு ஆசிரிய பயிலுநர்களுக்கும்

தமிழ்ச்சங்கத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை நவில்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமது வரலாறுகள் எல்லாமே ஒவ்வொரு கருத்து நிலைப்பட்ட கட்டமைப்பு ஆக்கங்களே (constructs), இவற்றினூடே தொழிற்படும் கருத்து நிலைகளையும் (ideologies) இந்தக் கருத்துநிலைகளின் பின்புலத்திலுள்ள சமூக, பொருளாதார உந்துதல்களையும் புரிந்து கொள்ளல் வேண்டும்.

இலக்கியமும், இலக்கிய வரலாறும் இவற்றுக்கான முக்கிய தளங்களாகும். நமது மாணவர்களிடத்தே இந்தப் பிரக்ஞை ஏற்படுத்தப்படுவது அவசியம். எனவேதான் பகுப்பாய்வு ஆக்கங்கள் (analytical works) அவசியமாகின்றன.

**கார்த்திகேசு சிவத்தம்பி**

07.11.1997

(தமிழில் இலக்கிய வரலாறு முன்னுரையிலிருந்து)

design & print by: extreme tel: 077 4631164, email: extremeads@sltnet.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org